சுவாமி சுத்தானந்த பாரதியார்

இயற்றியவை.

—::—

:: அன்பு நிலய வெளியீடுகள் ::

	ரூ.	அ.
யோக சித்தி	3	0
சிலம்புச் செல்வம்	1	12
கதை விருந்து	1	12
மஹாகவி காளிதாஸன்	1	4
திருக்குறளின்பம் (ராப்பர்)	1	4
ஷை (காலிகோ)	1	12
தியான மாலை	1	0
இளிச்சவாயன்	1	0
உடலுறுதி	1	0
திருநூல் அல்லது தூய வாழ்வு	1	0
வசந்த சுந்தரி (நாடகம்)	0	10
பக்திப் பரவசம்	0	10
அன்பின் அற்புதம் (நாடகம்)	0	10
புதுமையும் பழமையும்	0	8
புத்தர் கருணை (நாடகம்)	0	8
சிவாஸ்திரம் (நாடகம்)	0	8
இன்பமாலை (காலிகோ)	0	6
இன்று மனிதனும், இனிவரும் மனிதனும்	0	6
திருமணப் பாட்டு	0	4
பைந்தமிழ்ச் சோலை	0	4
பேரின்பம்	0	4
வரகவி தாகூர்	0	3
நாடகக் கலை	0	3
குழந்தையின்பம்	0	4
தரும ஸாதனம்	0	2½
பொதுநெறி உரையுடன்	0	2

	ரூ.	அ.
அன்பு நிலயம் (ராப்பர்)	1	8
ஷை (காலிகோ)	2	0
கல்விக் கதிர்	1	8
ஏழை படும்பாடு	1	8
ALWAR SAINTS	1	8
மஹாகவி தாந்தே	1	0
திருமூலர் திருமந்திரம் (ராப்பர்)	1	0
ஷை காலிகோ	1	8
முன்னேற்றப் பாடல்கள்	1	0
காலத் தேர் (ராப்பர்)	1	0
ஷை (காலிகோ)	1	4
அருட்சுடர் வள்ளலார் (ராப்பர்)	0	12
ஷை நீல அட்டை	0	14
ஷை (காலிகோ)	1	0
யோகத்தின் அடிப்படை	0	10
ஷை	1	0
கவிக்கதைகள்	0	10
தமிழ்க் கனல்	0	8
அன்பு வழி	0	6
மஹரிஷி தாயுமானூர்	0	4
அன்னை	0	4
ஹிந்தி அவசியமா?	0	4
சமய சாரம்	0	4
திருக்காட்சி	0	4
அன்புறுதி	0	4
கம்பச் சுவை	0	3
பராசக்தி அர்ச்சனை	0	3
சுத்த சமரஸ சன்மார்க்கம்	0	1

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras.- Editor, C.R. Srinivasan, B.A.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 10 5-4-'42 Price 2 Annas.



சென்ற வார நிகழ்ச்சிகள்

★

பிரதம மந்திரி பிரசங்கம்

பிரிட்டிஷ் தேசிய கன்ஸர்வேடிவ் சங்க வருஷாந்திரக்கூட்டத்தில் காக்ஸ்டன் ஹாலில் மிஸ்டர் சர்ச்சில் பேசியதாவது:

சென்ற ஒரு வருஷத்தில் தொடர்ந்தாற்போல் ராணுவத் தோல்விகளே ஏற்பட்டு வந்திருக்கின்றன. ஸிரெனேகாவிலிருந்து நாம் துரத்தப்பட்டோம். தூரக்கிழக்கில் புதிய மிகப்பலம் வாய்ந்த எதிரிகள் தாக்குகின்றனர். ஹாங்காங், மலேயா, சிங்கப்பூர், டச்சுத் தீவுகள் முதலியன வீழ்ந்து விட்டன. சிங்கப்பூரில் நம் சரிதத்திலேயே மிகப் பெரிய தோல்வி நேர்ந்தது, டச்சுத் தீவுகளில் ஜாவாவுக்கருகே நேசப்படைகள் முழுதும் நாசம் செய்யப்பட்டுள்ளன. பர்மாமீது படையெடுப்பு நேர்ந்திருக்கிறது. ரங்கூன் வீழ்ந்து விட்டது. மேல் பர்மாவில் மிகக் கடுமையான போர் நிகழ்கிறது, ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் ஆபத்து நேர்ந்திருக்கிறது. அட்லாண்டிக் கடற்போரும் ஐந்தாறு மாதங்கள் நமக்குச் சாதகமாயிருந்தபின், திரும்பவும் நமக்கெதிராக மாறியிருக்கிறது.

இப்படிப்பட்ட துக்ககரமான கதையால் பிரிட்டனிலும், நம் சாம்ராஜ்யம் முழுதிலும் வருத்தத்தையும் கவலையையும் உண்டு பண்ணியிருப்பதில் ஆச்சர்யமென்ன? ஆனால், இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தான் நாம் தைர்யத்துடனும் உறுதியுடனுமிருக்க வேண்டும்.

நம் தோல்விகளெல்லாம் முடிந்துவிட்டன என்று இன்று காலை நான் உறுதியளிக்க முடியாது.

பல வருஷங்களாக ஆயத்தம் செய்துகொண்ட இரு பலத்த எதிரிகளுடன் நாம் தகுந்த பலமின்றிப் போர் செய்துகொண்டிருக்கும்போதே 8 கோடி ஜனங்களுள்ள ஜப்பானும் நமக்கெதிராக யுத்தத்தில் குதித்தது. மேலும் பலத்த தாக்குதல்களைச் சமாளிக்க நாம் தயாராயிருக்க வேண்டும். ஆனால் 1942-ல் இடையிடையே வெற்றிகளும் ஏற்படுமெனத் தெரிவிக்கவிரும்புகிறேன்.

ஏனெனில் உற்சாகமளிக்கக்கூடிய சில விஷயங்களுமிருக்கின்றன. யுத்தத்தில் நம் நிலைமை மிக அபிவிருத்தி யடையந்திருக்கிறது. ஒரு வருஷத்திற்கு முன் நாம் தனியாக இருந்தோம். உலகில் மூன்று பெரிய பலமான தேசங்கள் நம் கக்ஷியில் சேர்ந்திருக்கின்றன. சென்ற யுத்தங்களிலெல்லாம் நாம் தனியாகவே போர்செய்து வெற்றிபெற்றிருக்கிறோம். இப்போது மூன்றுபலமான நண்பர்களும் சேர்ந்திருக்கையில் கேட்கவேண்டுமா?



ஒரு பெரிய பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்

விமானங்களை ஏற்றிக்கொள்ளும் ஒரு பெரிய பிரிட்டிஷ் யுத்தக் கப்பல். "எச். எம். எஸ். ப்யூரியஸ்" இரு புறமும் அலைகள் வந்து மோத, இந்தக் கப்பல் சமுத்திரத்தில் சஞ்சரிப்பதைப் படத்தில் காணலாம்.

இந்த யுத்தம் மிகக் கஷ்டமானது. உலகில் எல்லா மக்களின் வாழ்வும் இதனால் அடிப்படையாகப் பாதிக்கப்படுகிறது. உலகில் எல்லோருடைய பொருளாதாரங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை. வெற்றியும் தோல்வியும் எல்லோரையுமே பாதிக்கும். ஆதலால் நாம் ஒருவருக்கொருவர் உதவி புரிய வேண்டும்.

சலியாத உறுதியுடனும், தன்ருத தேசிய ஒற்றுமையோடும் நமக்கு நேரும் அபாயங்களையும் சோதனைகளையும் சமாளிக்க வேண்டும். தந்திரத்துடனும், அஞ்சா நெஞ்சுடனும் நாம் எதிர்க்கவேண்டும். அப்படிச் செய்தாலே 30 தேச ஐக்யப் பாதுகாப்பை நாம் தக்க மதிப்புடன் நடத்தக் கூடும்.

* * * *

அந்தமான் தீவு

சென்ற மாதம் 23-ந் தேதி ஜப்பானியப் படை ஒன்று அந்தமான் தீவை வசப்படுத்திக் கொண்டது.

இதற்குச் சில நாட்களுக்கு முன்பே தீவிலிருந்த நமது படைகள் வாபீஸ் பெறப்பட்டன.

ஸ்திரீகள் குழந்தைகள் உள்பட ஜனங்களில் பெரும்பான்மையோரும், ஏராளமான கைதிகளும் வெளியேற்றப்பட்டுவிட்டனர்.

* * * *

எகிப்து பார்லிமெண்டு தேர்தல்

எகிப்து பார்லிமெண்டு தேர்தலில் பிரதம மந்திரி நஹாஸ் பாஷாவைத் தலைவராகக் கொண்ட வாப்து கட்சி 216 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறது. மொத்த ஸ்தானங்கள் 260.

* * * *

ஜப்பானிய கப்பற்படை அதிகாரி கருத்து

ஜப்பானிய கடற்படையின் சார்பாக பேச உரிமை பெற்றிருக்கும் காப்டன் ஹிடோ ஹிராய்டி என்பவர் 'யோமூரி ஷிம்பன்' என்ற பத்திரிகையில் எழுதுவதாவது:—ஜாவா வீழ்ச்சிக்குப் பிறகு யுத்தப்போக்கு ஜப்பானுக்கு சற்று சாதகக் குறைவான முறையில் மாறியிருக்கிறது. தற்போது ஜப்பான் தற்காப்பு முறையைக் கையாளுவதாகவும் ஆங்கிலோ-அமெரிக்க நாடுகள் முன் சென்று தாக்குவதாகவும் தோன்றுகிறது. ஆனால் தற்காப்பு முறை வெற்றிக்கு வழி கோராது. ஜப்பான் எச்சமயத்தும் முன்னேறித் தாக்கும் முறையைக் கையாளவேண்டும்.

எதிர்காலத்தில் பெரிய ராணுவ நடவடிக்கைகளை எடுப்பதற்கான மூலஸ்தானமாகச் செய்வதற்காக இந்து மகா சமுத்திரத்தையும் ஆஸ்திரேலியாவையும் ஜப்பான் கைப்பற்றி தனது முன் சென்று தாக்கும் முறையை நீடித்துக் கையாளவேண்டும்.

இவ்வருஷம் பஸிபிக்கில் விரோதியின் கடற்படை வலுவடையும். அவர்களுக்குப் புதிதாக 10 விமானக் கப்பல்கள் ஏற்படும். அப்போது விரோதி ஹாவாய், நியூஜிலாந்து, சமோலா முதலிய விடங்களிலிருந்தும் இதர விடங்களிலிருந்தும் நம்மைத் தாக்க முயற்சி செய்யக் கூடும்: தென் பிரதேசத்திலுள்ள செல்வமனைத்தும் ஏற்கெனவே பூரணமாக ஜப்பானியர் வசமாகிவிட்டதாக ஜப்பானியர் சிலருள் ஒரு பொது அபிப்பிராய மிருந்து வருகிறது. இது பெரும் தவருகும். இந்த அபிப்பிராயத்தை உடனே மாற்றிக் கொள்ள வேண்டும். தென் பிரதேசத்திலுள்ள மூலப் பொருள்கள் ஒரு ஜப்பானியர் வசமிருந்த போதிலும் அவை அவர்களுக்குக் கிடைப்பனவாக இல்லை. இவற்றை ஜப்பான் பயன்படுத்திக்கொள்ள இயலும்போதே ஜப்பானின் நிலைமை பத்ரமாக இருக்கும். இதுவரையில் பல கஷ்டங்களையும் பிரச்னைகளையும் சமாளிக்க வேண்டும். போக்குவரத்துப் பிரச்னையைச் சமாளிப்பது முக்கியமாகும்.

* * * *

பஸிபிக் யுத்த சபை

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்ததாவது:—

பஸிபிக் யுத்தம் நடத்துவதில் யு. எஸ்ஸுடன் ஆஸ்திரேலியாவுக்கும் நியூஸிலாந்துக்கும் நேரடியான சம்பந்தமிருக்க வேண்டுமென்று டாக்டர் எவாட்டும் மிஸ்டர் நாஷும் கோரியிருக்கின்றனர். டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் நஷ்டமானதிலிருந்து மேற்கூறிய மூன்றுநாடுகளிடையே ஒத்துழைப்பிருந்து வருகிறது. ஆனால் பஸிபிக் யுத்த சபையென்பதாக வாஷிங்டனில் பெயரளவில் ஒன்று நிறுவ வேண்டு மென்று விரும்பினால் அவ்வாறு செய்யப்படும்.

ஐந்தாம் படையினர் போடும் திட்டத்தை அறிந்தோ, அறியாமலோ நடத்தும் ஆரும் படையினர் இருப்பது கண்டு நாம் எச்சரிக்கை கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஆரும் படையினர் யாரென நான் திட்டமாகக் குறிக்க விரும்பவில்லை. பொதுவாக பத்திரிகைகள் ரேடியோக்கள் விருந்து கோஷ்டிகள் முதலியவையில் இப்படிப்பட்ட ஆரும் படையினர் இருக்கின்றனர்.

* * * *

க்ரிப்ஸ் சிபார்சுகள்

இந்தியத் தலைவர்களுடன் விவாதிப்பதற்காக ஸர் ஸ்டேபோர்ட் க்ரிப்ஸ் கொண்டுவந்திருக்கும் பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபையின் யோசனைகள் பின்வருமாறு:—

இந்தியாவின் எதிர்காலம் சம்பந்தமாக அளிக்கப்பட்டிருக்கும் உறுதி மொழிகளை நிறைவேற்றுவதில் இந்நாட்டிலுள்ளவர்களும் இந்தியரும் கொண்டுள்ள கவலையைப் பிரிட்டிஷ் சர்க்கார் யோசித்ததன்பேரில் கூடிய சீக்கிரத்தில் இந்தியா சுய ஆக்ஷியை பெறுவதற்காக தாங்கள் உத்தேசித்திருக்கும் நடவடிக்கைகளைத் திட்டமாகவும், தெளிவாகவும் வெளியிட முடிவு செய்திருக்கின்றனர்.

புதிதாக 'இந்திய யூனியன்' என்று ஒன்றை ஏற்படுத்துவதே பிரிட்டிஷ் சர்க்காரின் நோக்கம். இது ஒரு குடியேற்ற நாடுபோலிருக்கும்; பிரிட்டனுடனும் இதர குடியேற்ற நாடுகளுடனும் இது இணைக்கப்பட்டிருக்கும்; மன்னருக்கு உட்பட்டதாகவே இருக்கும்; ஆயினும் எல்லா அம்சங்களிலும் இதர குடியேற்ற நாடுகளுடன் சம அந்தஸ்து கொண்டதாகவே இருக்கும்; உள்நாட்டு விஷயங்களிலும், வெளிநாட்டு விவகாரங்களிலும் எவ்விதத்திலும் இது கீழ்ப்பட்டதாக இராது.

பிரிட்டிஷ் ஸர்க்கார் முடிவு

ஆகவே பிரிட்டிஷ் சர்க்கார் கீழ்க்கண்ட தங்கள் முடிவை அறிவிக்கின்றனர்:—

1. யுத்தம் நின்றவுடனே இந்தியாவிற்காகப் புதிய அரசியல் ஒன்றைத் தயாரிக்கும் பொறுப்புடன் இந்தியாவில் ஒரு ஸ்தாபனம் அமைக்க ஏற்பாடு செய்யப்படும், இது தெரிந்தெடுக்கப்பட்டதாக இருக்கும்; இதை அமைக்கும் வகை கீழே தரப்பட்டிருக்கிறது.

2. இந்த அரசியல் நிர்ணய ஸ்தாபனத்தில் இந்திய சமஸ்தானங்கள் பங்கெடுத்துக் கொள்ள பின் வருமாறு வழி கோலப்படும்.

3. பின் வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி ஸ்தாபனம் தயாரிக்கும் அரசியலை அங்கீகரித்து அதைச் சட்டமாக்கப் பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

(i) பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள எந்த மாகாணமாவது புதிய அரசியலை ஏற்கத் தயாராக இல்லாவிடில் அது தற்போது அநுபவித்து வரும் அரசியல் நிலைமையிலேயே இருக்கலாம்; இந்த உரிமை அதற்கு உண்டு; பிற்பாடு ஒரு சமயத்தில் புதிய அரசியலில் அது சேர விரும்பினால் அங்ஙனமே செய்யலாம்.

புதிய அரசியலை ஏற்றுக்கொள்ள விரும்பாமல் ஒதுங்கும் மாகாணங்களுக்காக—அவை விரும்பினால்—'இந்திய யூனிய'னுக்கு உண்டானதும், கீழ்க்கண்டதைப் போன்ற நடைமுறை மூலம் முடிவு செய்யப்பட்டதுமான பூரண அந்தஸ்துடன் கூடிய புதிய அரசியல் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள பிரிட்டிஷ் சர்க்கார் அனுமதிக்கின்றனர்.

(ii) உடன்படிக்கையில் கையெழுத்திடும் விஷயத்தைப் பிரிட்டிஷ் சர்க்காரும் அரசியல் நிர்ணய ஸ்தாபனத்தினரும் நிர்ணயிப்பர். பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியருக்குப் பூரணமாகப் பொறுப்பை மாற்றும் எல்லா விஷயங்களும் உடன் படிக்கையில் அடங்கியிருக்கும். ஏற்கனவே பிரிட்டிஷ் ஸர்க்கார் வெளியிட்டுள்ள உறுதிமொழிகளுக்கேற்ப சமூக, மத சம்பந்தமான மைனாரிடிகளின் உரிமைகளைப் பாதுகாக்க வகை காணப்படும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அடங்கியுள்ள இதர ராஜ்யங்களுடன் சம்பந்தம் கொள்ளுவது குறித்து 'இந்திய யூனியன்' முடிவு செய்யும் பொறுப்பில் சர்க்கார் தலையிடமாட்டார்கள்,

அரசியலுடன் சேர விரும்பாத சமஸ்தானத்துடன் புதிய நிலைமையின் தேவைக் கேற்ப அதன் உடன்படிக்கை ஏற்பாடுகளைத் திருத்தி அமைப்பதுபற்றி அத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவது அவசியமாகும்,

அரசியல் நிர்ணய ஸ்தாபனம்

4, அரசியலை நிர்ணயிக்கும் ஸ்தாபனம் கீழ்க்கண்ட முறைப்படி அமைக்கப்பட வேண்டும், யுத்த முடிவுக்குள் இந்தியாவிலுள்ள முக்கியமான வகுப்புகளின் தலைவர்கள் வேறு முறையைக் கையாள விரும்பினால் அதே மாதிரி செய்யலாம்,

யுத்தம் முடிந்ததும் மாகாண சட்ட சபைகளுக்குத் தேர்தல் நடத்தவேண்டும்; இதன் முடிவு தெரிந்ததும் கீழ்ச் சபைகளின் (பிரதிநிதி சபை) அங்கத்தினர்கள் ஒன்று சேர்ந்து விகிதாசார பிரதிநிதித்துவ முறைப்படி அரசியல் நிர்ணய ஸ்தாபனத்துக்கு அங்கத்தினரைத் தெரிந்தெடுக்க வேண்டும், இந்த அரசியல் நிர்ணய ஸ்தாபனத்தின் அங்கத்தினர் தொகை கீழ்ச்சபையினரின் தொகையில் 10-ல் 1 பங்காக இருக்கவேண்டும்,

பிரிட்டிஷ் இந்தியாவைப்போலவே சமஸ்தானங்களும் ஜனத்தொகையை ஆதாரமாகக் கொண்டும் தங்கள் பிரதிநிதிகளை நியமிக்கும்படி கேட்கப்படும்: இந்தப் பிரதிநிதிகளுக்கு பிரிட்டிஷ் இந்திய அங்கத்தினர்களுக்குள்ள அதிகாரமனைத்தும் உண்டு,

5, இந்தியாவிற்குத் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை முன்னிட்டும், புதிய அரசியல் நிர்ணயிக்கப்படும் வரையிலும் இந்தியாவின் பாதுகாப்புக்கான பூரண பொறுப்பை பிரிட்டிஷ் சர்க்கார் தான் நிர்வகித்தாக வேண்டும். உலக யுத்தத்தை நடத்துவதில் இதையும் ஒரு



சென்ற ஞாயிற்றுக் கிழமை பம்பாயில் மிதவாதிகள் ஸர் சிமன்லால் ஸேதல் வாட் தலைமையில் கூடினர். ஸர் பி. பி. ஸிங்ராய், மஹாகனம் சாஸ்திரியார் முதலியோர் இந்திய நிலை பற்றிப் பேசினர். (பி. பி. ஏ.)

அம்சமாகவே அவர்கள் கருத வேண்டியிருக்கிறது. ஆனால் இந்திய மக்களின் அநுதாபத்தையும் ராணுவ பொருளாதார சாதனங்களையும் திரட்டும் பொறுப்பை இந்திய மகாஜனங்களின் ஒத்துழைப்புடன் இந்திய சர்க்காரே கவனிக்கவேண்டும்.

இந்தியா சாம்ராஜ்யம், ஐக்கிய நாடுகள் ஆகியவை சம்பந்தமான ஆலோசனைகளில் உடனேயும், பூரணமாகவும் பங்கெடுத்துக் கொள்ளுமாறு பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியத் தலைவர்களை அழைக்கின்றனர். இந்தியாவின் எதிர்கால சுதந்திரத்துக்கு அத்யாவசியமானதும், முக்கியமானதுமான பொறுப்பை நிறைவேற்றிவைப்பதில் அவர்கள் தீவிரமாக பங்கெடுத்துக் கொள்ள இயலும்.

காஷ்மீர மஹாராஜா காட்டும் வழி

காஷ்மீர மஹாராஜா பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ள ஒரு அறிக்கையில் பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் சர்க்கார் ஏகமனதாகச் செய்துள்ளமுடிவு இன்னதெனத்தெரியவில்லை. யுத்த நிலையை அனுசரித்தும், பிரிட்டிஷ் இந்தியாவின் கோரிக்கைகளை அனுசரித்தும் பிரிட்டிஷ் சர்க்கார் யுத்த காலத்தில் சம்பந்தப்பட்ட எல்லோருடைய நியாயமான உரிமைகளையும் மதித்தும் இப்போது ஏதோ ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். சமஸ்தானாதிபதிகளின் விஷயத்தையும் தற் சமயம் கவனிக்கவேண்டும். அவர்களும் இதில் முக்கியமாகச் சம்பந்தப்பட்டவர்களே: அவர்களையும் திருப்தி செய்யவேண்டும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு இந்த சமஸ்தானங்களுக்குள்ள சம்பந்தத்தைப் பற்றிச் சமீபத்தில் அதிகமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. அரசர் பெருமானின் இஷ்டப்படி அமைக்கப்படும் ஒரு இலாகா மூலம் தான் இதுவரை அந்தத் தொடர்பு இருந்துவருகிறது. சர்க்காரைச் சேர்ந்தவர்கள் தான் அந்த இலாகா கொள்கையை நிர்ணயிக்கிறார்கள்: ஆகவே அவர்கள் இந்தியாவில் அமைக்கும் ஒரு மத்ய சர்க்காருடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள சமஸ்தானாதிபதிகள் மறுக்க முடியாது. அந்த சர்க்கார் தங்களுக்கு நியாயம் சரிவர வழங்காது என நினைக்கவும் காரணமில்லை.

உலகத்தில் எந்த பாகத்திலும் இந்நாட்டினருக்குச் சமத்துவ உரிமை இருக்கவேண்டுமென்ற எண்ணம் சமஸ்தானாதிபதிகளுக்கு இருக்கவேண்டும். அவர்கள் தேசாபிமானிகளாகவும் நடக்க வேண்டும். அதுவே அவர்கள் கடமை.

சுயவாட்சி பெற்ற இந்தியாவில் ஒவ்வொரு அம்சமும் எல்லாப் பொறுப்புகளையும் வகிக்க சித்தமாகவிருக்க வேண்டும். ஆனால் அந்தந்த பிரதேசங்கள் அவர்களின் ஜனத்தொகைக்கும் மற்ற நிலைக்கும் ஏற்றவாறு சில பிரச்னைகளைக் கவனிக்கவேண்டியுமிருக்கும். அதை மறக்கக் கூடாது. இனி வரப்போகும் இந்தியாவின் புதிய வாழ்வில் பிரஜைகளின் நிலையை அபிவிருத்தி செய்ய சமஸ்தானாதிபதிகளுக்குள்ள உரிமை அப்படியே இருக்கவேண்டும். இந்த உரிமையைக் கவனிக்கையில், சமஸ்தானாதிபதிகள் அந்தஸ்து, பெருமை, முதலிய உரிமைகள் முக்கியமல்லாதனவாகும். சுதந்திரமே நமது குறிக்கோளாக விருக்கவேண்டும். அந்த சுதந்தரமும் எவ்விதத்திலும் கட்டுப்பாடுடையதாக விருக்கக்கூடாது. தேசத்தின் நலத்தை நெரிக்கும் நிர்ப்பந்தங்கள் எதுவும் கூடாது. இந்தியாவின் நன்மையை பாராமல் சாம்ராஜ்யத்திலடங்கிய மற்ற பிரிவுகளின் நன்மையை மட்டும் நாடும் சுதந்தரமாகவும் அது இருக்கக்கூடாது.



★

ஸர் க்ரிப்ஸ் காங்கிரஸ் மஹா சபைத் தலைவர் மௌலானா அபுல் கலாம் ஆஸாத்துடன் சம்பாஷித்தார். படத்தில் அவ்விருவரும் ஜனாப் அஸப் அலியும் நிற்கின்றதைக் காணலாம்.

★

சுதந்திர சாஸனம்

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது

★

ஸர் ஸ்டேபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவிற்கு வந்து ஒரு வாரம் ஆகிறது. கார்யத்தில் கண்ணாயிருந்திருக்கிறார். ஓய்வு ஒழிவு காணவில்லை. இரண்டு நாள் ராஜப்பிரதிநிதி மாளிகையில் தங்கினார். காணவேண்டிய அதிகாரி வர்க்கத்தை அங்கே கண்டு விட்டார். சுவாதீனத்தை நாடி பிறகு வெளியில் ஜாகையை அமர்த்திக்கொண்டார். இந்தியாவின் சார்பாகப்பேச உரிமையுள்ளோரையும். உரிமை கொண்டாடுவோரையும் இப்பால் கண்டு வந்திருக்கிறார். பார்க்க வேண்டியவர்களையெல்லாம் பெரும்பாலும் பார்த்தாகிவிட்டது. சந்தேகங்களைத் தீர்த்து முடிவு கட்டவேண்டியதுதான் பாக்கி.

திட்டம் உத்தியோக முறையில் திங்கள்கிழமைதான் வெளியாகிறது. கெட்டிக்காரர் அல்லவா! வந்தவுடனேயே பத்திரிகை நிருபர்களுடன் உறவு ஏற்படுத்திக்கொண்டார். ஒன்றுவிட்டு ஒருநாள் நிருபர்களைக் காணச் சம்மதித்தார். அரைகுறையாகக்கேட்டுக் கயிறு திரிக்க வேண்டாம் என்று வேண்டிக்கொண்டார். பேட்டிகளில் சமத்காரமாகப் பேசிப் போக்குக் காட்டினார். ரகஸியம் பலர் அறிந்தும் சகஜமாக வெளிவரவில்லை. முதலில் சற்று புரசல் கண்டது; பிறகு அதுவும் அடங்கி விட்டது. பேட்டியின் காலக்கணக்கையும் பேட்டிக்குப் பிறகு மூகமூட்ட மலர்ச்சியையுமே நிருபர்கள் குறிப்பிட்டனர்.

திட்டத்தை ஊன்றிக்கவனிக்கு முன் சில விஷயங்களை ஞாபகப்படுத்திக்கொள்வது உபயோகமாயிருக்கும் இந்தியா கோருவது என்ன? இடைக் காலத்தில் தேசீய கவர்ன்மெண்டு; நல்லது நிலைக்கவும் தீங்கைத்தவிர்க்கவும் அதிகாரம் வேண்டும். எதிகாலத்தில் சர்வ சுதந்திரம். இந்த நாடு இந்தியருடையது; இதில் அதிகாரம் செலுத்துவோர் இந்தியர்; இந்தியர் மனமொப்பித் தேவையான அரசியல் திட்டத்தை வகுத்துக் கொள்ளச் சுவாதீனம்; அதாவது சுயநிர்ணய சுதந்திரம். நாட்டிலே பல வகுப்புகள் உண்டே; பல கக்ஷிகள் முளைத்திருக்கின்றனவே; பல உரிமைகள் போராடுகின்றனவே; இவைகளைச் சமரஸப்படுத்த இயலவில்லையே: அதிகாரத்தை யாரிடம் ஒப்படைப்பது என்று அதிகாரத்தைத் தாங்குவோர் சொல்லி வந்தனர். விட்டுக் கொடுக்க மனமில்லை என்றனர் இந்தியர். அதிகாரத்தை மாற்றுவதாகச்சொல்லுங்கள்: மாற்றும் காலத்தையும் குறிப்பிடுங்கள்; அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் விஷயத்தை எங்களுக்குள் தீர்த்துக் கொள்ளுகிறோம் என்றனர் இந்தியர்.

என்றைக்கோ தீர்ந்திருக்க வேண்டிய பிரச்னை! கபட வைத்தியத்தில் குரங்குப்புண்ணாய் மாறிவிட்டது. வகுப்பு விஷம் உடலில் உரைக்க ஆரம்பித்துவிட்டது. வேற்றுமையை வளர்க்கும் சக்திகள் உரம் பெற்று விட்டன. நல்லதைச் சொன்னாலும் செய்தாலும் பொல்லாததாகவே படுகிறது. எதையும் வக்கிரமாகப் பார்ப்பதும் விபரீதமாகக் கொள்வதும் சர்வ சாதாரணமாகி விட்டது. இந்த மனோபாவம் மாறினாலொழிய நாட்டுக்கு விமோசனம் இல்லை. நாட்டிலே விழிப்பு ஏற்பட்டிருப்பது உண்மை; விளக்கம் காணாது, பெரிய பிரச்னைகளை பெரும் போக்காகப்பார்த்து குணம் அறியப் பக்குவம் வேண்டும். தலைவர்களுக்கு இன்று பெரிய பொருப்பு ஏற்பட்டிருக்கிறது. திட்டத்தில் உள்ள குணத்தைக் கிரகித்து குறைகளைக் கழிக்கவே முற்பட வேண்டும். சுயராஜ்யம் சுலபமாகக் கிட்டாது; சௌஜன்யமாகக் கிடைப்பதும் சிரமம். கால நிலையையும் தேச நிலையையும் அறிந்து பொருமையும் பொறுப்பும் காட்டவேண்டும். ஆங்கிலேயரைக் கண்டு இந்தியர் அஞ்சுகின்றனர்: ஹிந்துக்களைக் கண்டு முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர். பரதர்மம் பயாவஹம் என்று கீதையில் கூறப்பட்டிருக்கிறது. அன்னிய ஆட்சியின் விளைவே பயம். அதை விலக்கவேண்டியதே முக்கியம்.

திட்டத்தை இனி ஸ்தூலமாகக் கவனிப்போம். இன்றைக்கு அவ்வளவு தான் சாத்தியம். இடைக்கால ஏற்பாட்டில் ஒரு ஊனம் தான் குறிப்பிடக்கூடும். தேசீய கவர்ன்மெண்டை அமைக்க ஆக்ஷேபணையிருப்பதாகத் தெரியவில்லை. பாதுகாப்பு இலாகாவை மாத்திரம் ஒதுக்கி வைப்பதாக யோசனை. அதில் லாபமில்லை. இன்றைக்கு ராணுவமே பிரதானம். அது திறம்பட நிர்வகிக்கப்பட

வேண்டுமென்பதே இந்தியரின் கவலை. திறம்பட நடப்பதில் பிரிட்டிஷாருக்கும் சிரத்தையுண்டு: யுத்த முயற்சிக்கு விசை தீட்டவும் வலு ஊட்டவும் பாதுகாப்புப் பொறுப்பு இந்தியரிடம் இருக்க வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் அமைதியும் அபயமும் நாட்டிலே நிலைக்கும். இந்தியர் பொறுப்பேற்று யுத்த மந்திரி சபையுடன் உழைப்பதில் என்ன சிரமம்! நம்பிக்கை தான் வேண்டும். கிரிப்ஸ் இந்த விஷயத்தில் விட்டுக் கொடுக்க இயலும் என்றே எதிர் பார்க்கிறோம். மத்திய தேசீய கவர்ன்மெண்ட் ஏற்பட்டால் தொடர்ந்து மாகாண கவர்ன்மெண்டுகள் சுலபமாக அமைந்து விடும். இந்தப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்வதில் சிரமமில்லை.

எதிர் காலத் திட்டம் என்ன? யுத்தம் முடிந்ததும் மாகாணங்களில் தேர்தல் நடத்தப்படும். சுவாதீன அரசியல் திட்டம் வகுப்பதே தேர்தல் பிரச்னையாகும். திட்டத்தின் அஸ்திவாரம் பூரண அதிகாரம் மாற்றப்படுவது; குடியேற்ற நாட்டு அந்தஸ்து. மாகாணப் பிரதிநிதி சபையின் அங்கத்தினர் ஒரு ஓட்டர் ஜாப்தாவாகப் பாவிக்கப்படுவர்: அவர்கள் தங்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கினரைத் தேர்ந்தெடுப்பர்; விகிதாசாரத் தேர்தல் முறை அனுஷ்டிக்கப்படும். சமஸ்தானப் பிரதிநிதிகளும் ஜனத்தொகைக்குத் தகுந்த அளவு கலந்து கொள்வர். இப்படி அமைக்கப்படும் சுயநிர்ணயசபை அரசியல் திட்டம் வகுக்கும். வகுக்கப்படும் திட்டம் பிரதி மாகாண சமஸ்தான சபைகளிலும் அரங்கேற்றப்படும். சமஷ்டியில் சேர வாக்குக் கோரப்படும். சேரப்பிரியப்படாதவர்கள் விலகி நிற்கலாம்; நிர்ப்பந்தம் இல்லை. தாமதித்துச் சேரலாம்; ஆக்ஷேபணை இல்லை. திட்டத்தின் முக்கிய அம்சங்கள் இவை தான்.

சந்தேகங்கள் சில எழக்கூடியது சகஜம். முதலாவது அந்தஸ்தைப்பற்றி. கேட்டது பூர்ண சுயராஜ்யம்; கொடுப்பது குடியேற்ற நாட்டந்தஸ்து எனலாம். எதற்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் பிணைப்பு? சந்தேகம் பூர்வ பந்தத்தின் பிச்சம். உண்மையில் கேள்வியில் சாரமில்லை. குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்றால் சாம்ராஜ்யத்தின் உருப்பு என்று மாத்திரம் அர்த்தம் அல்ல. அரசியல் அகராதியில் அந்தச் சொற்றொடருக்குத் தனி அர்த்தம் அமைந்து விட்டது. காலம் செல்லச் செல்ல அர்த்தம் விசாலித்தும் வருகிறது. உள் நாட்டு விஷயங்களில் பூரண சுவாதீனம். வெளி விவகாரங்களில் ஓரளவு அன்யோன்யம். தொடர்பிலும் சுவாதீனம் உண்டு. இன்றைய யுத்தத்தில் அயர்லாந்தின் நடுநிலைமையே அதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணம். வார்த்தையில் முக்கியமில்லை. விஷயமே பிரதானம். நெருப்பு என்றால் வாய் வெந்துவிடுமா?

மாகாணங்களுக்குச் சமஷ்டியில் சேரச் சுவாதீனம் அளிப்பது உசிதமா? இது பசையுள்ள கேள்வி. இந்தியாவைத் துண்டிக்க இடம் கொடுக்குமோ என்ற அச்சம். அரசியல் பண்டிதர்கள் இதை மிகைப்படுத்தக் கூடும். பயப்படத் தேவையில்லை என்பதே நமது கருத்து. சுவாதீனம் மாகாணத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதேயொழிய சமூகங்களுக்கல்ல. மாகாணங்களின் முடிவு பொருளாதார நிலைமையையே பெரிதும் பொறுத்திருக்கும். சமஷ்டியில் சேருவதால் ஏற்படக்கூடிய லாபம் பிரத்யக்ஷம். வீம்புக்கு விலகி நிற்பதன் விளைவு விபரீதமாக முடியும். இன்றைய வாதமும் வேகமும் தணிந்தால் விசை எங்கேயிருக்கும் என்பதை அறிவது எளிது. மக்கள் ஏமாந்து விடமாட்டார்கள். உண்மையில் எது அவர்களுக்கு நன்மை பயக்கும் என்பதை எடுத்துக்கூற அவகாசம் இருக்கிறது. மிஞ்சிப்போகாது. பயப்படத் தேவையில்லை.

மொத்தத்தில் இன்றைய நிலைமையில் இந்தத் திட்டம் வரவேற்கக்கூடியதே. உள் விஷயங்களை அறிந்து சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் திட்டம் தயாரித்ததற்கு ஸர் ஸ்டேபோர்ட் கிரிப்ஸுக்கு நமது நன்றி உரித்தாகும். மிக ஆர்வத்துடன் இந்தப் பிரச்னையைத் தீர்க்க அவர் பிரயாசைப்பட்டு வருகிறார்; வெகு பொறுமையுடன் விஷயங்களை விளக்கி வருகிறார். வாதத்தில் வல்லவர்; பிடிவாதம் காட்டவில்லை. நியாயமான மாற்றுதல்களைச் சொன்னால் ஏற்றுக்கொள்வார். குணத்தை மதித்துக் குறையைத் தீர்க்க புத்தி பிரவர்த்திக்கவேண்டும். தலைவர்களின் பொறுப்பு மகத்தானது. சமயத்தை நழுவவிடாமல் உதிதமாக நடந்துகொள்வார்களென்றே எதிர்பார்க்கிறோம்.

நகரிலிருந்து புறப்பட்ட கோஷ்டி ★ ★ ★ ★ ★



ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸைப் பேட்டியிட்டுப் பேச ஜஸ்டிஸ் கட்சி கோஷ்டி டில்லிக்குப் புறப்பட்ட சமயம் எடுத்த படம். பெரியார் ஈ. வே. ராமசாமி நாயகர், குமார ராஜா ஸர் முத்தையா செட்டியார், ராவ் பஹதூர் எம். ஆர். சாமியப்பா முதலியார், ஸ்ரீ சௌந்திர பாண்டிய நாடார் ஆகிய தூதுக் கோஷ்டியினரைப் படத்தில் பார்க்கலாம்.

(பி. பி. பி.)

ஹிந்திக்கதை

மதபலி

★ சுதர்சன்

எழுதியது.

1400-வருஷங்களுக்கு முன் 'ஸிஸிலி' ராஜ்யம் ரோமர்களிடமிருந்தது, கிறிஸ்துவர்களாக மாறுவது அக்காலத்தில் பெருத்த தவறாக இருந்தது. திருடு, கொலை, பாதகம் முதலியனசெய்பவர்களுக்கு மன்னிப்பு உண்டு; ஆனால் கிறிஸ்துவர்களாக மாறியவர்களுக்கும், சுயம் கிறிஸ்துவர்களுக்கும் மன்னிப்பென்பதே கிடையாது, அரசாங்க உத்தியோகங்களுக்கு கிறிஸ்து மதத்தினர்களைக் கண்டதும் சுட்டுச் சாம்பலாக்கும்படி மேல் அதிகாரிகள் உத்திரவிட்டிருந்தனர். அப்படிச் செய்தாலும் 'ஏன்' என்று கேட்பதற்கு யாரும் கிடையாது. கிறிஸ்துவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு வெளிப்படையாக 'தாங்கள் கிறிஸ்துவர்கள்தான்' என்று சொல்ல சுதந்திரம் இல்லாததினால், அவர்கள் மறைவில் கூட்டம் கூடி, தங்கள் மதத்தைப் பற்றி பேசிக் கொண்டிருப்பார்கள். மனதில் ஆர்வமிருந்தது. ஆனால் அதை வெளியிட அவர்களுக்கு அதிகாரமில்லை. அப்படி அவர்களைப் பிடித்துக்கொண்டாலும் 'நாங்கள் கிறிஸ்துவர்கள் இல்லை' என்று பொய் சொல்லிவிட்டு ஓடி விடுவதில்லை. உயிருக்குப் பயப்படுவதுமில்லை. அந்தச் சமயத்தில் அங்குள்ளவர்கள், அவர்களின் மத அபிமானத்தைக் கண்டு பிரமித்துப் போவார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்களிடம் அகப்பட்டுக் கொண்டால் அவர்களிடம் நான் கிறிஸ்துவனில்லை' என்று சொல்லி விட்டால் உயிர் தப்பிவிடும். பிராணனை ரட்சிக்க எவ்வளவு அற்பமான விதிகள்! ஆனால் அவர்கள் மதத்தின் வீரர்கள்! உயிரைத் தியாகமும் செய்வார்கள். செய்யாமலுமிருப்பார்கள். அவர்களுடைய மண்டையில் தடிகொண்டு தாக்கி சுக்கல் சுக்கலாக உடைத்தாலும், தலை வேறு கால்வேறாக வெட்டி எறிந்தாலும், அவர்களுடைய விரோதியை அன்பு நிறைந்த பார்வையுடன் பார்த்து தம் மதத்தின் விதிகளை மீறாமல் புன்னகையுடன் உயிரை விடுவார்கள். அது தேகத்தின் பலத்தினால் ஏற்பட்டதல்ல; மனதின் மகத்தான ஆர்வத்தால் ஏற்பட்டது! உலகத்தின் விளையாட்டல்ல அது. மதத்திற்கான தியாகம்!

அந்தக் கண் மூடித்தனமும் அநியாயமும்அக்கிரமும் ஸிஸிலி ராஜதானி பூராவும் பரவியிருந்தது. ஆனால் அந்த ராஜ்யத்தில் கிறிஸ்துவர்களைத் தவிர மற்றவர்களுடைய அதிர்ஷ்டம் நன்றாகவேயிருந்தது. அது எப்படிப் பட்டது என்று நினைத்துப் பார்ப்பது கூட நல்லதல்ல.

அந்த ராஜதானிக்கு அச்சமயம் கைத்யானஸ் என்பவன் கவர்னராக இருந்தான்: அவனைப்போல் அக்கிரமமான கவர்னரை அதுவரை ஸிஸிலி ராஜ்யம் கண்டதே இல்லை. அவன் தன்னை இகழ்ந்தவர்களுடைய வீடு—வாசல், நிலம்—நீச்சு, இவைகளைப் பிடுங்கிக்கொண்டும், தன்னைப் புகழ்ந்தவர்களுக்கு வேண்டிய அளவு கொடுத்தும் வந்தான். ஜனங்கள் கஷ்டத்தால் வருந்திக்கொண்டிருந்தார்கள்: அவன் வயிறார உண்டு ஆடிப்பாடிக் களித்துக்கொண்டிருந்தான். மேலும் கிறிஸ்துவர்களுக்கு அவன் யமனாகவே இருந்தான். அவன் பதவிக்கு வந்ததும் தன் மதத்தினருக்கு விட்ட அறிக்கையில் "நான் முன்பாகவே நல்லத்தனமாகச் சொல்லி விடுகிறேன். நீங்கள் இவ்வளவு நாட்கள் வரை கிறிஸ்துவர்களுடன் கூடி வாழ்ந்து வந்தீர்கள். இனி அம்மாதிரி செய்தால் உங்களுக்குச் சரியான தண்டனை விதிப்பேன். மேலும் எனக்கு முன்னிருந்த கவர்னர் உங்களுக்கு அம்மாதிரி கட்டளையிடாமல் இருந்ததினால் நீங்கள் அப்படி நடக்க முடிந்தது. இப்பொழுது என் உத்திரவு 'அம்மாதிரி நடக்கக் கூடாது' என்று இந்த ராஜ்யம் கிறிஸ்துவர்களுக்கல்ல, நம் குலத்தவருக்குத்தான். நான் அக்தானியர்களின் புண்ணிய பூமியிலிருந்து அந்த பாபாத்மாக்களை ஒழித்து விடுவேன்!" என்று கண்டிருந்தது.

அது சாதாரண அறிக்கையல்ல: அக்தானியர்களைப்பற்றிய கோஷமாகவிருந்தது. கிறிஸ்துவர்கள் எல்லோரும் பயந்து விட்டார்கள். அப்பொழுது போலீஸ் அதிகாரிகள் நாலா பக்கங்களிலும் கிறிஸ்துவர்களை தேடித் திரிந்தனர். முதலில் ஒரு சில இடங்களில் தான் அந்த நெருப்புப் பற்றிக்கொண்டிருந்தது. பிறகு எல்லா இடங்களிலும் பரவிவிட்டது.

2

கைத்யானஸிடம் அதைவிட ஒரு பெரிய கறை இருந்தது-அதுதான் அழகுள்ள யௌவன மங்கையரைத் தேடித் திரிவது! அவன் கண்ணில் பட்ட எந்த அழகியும் பதிவிரதா தர்மத்துடன் இருக்கமுடியாது. அவன் எதிரில் அழகிகள் வருவதற்குப் பயப்பட்டார்கள். அவன் அந்த ராஜ்யத்தின் அதிகாரி. அவனிடம் குதிரைப் படை, போலீஸ் படை, ராணுவப் படை முதலியன இருந்தன.

இரவு வேளை! அக்தானியர்களின் வீதி முழுவதும் இருள் படர்ந்திருந்தது. ஆனால் கைத்யானஸின் அரண்மனை, யுவதிகளின் சந்திர பிம்பத்தினால் மின்னிக்கொண்டிருந்தது. கைத்யானஸ் மதோன்மத்தாக இருந்தான். அவன் மேலும் பல விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த அறையில் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டே "உண்மையைச் சொல்ல வேண்டும்! நான் இந்த நள்ளிரவு வேளையில் நம் ராஜ்யத்தில் உள்ள அழகிகளைவிட மிகுந்த அழகியை அடைந்திருக்கிறேனா இல்லையா?" என்று கேட்டான்.

எல்லா நண்பர்களும் தலையைக் கீழே சாய்த்துக்கொண்டு "அடைந்திருக்கிறீர்" என்றார்கள். ஆனால் ஸைலோனியஸ் மாத்திரம் மௌனமாக இருந்தான். அவன் மௌனமாகவிருப்பதைக் கண்டு கைத்யானஸுக்குக் கோபம் பொங்கியது. அவன் பெருத்த குரலில் "என்ன ஸைலோனியஸ், நீ மாத்திரம் ஏன் மௌனமாக இருக்கிறாய்? நான் பேசும் பேச்சில் உனக்கு விருப்பமில்லையா?" என்று கேட்டான்.

"எனக்கு உங்கள் பேச்சில் விருப்பமில்லை என்பதல்ல. நான் சொல்லுவது என்ன-வென்றால் உங்கள் எதிரில், இந்த தேசத்தின் அழகிகளெல்லாம் விட ஒரு அழகி இருப்பதாகச் சொன்னீர்களே, அவளையும்விட இந்த ஊரில் அழகி ஒருவள் இருக்கிறாள். ஆனால் அது இன்னும் கைப்படாத புஷ்பமாயிருக்கிறது. நக்ஷத்திரமிருக்கிறது, சந்திரனில்லை!" என்றான் ஸைலோனியஸ்.

"அப்படியானால் கிறிஸ்துவர்களில் அவ்வளவு அழகு படைத்தவள் இருக்கிறாளா? சந்திரனைப் பழிக்கும் அழகு படைத்தவளா?"

"ஆமாம்!"

"யார் அது?"

"அக்தா!"

கைத்யானஸ் திடுக்கிட்டான். அவன் அந்தப் பேச்சில் நம்பிக்கையே கொள்ளவில்லை.. அவனிடம் இருக்கும் அழகியைவிட அக்தா அதிசௌந்தர்யவதியாக இருப்பாள் என்று அவன் நம்பவே இல்லை. அவன் கையைத் தலையில் வைத்துக்கொண்டு "நான் இந்தப் பெயரை இதற்கு முன் எப்பொழுதும் கேட்டதே இல்லை. உண்மையாகச் சொல், அவள் அவ்வளவு அழகுபடைத்தவளா?" என்று கேட்டான்.

"போதும்! ஒன்றும் கேட்காதீர்கள். அவள் அக்தானியர்களுக்கு சந்திரனைப்போன்றவள்."

"எனக்கு அவளைத் தெரியவே தெரியாது."

"இந்தப் பெண்களெல்லாம் அவள் எதிரில் நிற்க முடியாது. அவள் இங்கிருந்தால் அரண்மனையே ஒரு தனி சோலையை அடைந்துவிடும்."

"அப்படியானால் அவளை நாளைக்கு இங்கு அழைத்துவா."

"நீர் பார்த்து ப்ரமித்து விடுவீர், பூவுலக மங்கையா அல்லது தேவமாதாவா என்று உங்கள் மனதில் கேள்வி பிறந்து விடும். ஆனால் அவள் லேசில் நம் கையில் அகப்படமாட்டாள். பெரிய குலத்தைச் சேர்ந்தவள். அப்பா அம்மா இருவரும் இறந்து விட்டார்கள். அவள் இப்பொழுது தனிமையாகத்தான் இருக்கிறாள். மேலும் பொன்னையும்-வெள்ளியையும் மண்ணுக்குச் சமமாக எண்ணுபவள்." என்றான் ஸைலோனியஸ்.

விஷயம் என்னும் நெருப்பில் எண்ணை விழுந்து விட்டது. கைத்யானஸ் சிறிது நேரம் மௌனமாகவிருந்து, பிறகு "நீயும் நானும் அவள் இருக்குமிடத்திற்குப் போகலாம்" என்றான்.

3

கைத்யானஸ் நண்பர்களை எழுந்து போகும்படி சைகை காண்பித்து விட்டு தன் கட்டிலில் போய்ப் படுத்துக்

"மத வீரர்களுக்கும் சாவும் வாழ்வும் ஒன்றுதான்" என்றாள் அக்தா மேலதிகாரியிடம்: கிறிஸ்தவர்களை உபத்திரவித்த நாட்டில், தான் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவள் என்பதை அவள் மறைக்கவில்லை: ஸிஸிலியில் கைத்யானஸ் ஆட்சி புரிந்தான்: மிகவும் கெட்டவன் அவன்: பெண்களிடம் மோகம் அதிகம் கொண்டவன்: அக்தாவிடமும் நெருங்கப் பார்த்தான்: அவள் அதற்கு இடம் தரவில்லை: எதற்கும் துணிந்திருந்தாள் அவள்: சம்மதம் காட்டாத அக்தாவை கைத்யானஸ் கட்டாயப்படுத்த முயன்றதையும் அவளது சகிப்புத் தன்மையையும் இவ்வாரம் வெளியாகும் பகுதியில் படிப்பீர்கள்.

* * * * *

மொழி பெயர்த்தவர்: வி. எஸ். வெங்கடேசன்

ஜன நாயகத்தில் நம்பிக்கை

வர்ஜீனியாவில் நடந்த ஒரு அமெரிக்க விழாவுக்கு பிரிட்டிஷ் ஸ்தானீகர் லார்ட் ஹாலிபாக்ஸ் வந்தபோது அமெரிகக ஜனுதிபதி மிஸ்டர் ரூஸ்வெல்ட் அவரை வரவேற்ருர்.

கொண்டான். ஆனுல் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. இரவு முழுவதும் அவனது கண்முன் அக்தாவின் முகார விந்தம் அவன் நினைப்பிற்கேற்ப தோன்றிக்கொண்டிருந்தது. எப்பொழுது பொழுது விடியும், எப்பொழுது அவளைப் பார்க்கலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தான். அன்று அவனுடைய பஞ்சணை உடம்பில் முள் கொண்டு தைப்பதைப் போல் இருந்தது. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். பல தடவை எழுந்து ஆகாயத்தையும் நக்ஷத்திரங்களையும் பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய ஆதிக்கத்தில் பகலை இரவாககவும் இரவைப் பகலாக்கவுமிருந்தால், அவன் நினைத்ததும் செய்து முடித்திருப்பான். ஆனுல் இயற்கை அன்னையின் வேலைகள் எப்பொழுதும் யாருக்காகவும் மாறி நடப்பதில்லையே!

கடைசியாகப் பொழுது விடிந்தது. கைத்யானஸ் தன்னுடைய ராஜ உடைகளைத் தரித்துக் கொண்டு குதிரையின் மீது ஏறி ராஜ மஹாலை விட்டு வெளியேறினுன். சிறிது நேரத்திற்குப் பிறகு அக்தாவின் வீட்டின் எதிரில் குதிரையை நிறுத்தி எப்படி அவளைப்பார்ப்பது என்று யோசித்துக்கொண்டிருந்தான். அவன் அந்த ராஜதானிக்கே முக்கியமான அதிகாரி. அக்தா அவனுடைய பிரஜை. அவன் அவள் வீட்டினுள் அனுமதியின்றியே போகலாம். அவளை வெளியில் கூட கூப்பிடலாம். இந்த விஷயங்களெல்லாம் அவனுக்குக் கஷ்டமானதல்ல. ஆனுல் அவன் திரும்பவும் என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தான்.

திடீரென்று கதவு திறந்தது. உள்ளிருந்து சந்திர வடிவமுடைய ஒரு யௌவன மங்கை கையில் பூக்கூடையுடன் வெளியே வந்தாள். அவள் முகத்தில் சந்திரனின் ஒளியைப்போலும். உதய சூரியனின் கிரணம் போலும், பூக்களின் இதழ் போலும் அழகு பிரகாசித்துக் கொண்டிருந்தது. கைத்யானஸ் அவளைப் பார்த்ததும் இவள் தான் அக்தா—ஆண்களின் மனதைக் கவரும் மங்கை—என்று தெரிந்து கொண்டான். அவள் சாதாரண பூவுலக மங்கையல்ல, தேவலோகத்துப் பெண் என்று நினைத்தான். அவள் அழகைக் கண்டு மோஹிக்காதவர்களும், அவளுக்காக உயிரைத் தியாகம் செய்யாதவர்களும் இருக்கவே மாட்டார்கள். அவள் எதிரில் தேவ மாது கூட அழகில் வெட்கமடைந்து விடுவாள். கைத்யானஸ் திடுக்கிட்டு அப்படியே நின்று விட்டான். அவனுல் அவள் முன்பு போய் நிற்கக்கூட முடியவில்லை. மேலும் அவளுடன் பேச நினைத்தான். அதற்காக தன் மனதை எவ்வளவோ திடப்படுத்திக் கொண்டான்—ஆனுல் அவனுல் எதுவும் செய்ய முடியவில்லை. அவன் ஒரு விஷயத்தில் வெற்றியடைய வந்தான். ஆனுல் அவன் அதன் முன் தோற்று விட்டு அரண்மனைக்குத் திரும்பினுன்.

கைத்யானஸுக்கு அவளைப் பார்த்த பிறகு எந்த வேலையிலும் புத்தி ஓடவில்லை. அடிக்கடி அவள் முன்வருவதும், பேச முடியாமல் தடுமாறி பலமுறை தோற்றுத் திரும்புவதும் அவனுக்கு சகஜமாகி விட்டது. அவன் இரவும் பகலும் அவள் மீதே நினைவாக இருந்தான். அவளைத் தான் அடைந்து விட வேண்டும் என்று நினைத்து அவள் வீட்டின்முன் சென்ருன். ஆனுல் அவளை அடைந்து அரண்மனை திரும்பாமல், மனோவியாதியைப் பெற்றுக்கொண்டு திரும்பினுன்.

ஒரு நாள் ஸைலோனியஸ் "உங்களுக்கு என்ன நேர்ந்தது? நீங்கள் முன்போல இல்லையே!" என்று கேட்டான்.

கைத்யானஸ் தடைபட்ட குரலில் "ரொம்பப் பெரிய மனிதன்! நீயே நெருப்பை மூட்டிவிட்டு, நீயே அதைக் கண்டு விளையாடுகிருயே. அப்படிச் செய்தால் அதன் புகை எங்கே போகும்?" என்று கேட்டான்.

ஸைலோனியஸுக்கு அன்று நடுராத்திரி பேசிய விஷயம் நினைவிலில்லை. அதனுல் அவன் பிரமித்து "என்ன நீங்கள் சொல்லுவது எனக்கு ஒன்றும் ஞாபகமே இல்லை" என்ருன்,

"அப்படியானுல் நீ அதை அடியோடு மறந்து விட்டாயா?"

"இப்பொழுது என்னவென்று உங்களுக்குச் சொல்லுவது?"

"அன்று இரவு நீ இந்த ஊரில் ஒரு அழகிய மங்கை இருப்பதாக எல்லோர் எதிரிலும் சொன்னுயே"

ஸைலோனியஸ் சிறிது நேரம் யோசித்து விட்டு பிறகு தலையை அசைத்து "நானு சொன்னேன்?" என்று கேட்டான்.

"ஆமாம். நீதான் சொன்னுய்!"

"என்ன ஆச்சரியமாக இருக்கிறது. எனக்குக் கொஞ்சம்கூட ஞாபகமில்லை"

"நீ அவளுடைய பெயரைக் கூடச் சொன்னுய்"

"என்னவோ இருக்கலாம்! அவளுடைய பெயர் என்ன?"

கைத்யானஸ் "சரி போ!" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே "அக்தா!" என்ருன்.

ஸைலோனியஸ் திடுக்கிட்டு "பிரபு, சாராய போதையில் இருந்தேன். ஆனுல் அப்படியிருந்தும் பெயரைமட்டும் சரியாகத்தான் சொல்லியிருக்கிறேன். அவளைப்போல் அழகுடையவள் இந்த ஸிஸிலியிலேயே கிடையாது, அழகி என்ருல் சந்திரபிம்பம் தான். நீங்கள் ஒரு முறை பார்த்தால் தெரியும்" என்ருன்.

"நான் பார்த்தேன், நீ சொன்னது சரிதான்"

"நாள் அவளைப்போல் அழகுடையவளை என் ஆயுளில் பார்த்ததேயில்லை"

"இப்பொழுது என் கண்கள் அவளை மறக்கமாட்டேன் என்கின்றன" என்ருன் கைத்யானஸ்.

"நீங்கள் உத்திரவு கொடுத்தால் வந்துவிடுவாள். உங்களுடைய பேச்சை அவள் எப்படித் தள்ள முடியும்? பார்க்கப் போனுல் அவள் உங்களுடைய பிரஜை"

"நீ என் மனதில் உள்ளதை அறியவில்லை. நான் அவளை மணக்க எண்ணுகிறேன்"

"பெருத்த சந்தேகமான விஷயம். அப்படி அவள் சம்மதித்து விட்டால் அவளே உட்கார்ந்து ராஜ்யத்தை ஆளுவாள்"

"நீ ஒரு வேலை செய். அவள் என்னைக் கண்டு பயப்படுகிருள். யாராவது ஒரு பெண்ணைப் பிடித்து அவள் மூலமாக ஏற்பாடு செய்துவிடு. எதுவரை அவளுடைய பயம் போகாதோ, அதுவரை நம் காரியமும் நடக்காது"

"அப்படிச் செய்து முடிக்கக் கூடிய பெண் யார் இருக்கிருள்?"

"அதைக்கூட நானே காண்பிக்க வேண்டும். அப்ரோடேஷியா இருக்கிருளே!"

ஸைலோனியஸ் எகிறிக் குதித்து ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு "நன்ருக யோசித்துச் சொன்னீர்கள். இனி எப்படியாவது அவளை உங்களிடம் சேர்த்து விடுகிறேன். அப்ரோடேஷியா எப்படியாவது காரியத்தை முடித்து விடுவாள்" என்ருன்.

அதன் பிறகு ஆறுமாதங்கள் கடந்தன. கைத்யானஸ் பலவித தந்திரங்கள் செய்து பார்த்தான். ஒன்றும் பயன் படவில்லை. கடிதம் எழுதினுன், தின்பண்டங்களையும் துணிமணி முதலிய பட்டாடைகளையும் அனுப்பினுன். பலவிதமாக நயந்தும் பயமுறுத்தியும் சொன்னுன்: ஆனுல் அவள் எதற்கும் அசையாமல், "நான் அவனைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன்" என்று சொல்லி விட்டாள். ஆனுல் அவனும் அத்துடன் விட்டுவிடவில்லை. முடிவில் காதலாக இருந்தது விரோத பாவத்திற்கு வந்தது. கைத்யானஸ் அவ்வூர் சர்வாதிகாரி. அவன் நினைத்தால் அவளைப் பலவந்தம் செய்யலாம். மேலும் போதாதற்கு அவள் கிறிஸ்துவமதத்தினள். அதனுல் அவளை பலாத்காரம் செய்வது அதிக கடினமானதில்லை.

இந்தியா கவர்ன்மேண்டில் வைத்திய பட்டமும் ஸன்னதும் பெற்ற வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical Dress)

மஹா பில்வாதி லேகியம்

பித்தம், வாந்தி, அன்னத்துவேஷம், அஜீர்ணம், உப்புஸம், புளியேப்பம், தலைச்சுற்றல், பித்த மயக்கம், பித்த வாயு, கீல்பிடிப்பு, பலஹீனம், மலச்சிக்கல் இவைகளை தக்ஷணமே கண்டித்துவிடும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூ. 3 வி. பி. வேறு.

ஸித்த மகரத்வஜம்

தங்கம் சேர்ந்த தாதுபுஷ்டி நர்வைன் டானிக். 30 மாத்திரைகள் சீசா 1-க்கு ரூ. 5. வி. பி. வேறு.

ஆனந்த படை நிவாரணி

இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பிவராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணு 12. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

அழகு, ஆரோக்யம், ருசி, ஸுவாஸனை இவைகளை அளிக்கும், உயர்த்தர பற்பொடி இது ஒன்றுதான். எங்கும்கிடைக்கும், கேட்லாக் இனும்.

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மைலாப்பூர் : : மதராஸ்.

நவநாகரீகம்

ஒரு அலங்காரம்

காசினி எழுதியது

* * * 'முந்தா நாள் நீங்கள் கிளப்புக்கு வந்திருந்தீர்களோ?' என்று நளினுதேவி கேட்டாள்.

'வந்திருந்தேன்: என்ன விசேஷம்?' என்றேன்

'லேடி சுந்திராச்சாரி ஒரு சிநேகிதியையும் கூட அழைச்சுக் கொண்டு வந்திருந்தாளே! அவள் கட்டி இருந்த புடவையை கவனித்தீர்களோ? இது தான் கேட்டேன்!' என்ருள் நளினுதேவி.

'யாரைச் சொல்லுகிறீர்கள் இருபத்தி ஐஞ்சு இருபத்தாறு வயசுக்கு உள்பட்ட ஒரு பெண் வந்திருந்தாளே? அவளையா? அவள் லேடி சுந்திராசாரியின் பெண் வயசு தானே இருப்பாள்? அவள் எப்படி லேடி சுந்திராசாரியின் சிநேகிதியாக இருக்க முடியும்?' என்று பங்கஜம் ஆக்ஷேபித்தாள்.

'சிநேகிதத்துக்கு ஒத்த வயசு வேண்டும் என்ற அவசியம் இல்லையே? ஆனுல் யசோதை லேடி சுந்திராசாரியின்பெண்ணுடைய சிநேகிதி தான்; அவளுடைய சிநேகிதி இல்லை! என்றேன்.

'அவள் கட்டி இருந்த புடவை நன்ருக இல்லையா?' என்று நளினு தேவி தொடர்ந்து கேட்டாள்.

'அவள் உடை, அலங்காரம் எல்லாம் ஒத்துத்தான் இருந்தது!'

'அவள் என்ன அப்படிப் புதிய தினுசில் அலங்காரம் செய்துகொண்டிருந்தாளா? நீங்கள் இரண்டு பேரும் விழுந்து விழுந்து மெச்சுகிறீர்களே?' என்ருள் மாலினி.

'புதிய தினுசில்லை; பழைய தினுசுதான்!' என்று நளினுதேவியும்:—'அப்படியும் சொல்விட முடியாது; இரண்டும் கலப்பு தினுசு!' என்று நானுமாகச் சொன்னேம். பிறகு அந்த அலங்காரத்தை வர்ணிக்கும் வரையில் மாலினி என்னை விடமாட்டேன் என்று விட்டாள்.

யசோதா ஒரு மல்லிகை மொக்குப் போட்ட புடவை கட்டி இருந்தாள். புடவையின் வர்ணம் ஒருவித மங்கலான மஞ்சள் நிறமாக இருந்தது. கூரை முக்கால் முழ அரக்குக் கரை. இதுவும் அப்படி புதுப் பள

பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் புத்திரி

பிரதம மந்திரி மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலின் இரண்டாம் புத்திரியான ஸாரா சர்ச்சில் யுத்தத்தில் உதவ முன்வந்திருக்கிருர். இவருககு வயது 27 ஆகிறது. இவர் நடிப்புத் தொழிலை இதுவரை மேற்கொண்டிருந்தார். இவரது கணவன் மிஸ்டர் விக் ஆலிவரும் நாடக மேடையிலும் ரேடியோவிலும் பிரசித்தி பெற்றவர். படத்தில் இந்த தம்பதிகளைப் பார்க்கலாம். (இ. என். பி.)

அவள் அநாதரவாக பரந்த வெளியில் வைக்கப்பட்ட விளக்குபோலிருந்தாள். அப்படிப் பட்ட விளக்கு புயல் காற்றின் முன் நிற்க முடியுமா?

4

திடீரென்று ஒரு நாள் அக்தா சிறை பிடிக்கப்பட்டாள். அவ்வூர் ஜனங்கள் தடுமாறிவிட்டனர். அக்தா என்ன குற்றம் செய்தாள் என்பது யாருக்கும் தெரியாது. அவ்வூரில் உள்ள பெரும்பாலானவர்கள் நியாய ஸ்தலத்திற்கு வந்து கூடினார்கள். அக்தா அந்த ஊருக்கே ஒரு அழகி. அவள் யாருக்கும் கெடுதல் செய்யமாட்டாள். யார் மனதையும் நோக வைக்க மாட்டாள். ஏழை முதல் பணக்காரர்வரை அவள் மேல் அதிக அன்புடன் இருந்தார்கள். அதனால் அவளுக்கு விரோதி என்பவனே இல்லையாது. அவளுடைய கைத்தைக் கண்டு ஜனங்கள் ரத்தக் கண்ணீர் வடித்தனர். ஆனால் அவர்களால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

அக்தா நியாயஸ்தலத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டாள். கைத்யானஸ் அக்தாவைப் பார்த்து "நீ யார்? உன் அப்பா அம்மா யார்? உனது மதம் என்ன?" என்று கேட்டான்.

நியாய ஸ்தலத்தில் கூடியிருந்தவர்கள் அப்படியே பிரமித்து விட்டார்கள். மேலும் அவர்கள் 'அக்தா கிறிஸ்துவ மதத்தினள் அல்ல; அப்படி அவள் கிறிஸ்துவளாக இருந்தால் கட்டாயம் பிழைக்கமாட்டாள். கசாப்புக் காரனைப் போன்றவன் கைத்யானஸ். இரக்கம் என்பதே அவனுக்கு இல்லையாது' என்று நினைத்தார்கள். எல்லோருடைய பார்வையும் அக்தாவின் மீது இருந்தது. அவர்கள் மனதில் கவலையும் ஏக்கமும் அளவுக்கு மிஞ்சி குடிகொண்டிருந்தது.

அக்தா தலை நிமிர்ந்து கைத்யானஸைப் பார்த்து கம்பீர பாவத்துடன் "என் பெயர் அக்தா. என்னுடைய தாய் தகப்பனர் அக்தாவின் தேசத்தவர்கள். நான் கிறிஸ்துவ மதத்தினள்" என்றாள்.

கைத்யானஸின் எண்ணம் ஒருவிதமாகப் பூர்த்தியாகிவிட்டது. இனி அவள் எங்கே தப்பிப் போவது?

"இந்த ராஜ்யத்தில் உங்கள் மதத்தவர்களுக்கு மரண தண்டனை கொடுப்பது என்று உனக்குத் தெரியாதா?" என்று கைத்யானஸ் கேட்டான்.

அக்தா களங்கமற்ற பாவத்துடன் "எனக்குத் தெரியும்!" என்றாள்,

"மேலும் நீ கிறிஸ்துவ மதத்தினள் என்று ஏன் சொல்லுகிறாய்? இதன் முடிவு என்னவென்று தெரியுமா?"

"எல்லாம் தெரியும். நான் முட்டாள் அல்ல. ஆனால் நான் என்ன செய்வது? மதத்தை உதறித் தள்ளுவது மிகவும் கடினமான காரியம். உயிரைத் தியாகம் செய்தாலும் செய்வேன், மதக் கோட்பாட்டைவிட மாட்டேன்"

"மரணத்தின் அழைப்பு உன் எதிரில் வந்தும் நீ உன் புத்தியை மாற்றிக் கொள்ளமாட்டாயா?"

"அதனுடைய பரிட்சையும் நடக்கட்டும். உயிரைத் தியாகம் செய்ய எனக்குச் சக்தியில்லாவிட்டால் நான் 'கிறிஸ்துவ மதத்தினள்' என்று சொல்லவும் யோக்யதையற்றவள்."

"நீ இப்பொழுது உயிருடன் வாழ எண்ணுகிறாயா அல்லது சாக விரும்புகிறாயா? யோசித்துப் பதில் சொல்"

"யோசித்தாகிவிட்டது. மத வீரர்களுக்கு வாழ்வும் சாவும் ஒன்றும் தான்!"

கைத்யானஸ்"க்குக் கோபம் அதிகரித்தது. அக்தாவின் சொல் அம்புபோல் இருந்தது. அதில் எவ்வளவு இகழ்ச்சியான சொல், எவ்வளவு அவமானம்! கைத்யானஸின் மனதில் அவ் அம்பு போல் தைத்தது. அவன் கோபத்தால் உதட்டைக் கடித்துக்கொண்டான். அவன் சட்டென்று புரூஷர்களைப்பார்த்து "ஜயிலுக்கு இழுத்துப் போங்கள். நானே விசாரிக்கிறேன்" என்றான்.

ஊர் முழுவதும் பயம் குடிகொண்டது. 'இது நியாயமில்லை, அநியாயம். எவ்வளவு நல்ல பெண்! அவளைப் பார்த்தவுடன் கண்கள் ஆனந்தத்தில் பிரகாசிக்கின்றன. அவள் பேசுவது முத்து போலிருக்கிறது. அவளுக்கு மரண தண்டனையா கொடுப்பான்?' என்று ஜனங்கள் கும்பல் கூடிப் பேசிக் கொண்டார்கள்.

இரவு அனைவரும் தூங்கிவிட்டார்கள். கைத்யானஸின் அரண்மனை முழுவதும் இருள் சூழ்ந்து கொண்டது. அவன் ராஜ மஹாலை விட்டு சிறைக் கூடத்திற்குச் சென்றான். அங்கு அவன் வாழ்க்கையின் இன்பம், ஆத்மாவின் ஆனந்தம் எல்லாவற்றையும் அடைத்து வைக்கப்பட்டிருந்தது. அவனைப் பார்த்தும் சிறை அதிகாரி கதவைத் திறந்துவிட்டான். அவன் உள்ளே போய்க்கொண்டே சிறை அதிகாரியிடம் "நான் அக்தாவைப் பார்க்கப் போகிறேன்" என்றான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு கைத்யானஸ் அக்தாவின் சிறைக் கண்டிலே இருந்தான். அந்தச் சமயம் கோமளாங்கியான அக்தா தரையின்மீது படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் கவலையோ பயமோ எதுவும் தென்படவில்லை. ஆடை கிழிந்து அழுக்குப் படிந்திருந்தது, ஆனால் முகத்தின் களையோ ராஜகுமாரி போல் இருந்தது. அவள் தேகத்தை அந்தத் துணியால் சரியாக மூடிக்கொள்ளக் கூட முடியவில்லை. கைத்யானஸ் சிறிது நேரம் அவள் முகத்தைப் பார்த்திருந்து விட்டு, பிறகு அவள் அருகில் சென்று உட்கார்ந்து தலையை மெதுவாகத் தடவிக் கொடுத்துக் கொண்டு, அன்பு நிறைந்த குரலில் "அக்தா!" என்றான்,

அடுத்த இதழில் பூர்த்தியாகும்.

இலவசம் ! இலவசம் !! இலவசம் !!!



படத்திலுள்ளதுபோன்ற அமைப்பு. உண்மை ரிவால்வரைப்போலிருப்பதுடன் 15 அவு. எடை 7'' நீளம். 6 ரவைகளை சேர்ந்தாற்போல் சுடலாம். இதன் சப்தத்தால் அனைவரையும் விரட்டலாம். திருடர்கள், விரோதிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள சிறந்தது. நெ. 7777, 30 ரவைகளுடன் ரூ. 4/8 நெ. 8888, 45 ரவைகளுடன் ரூ. 5/13. நெ.1111, 55 ரவைகளுடன் ரூ. 6/8. அதிகப்படி 1000 ரவைகள் ரூ. 3/- பெல்டுடன் கேஸ் ரூ. 1/8. பிஸ்டல் ஆயில் அணு 6. இலவசம் : ஒரு அழகிய மியூட் கை கடியாரம், ஒரு தோலா ''பாரிஸ் நியூகோல்ட்'' ஒவ்வொரு பிஸ்டலுடனும் இனாமாகக் கொடுக்கப்படும். இவை உண்மை தங்கத்தைப்போலிருப்பதுமட்டுமின்றி, கம்பிகளாகவும் இழுக்கலாம், பிளேட்டுகளாகவும் அடிக்கலாம், எல்லாவித நகைகளும் செய்யலாம். குறிப்பு :—அங்கீகரிக்கப்படாவிடில் பணம் வாபீஸ் என்ற உத்திரவாதத்தின் கீழ் விற்கப்படுவன. 2 பிஸ்டல் வாங்குவோருக்கு 2 அழகிய மியூட் கை கடியாரமும், 2 தோலா ''பாரீஸ் நியூ கோல்ட்''டும் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் இலவசம்.

இந்த குறைந்த கட்டணங்கள் வாபீஸ் பெறுமுன் எழுதுங்கள்.

AMERICAN CORPORATION
(S. M. W.) DINA NAGAR (PUNJAB)
(B. P. S.)

41 வருட அனுபவம் உள்ளது.
இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்.
தாது புஷ்டிக்கி நிகறற்றது

பழநி ஆர். எம். கே. தங்க மாத்திரை.

ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம்
இந்தப் பெயர் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

தாது புஷ்டிக்கி இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே யில்லை. தாதைக்கட்டி, ஆண்மைக் குறைவை நீக்கி நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து உங்கள் மனக் கவலையை நீக்கி, தம்பதிகளை மகிழ்விக்கச் செய்யும். லாகிரி சேராதது. இதை ஆண், பெண் சகலரும் சாப்பிடலாம். நாத, விந்தில், கருவமைக்கும் சக்தியையும் உண்டாக்கும்.

100-வேளை தங்க மாத்திரையும் அனுபானம் மகாமன்மத காமகேசரி சாலாமிசிரி அல்வா 100-உருண்டையும் } ரூ. 10
25-நாள் 50-வேளை ஷை மருந்துகள் ,, ரூ. 5
(தபால் செலவு வேறு)

வைத்திய ஆசிரியர், ஆர். எம். கே. வேலுசாமி,
சித்த வைத்திய சாலை, பழநி. PALNI (S. I. R.)

பிராஞ்சுகள் : 16, திருவல்லிக்கேணி ஹை ரோட், மதராஸ்.
68, செட்டியார் தெரு, கொழும்பு.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களால் தயாரிக்கப்பட்ட

I. D. L. 71. மாதர்களுக்குகந்த டானிக் | I. D. L. 81. சூதக கஷ்டங்களுக்கு டானிக் | I. D. L. 91. பிரசவத்திற்குப்பிறகு உதவும் டானிக் | I. D. L. 96. கர்ப்பிணிகளுக்கு டானிக்

வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதுக) (உதவி வைத்தியர் Dr. P.S.C. மணி
சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதறாஸ்.

அஸ்வத்தாமா சபதம்

★ ★

வ. வே. கோபாலன்
எழுதியது

இந்த ஒற்றையங்க நாடகம் மஹாபாரதத்தில் ஒரு பகுதி. துர்யோதனனுக்கும் கர்ணனுக்கும் யுத்தத்தைப்பற்றிய சம்பாஷணை நடக்கிறது : துரோணர் போய்விட்டார் ! கௌரவர் நிலைமை மிகவும் கேவலமாகிவிட்டது. என்ன செய்வதென்று கவலையுடன் துர்யோதனன் பேசிக்கொண்டிருக்கிறன் : கர்ணன் துரோணரைப்பற்றி அவதூருகப்பேசுகிறன் : இந்த நிலைமையில் அங்கு அஸ்வத்தாமாவும் க்ருபாசார்யரும் வருகின்றனர். கர்ணின் மமதை மிகுந்து அஸ்வத்தாமாவை இகழ்ந்து பேசுகிறன். அஸ்வத்தாமாவுக்கு கோபம் மூண்டெழுகிறது : பிரதிக்ஞையும் செய்துவிடுகிறன்: பிரதிக்ஞையின் விளைவும் அஸ்வத்தாமாவின் உள்ளக்கொதிப்பும் பாரதத்தில் மிகவும் ரஸமான கட்டங்கள். இந்தப் பகுதியில் இவை மிகவும் சாதுர்யமாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

கர்ணன்:—துரியோதனா? ஏன் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறாய்?

துரியோ:— கர்ணா! தன்னுடைய தந்தைக்காக ஆயுள் முழுதும் ப்ருமசரிய விரதம் கொண்டு எனக்கென்று ராஜ்யம் கொடுத்து வாழ்ந்த பீஷ்மனையும் சாகக் கொடுத்தேன். வில் வல்லோனுகிய துரோண சிம்மத்தையும் இழந்தேன். நான் என்ன செய்வேன்.

கர்ணன்:— துரியோதனா, நீ இவ்விதம் வருந்துவது அழகல்ல. நானிருக்கும் பொழுது நீ கவலை கொள்ளவேண்டாம், அந்த பஞ்ச பாண்டவர்களையும் உயிருண்ணுவதற்கென்றே இதோ தோளில் வில்லையும், அம்புப் புட்டிலையும் சுமந்திருக்கிறேன். என் காது கேட்க, இனி நீ கவலைகொண்ட வார்த்தையைக் கூறுதே.

துரியோ:— ஆம, என் உயிரினுமினிய கர்ணா? உன்னைப்போல் வீரருண்டா? இனி நான் கவலைப்படேன். யுத்தத்திற்கு க்ஷத்ரியனே உரியவன்; பாவம், பீஷ்ம துரோணதிகள் எனக்கென்று யுத்தம் செய்து மாய்ந்தனர். கர்ணா? நான் அபாக்கிய சாலியே! ஆனால் பயமில்லை. இனி நீ தான் ஸேனாதிபதியாக இருக்கவேண்டும். ஏற்றுக் கொள்.

கர்ணன்:-- கௌரவசிம்மமே! நீ பயப்படாதே! நான் உன் பொருட்டு உயிர்விடத் தயாராயிருக்கிறேன். என் உடல், பொருள், ஆவி மூன்றும் உனக்குரியவை. எனக்கு வரும் வெற்றி உன்னுடையது. உனக்கு வரும் புகழ் என்னுடையது; ஆனால் போரில் தோற்றுப்போய் இங்கு திரும்பேன்.

துரியோ:— கர்ணா! நீ ஒருவனே என் உயிருக்கு நண்பன், என் சோற்றைத் தின்று வளர்ந்த அந்த விதுரன், யுத்தம் வரும் சமயத்தில் எனக்கு உதவிசெய்ய மாட்டேனென்று, வில்லையும் முறித் தெறிந்துவிட்டு, பலராமனோடு தீர்த்த யாத்திரைக்குச் சென்று விட்டான். பாவம் பீஷ்மர்! இந்த கிழவயதில் எங்கும் போகமுடியாமல் போருக்கு யுத்தம் செய்து அவருடைய சபதத்தை நிறைவேற்றிக் கொண்டார்; ஆனால் துரோணருடைய உதவி இனி மேல் இல்லாமற்போயிற்றே என்று தான் என் மனம் வருந்துகிறது; ஹா! இன்று அவர் இறந்ததைக் கேட்டது முதல் என் மனம் வெதும்புகிறது. அவரிருந்தால், இந்த பாண்டவர் நாளைக்கு உயிருடனிருப்பரோ. அந்த மாயாவியான கிருஷ்ணனால், புத்திர சோகமேற்பட்டதாலல்லவா துரோணரிறந்தார், ஐயோ !

கர்ணன்:—துரியோதனா! உத்தம க்ஷத்ரியராயிருந்தால், யுத்த களத்தில் புத்திரசோகத்தினால், ஆயுதத்தைக் கைவிட்டு மூர்ச்சை அடைவார்களா? அவர் ஆயுதத்தைக் கீழே போடாதிருப்பின் அவரைக் கொல்வதற்கு சிவனாலும் அணுக முடியுமா ?

துரியோ:—ஆம்! அவர் செய்தது குற்றமே.

கர்ணன்:—குற்றமா ? அல்ல, அவர் குலத்திற்கேற்றதே.

துரியோ:—என்ன குலத்திற்கேற்றது அவரிடம் என்ன இருந்தது ?

கர்ணன்:— துர்யோதனா? க்ஷத்ரியனாயிருந்தால், தனக்கென்று நடுவில் யுத்தத்தை விட்டு வருந்துவானா? துரோணர் ஒரு ஏழைப் பார்ப்பனன் தானே! பார்ப்பனருக்கு மனத்திடமும், வீரமும் ஏது? அன்றியும்!...

துரியோ:—என்ன ? அன்றியும் என்றாயே எதை?

கர்ணன் :—அவ் விஷயம் எனக்கு மட்டும் தான் தெரியும்?

துரியோ:—என்ன விஷயம் ?

கர்ணன்:—துரியோதனா? துரோணர், அசுவத்தாமனையே இவ்வுலகிற்கு அரசாக்க எண்ணியிருந்தார். அவ்விதமெண்ணிய அவர், அசுவத்தாமன் இறந்தானென்று சொல்லக்கேட்டதும், தான் ஏன் யுத்தம் செய்யவேண்டுமென்று ஆயுதத்தை விட்டு, புத்திரசோகத்தாலிறந்தார். அசுவத்தாமனுயிரையே பெரிதாக எண்ணி, நம் பெரிய கௌரவப்படையின் அழிவையும் மதிக்காமல், இறந்தார். இச்செய்கை சுயநலமல்லவா?

துரியோ:—கர்ணா? அப்படியா? நீ ஏன் இதுவரை அவ்விஷயத்தை என்னிடம் சொல்லவில்லை.

கர்ணன்:—துரோணர் உயிருடனிருந்தால், நிச்சயம் யுத்த முடிவில் அசுவத்தாமனைத்தான் அரசராக்குவார்; நல்ல வேளை; தெய்வம் நமக்கு நன்மை செய்தது.

துரியோ:—அப்படியா? துரோணரை நான் நம்பி மதிமோசம் போனேன்.

கர்ணன்:—துரியோதனா! மற்றுமொன்று; துரோணருடைய வாலிப சிநேகனை துருபதன் அவர் குணம் தெரிந்தவனதல்தான்! தங்குவதற்கு நிழல்கூடக் கொடுக்கவில்லை. இல்லாவிடில் சொன்னபடி அவன் பாதி ராஜ்யத்தைத் துரோணருக்குக் கொடுத்திருப்பானே ?

துரியோ:—ஆம், வரவரத்தான் உண்மை தெரிகிறது.

கர்ணன்:—இதை நான் மட்டும் அறிந்து கொண்டே வந்தேன்.

துரியோ:—கர்ணா! நீ சொல்வது பொய்யாகுமா? உண்மைதான். நான் தான் மோசம் போனேன்: ஆம், அன்று நம் நண்பனான ஸிந்துராஜன் அர்ச்சுனனோடு போர் செய்கையில் துரோணர் யுத்த களத்திலேதான் இருந்தார். அப்படியிருந்தும் அர்ச்சுனன் ஸிந்து ராஜனைக் கொல்லும் போது பேசாமல் பார்த்திருந்தாராம். அதன் சூட்சுமம் இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது.

கர்ணன்:—துரியோதனா! பேச்சை நிறுத்து. இதோ அசுவத்தாமனும், கிருபாசார்யரும் வருகின்றனர்.

துர்யோத:—ஆம்; ஏதோ சுயநலங்கருதியே வருகின்றனர். பார்ப்போம்!

கிருபா:—ஹே துர்யோதனா! உனக்கு மங்களமுண்டாகட்டும்.

துரியோ:—ஆசார்யரே! நமஸ்காரம், அசுவத்தாமரே! நமஸ்காரம்! உமது தந்தையும், வில் வீரருமான துரோணகுரு, என் பொருட்டு உயிர் துறந்ததைக் கேட்க நான் மிகவருந்துகிறேன். ஐயோ, என் பொருட்டு நீர் உமது தந்தையையிழந்தீர்; நான் என்ன பாவம் செய்தேனே!

கர்ணன்:—துரோணபுத்ரரே. நீரும் துக்கக் கடலில் விழ நேர்ந்ததே. இந்த விதம் நேருமென்று நாம், கனவிலும் கருதவில்லையே!

கிருபா:—அசுவத்தாமா? உன் தந்தையாகிய துரோணரையிழந்ததனால் துரியோதனனும், கர்ணனும் எவ்வளவு வருந்துகின்றனர், பார்த்தனையா?

அசுவத்:—துரியோதனா! என் தந்தையிறந்ததால் எனக்குண்டான வருத்தத்தைப் போக்கிக் கொள்ளவே இங்கு வந்தேன். நான் எனனசெய்வது!என் தந்தையையிழந்து இன்னும் நான் உயிருடன் இருக்கிறேனே.

கர்ணன்:— துரோணபுத்ரரே! வருந்தாதீர். உம் தந்தை யுத்த தர்மத்திற்கு மீறி நடந்து தாமே உயிர் துறந்தார்? இல்லாவிடில் அவரை அணுகவும் முடியுமோ? தாம் கற்ற சஸ்த்ரங்களையெல்லாம் விட்டு சோகத்தையடைந்ததனால் தான் இவ்விதம் நேர்ந்தது! அதற்கென்செய்வது?

அசுவத்:—கர்ணா? என்ன செய்வதென்று சொல்கிறாய்? செய்வதைச் சொல்கிறேன் கேள்! எவரெவர் பாண்டவப் படையில் ஆயுதம் பூண்டு மதங்கொண்டு நிற்கின்றனரோ, எவரெவர் பாஞ்சாலன் குலத்துதித்தனரோ, எவரெவர் நீதி வழுவி நின்றனரோ, எவரெவர் என தந்தையைக் கொன்ற பழி கொண்டனரோ, அவரவர்களையெல்லாம் அழித்து விடப்போகிறேன். கர்ணா இன்னும் கேள். துரியோதனா நீயும் கேள். முன் ஒரு சமயம் பரசுராமன் பகைவரைக் கொன்று அவர் துரத்தத்தைத் தேக்கி மூழ்கி சபதத்தைப் பூர்த்தி செய்த இடம் இதேதான்; அவன் தந்தை ஜமதக்கி அடைந்த அவமானமே என் தந்தையும் இன்று அடைந்தான். அப்பரசுராமன் கொண்ட கோடாலி போன்றது தான் என்னுடைய இந்தக் கைவாளும்! அப்பரசுராமன் முன்பு என்ன செய்தானே அதையே தான் நான் இன்று செய்யப் போகிறேன் தெரிந்ததா?

துரியோ:— அசுவத்தாமரே! நீர் சொல்லும் விதம் செய்வது உமக்கு ஒரு பொருட்டா? உம் வீரத்துக்கு இவ்வுலகில் யார் நிகராவார்கள்?

கிருபா:— துரியோதனா? அசுவத்தாமனின் வீரம் உனக்கு இன்று தெரிந்ததா?

துரியோ:— கிருபாசாரியரே! ஏன் அப்படிச் சொல்கிறீர்! அசுவத்தாமருடன் நான் சிறு வயதுமுதல் பழகியவன் அல்லவா? அவருடைய வீரமும், குணமும் எனக்குத் தெரியாதா?

கிருபா:— துரியோதனா? அப்படியாயின் அசுவத்தாமனுக்கு இப்பொழுதே படைத் தலைமையைக் கொடு. பாண்டவப் பூண்டையே அழித்துவிடுவான். இது நிச்சயம்; சீக்கிரம் அவனுக்கு ஸேனாபதி பட்டம் சூட்டி அபிஷேகம் செய்.

துரியோ:-கிருபரே! நீர் சொல்லியது ஏற்றதுதான்; ஆனால் அங்கராஜ சிம்மமான என் நண்பன் கர்ணனுக்கு படைத் தலைமை அளிப்பதாக முன்பே கூறிவிட்டேனே!

கிருபா:— துரியோதனா, தந்தையை இழந்த துக்கத்தினாலும், பகைவரை அடியோடு அழிக்க வேண்டுமென்ற உறுதியாலும், துடி துடித்துக்கொண்டிருக்கிற அசுவத்தாமனை கர்ணனுக்கென்று உபேக்ஷை செய்வது நியாயமல்ல, நல்லதுமல்ல!

துரியோத:— கிருபரே! நான் உபேக்ஷை செய்யவில்லையே.



புதுமாதிரி வெடி குண்டு விமானம் :

"ஸ்பிட் பயர்" என்ற பிரிட்டனின் புதுமாதிரி வெடிகுண்டு விமானத்தில் இரண்டு பீரங்கித் துப்பாக்கிகளையும் நான்கு யந்திர துப்பாக்கிகளையும் எடுத்துச் செல்ல முடியும்.

கர்ணனுக்கு வாக்குதத்தம் கொடுத்துவிட்டேனே.

அசுவத்:—துரியோதனா? நான் துரோணபுத்திரன். அசுவத்தாமன் என்ற பெயரை, இனிமேல் தான் நிலைநாட்டப்போகிறேன். இன்னும், ஸம்சயமா? இன்றிரவு நீ கவலையே இல்லாமல் தூங்கலாம்; நாளை காலையில் போரென்ற பேச்சேயிராது. இனி மேல் இப்பூமியில் யுத்தம் என்பது நான் இருக்கும் வரையில் தலைகாட்டாது. கலங்காமல் படைத் தலைமையை என்னிடம் கொடு.

கர்ணன்:—துரோண புத்ரரே! அர்ச்சுனனுக்குத் தேரோட்டுபவன், கிருஷ்ணன் என்பது ஞாபகமிருக்கட்டும்.

அசுவத்:—துரியோதனா! கர்ணா! அருச்சுனனுக்குத் தேரோட்டுபவர், கிருஷ்ணனாயினும் சரி, சிவனே ஓட்டினாலும் சரி. எனக்கு முன் நிற்பவரைச் சிதற அடிக்கும் வன்மை பெற்றுள்ளேன். துரியோதனா? முடிவாக நாளைக்காலையிலேயே உனக்கு இவ்வுலகமுழுவதும் ஒரு குடைக்கீழ் ஆளத்தருவேன்.

கர்ணன்:—ஹஹ்ஹஹ்ஹா! அசுவத்தாமா? நீ சொல்லியபடி செய்வதற்கென்று, கௌரவப் படையில் பலருளர்; அன்றியும், சொல்வது எளிது, செய்வது அரிது.

அசுவத்:—கர்ணா? அவ்விதம் தான் உலகத்தில் நடக்கிறது; ஆனால் நான் இவ்வார்த்தைகள் செருக்கினால் கூறியதல்ல. செய்யப்போவதை எச்சரித்தேன்; சொல்வதொன்றும், செய்வதொன்றும், துரோண புத்திரன் அசுவத்தாமாவுக்கு வழக்கமல்ல. பேடிதான் அவ்விதம் செய்வான்.

கர்ணன்:—பேஷ்! அசுவத்தாமா, துக்கங்கொண்டவர்களுக்குக் கண்ணீர் தானுண்டு, வீரங்கொண்டவர்களுக்கு ஆயுதமே தான். ஆதலால் உன்போல்வார், சொல்வதோடு ஸரி, என் போல்வார் சொல்லிச் செய்யார்கள். செய்தபின் சொல்வார்கள் தெரியுமா?

அசுவத்:—அடே! கர்ணா! என்ன சொன்னாய்? அசுவத்தாமனாகிய எனக்கு அழுகையால் துக்கம் நீங்கும் என்று சொல்லினை; அவ்விதம் செய்பவன் இந்த அசுவத்தாமா அல்ல! சஸ்திரத்தினாலேதான் என் துக்கம் நீங்கும். அடே தேரோட்டும் பாகன் மகனே! உன் ஜாதிக்குரிய புத்தியே உனக்கு உள்ளது.

கர்ணன்:—அடே அசுவத்தாமா? நான் தேர்ப்பாகன் மகனாயிருந்தாலென்ன? தேர்ப்பாகனேயானால்தான் என்ன? ஆனால் குலத்தினால் பௌருஷமும் வீரமும் உண்டாகி விடுமோ? அல்லது குறைந்துதான் விடுமோ? உயர்குலத்தில் பிறந்தும் பௌருஷமில்லாப் பேடியே நீ! நானே என் முயற்சியால் பௌருஷமும் வீரமும் நிரம்பப்பெற்றுள்ளேன்.

அசுவத்:—அடே கர்ணா? நீ பௌருஷவானாயிருப்பின் போர்க்களத்தை விட்டுப் புறங்காட்டி ஓடி வருவாயா? பேடியைப்போல் புறங்காட்டி ஓடி வந்தனையே! நீயும் வீரனா?

கர்ண:—அடே; பெரும் வீரர் எதிர்க்குங்கால் பொறுக்க முடியாது. பெரும்படை திரட்டவே ஓடி வந்தேன். ஆனால் உன் தந்தையைப் போல் துக்கத்தால் படை துறந்து, பேதையைப் போல் யுத்தகளத்திலேயே இறக்கவில்லை.

அசுவத்:—அடே! கர்ணா! உன்னைப்போல் புறங்காட்டாது என் தந்தை யுத்த களத்திலேயே இறந்து வீர ஸ்வாக்கம் அடைந்தார். அதுவும் புத்திர சோகத்தினால்தான். இல்லாவிடில் இந்த மூவுலகிலும் எதிர்த்து நிற்பவர் யாராயிருப்பினும் அழித்து நிற்பார்; உன் போன்ற புருஷத்தன்மையே இல்லாதவர்கள் என் தந்தை முன் நிற்கத்தகுதியேயில்லை. என் தந்தை வகித்த ஸேனாபதிப் பதவியையும் வகிக்கச் சிறிதும் நீ தகுந்தவனில்லை. என் தந்தையைப் பழித்த உன்னை இதோ எனது இடது காலால் உதைத்து அமிழ்த்துகிறேன். தடு பார்ப்போம்.

துரியோ:—அசுவத்தாமரே! வேண்டாம், வேண்டாம்!

அசுவத்:—துரியோதனா! என் தந்தையை அவமதித்த இந்த அற்பனை நான் தண்டிக்காமல் விடேன், தடுக்காதே (என்று காலைத் தூக்குகிறான்)

கர்ணன்:— அடே! அசுவத்தாமா! என்னை அமிழ்த்தவா காலை தூக்குகிறாய்? அடே! பிராமண அதமா! பிராமண ஜாதியில் நீ பிறந்தவனாதலின் இப்பொழுது கொல்லாது விட்டேன். ஆனால், என்னை அமிழ்த்தத்தூக்கிய உன் இடது காலை இதோ இந்த வாளால் வெட்டுகிறேன் பார்.

அசுவத்:— அடே கர்ணா! நான் பிராமண ஜாதியிற் பிறந்தவனாதலால் கொல்லாது விட்டனையோ? இதோ என் பூணூலை அறுத்துவிட்டேன். பிராமண ஜாதியை விட்டுவிட்டேன். இனிமேல் நீ என்னுடன் யுத்தம் செய்யலாம் வா, இல்லாவிடில் தோற்றேனென்று முடிமேல் கை குவித்து விடு!

துர்யோ:— ஆசார்யபுத்ர! வேண்டாம், வேண்டாம்.

அசுவத்:—துரியோதனா! பேசாமல் இரு; இந்த வாளுக்கு கர்ணனை இரையாக்குகிறேன் பார்.

கிருபா:—கர்ணா! அசுவத்தாமனிடம் நீ கோபம் கொள்ளாதே. வீணில் ஏன் உனககு கோபம்?

கர்ண:—கிருபாசார்யரே! உம்மை எனக்குத் தெரியும். பேசாமலிரும். நான் கவசகுண்டலங்களுடன் பிறந்த கர்ணன் என்பதை உணர்ந்துகொள்ளும். இப்பொழுது உமது பிரிய அசுவத்தாமாவை விண்ணுலகேற்றுகிறேன் பாரும்.

துர்யோ:—வேண்டாம், அசுவத்தாமரே.

அசுவத்:—துரியோதனா! தடுக்காதே. கேவலம், தேர்ப்பாகனுடைய மகனா உனக்கு சிநேகம். இவனால் உனக்குப் பயனென்ன? என் தந்தையை இகழ்ந்த இப்பாவியை இதோ கொல்கிறேன்.

கிருபா:—அசுவத்தாமா! எண்ணிய கருமத்தைவிட்டு, உனக்குச் சிறிதும் ஸமானமில்லாத கர்ணனிடம் ஏன் வஞ்சம் தீர்க்கிறாய்? நில்; எண்ணிய காரியத்தை முடிக்கவேண்டாமா?

அசுவத்:—ஹா! என்ன காரியம் செய்யப்போகிறேன். சீ! இந்த அற்பனை கர்ணன் எனக்கு ஒருபொருட்டல்ல! கிருபாசாரியரே, நீர் சொல்வது சரியே. போர்க்களத்தில் பீமனும் அர்ச்சுனனும் எதிர்க்கும்போது இந்த கர்ணன் உயிருடன் மீள்வானா? அப்போது தெரியும் இவன் வன்மையின் எளிமை, கிருபாசார்யரே, துரியோதனா, இதோ என் முன் நிற்கும் பாபியான கர்ணன் போர்க்களத்தில் இறந்து போகும் வரையில் நான் என் வில்லையும், வாளையும் தொடேன். இது ஸத்தியம்! இதோ எறிந்தேன்;

(எறிகிறான் சப்தம்)

கர்ணன்:—ஹ ஹ் ஹா ஹா (சிரித்து) அசுவத்தாமா? உன் குலத்திற்கேற்றதே வில்லும், வாளும் இல்லாதிருப்பது. பிராமணருக்கு ஆயுதமில்லாதிருப்பதுதான் அழகு; இப்பொழுது தான் நீ துரோணருடைய புத்திரனானாய்?

அசுவத்:—அடே கர்ணா? உன்போல் மூடன் உலகிலேயே இல்லை. உன் கையில் ஆயுதமிருப்பினும் இல்லாதது போல்தான். என் கையில் ஆயுதமில்லாதிருப்பினும் இருப்பது போல்தான். ஏனென்றால் உன் கையில் ஆயுதமிருந்தும் இப்பொழுது பயனில்லையே.

கர்ணன்:—அசுவத்தாமா? இதோ கைவாளைப்பார்த்தனையா? இதனாலாகாத காரியமும் உண்டோ? இதன் திறமை யுத்தத்தில் தெரியும். (பீமன் துச்சாஸனைப் பிடித்து இழுத்து வருகிறான்.)

(உள்ளிருந்து) பீமன்:—ஹா! துச்சாஸனா? பொட்டையன் பெற்ற புழுவே, இதோ உன்னை எல்லார் கண்முன்னும், கிழித்து உன் ரத்தத்தைக் குடிக்கிறேன், பார். ஹா? கௌரவர்களே! துரியோதனா? கர்ணா? சகுனியே! எங்கே இருக்கிறீர்கள். இதோ துச்சாஸனன் என் கையிலகப்பட்டான், அரசர் நிறைந்த சபையில் கற்புக்கரசியான துரோபதையின் துகிலுரிந்த இந்த துச்சாஸனுடைய மார்பை பிளந்து 'ரத்தத்தை உறிஞ்சுகிறேன். இவனை காக்கும் கௌரவம் எவன்? ஹா! ஹா! ஹா! இதோர்கிழிக்கிறேன்.

அசுவத்:—சபாஷ் பீமா! வந்துவிட்டாயா? (சிரித்து) கர்ணா! என்ன சொல்கிறாய்? நீ கௌரவ ஸேனாபதி தானே? இதோ பார்த்தனையா? பீமன் கையில் துச்சாஸனன் படும் பாட்டை! 'கைவாளால் ஆகாத காரியமும் உண்டோ' என்றனையே! நீ வீரனானால், பீமனிடமிருந்து துச்சாஸனனை மீட்டு வா! அடே சீக்கிரம் செல். '

கர்ணன்:—ஹா? இதோபுறப்படுகிறேன். நானிருக்கும்போது, துச்சாஸனனுக்கு எதுவும் வராது. இதோ போகிறேன். அந்த பீமனைவதம் செய்கிறேன்.

(போகிறான் கர்ணன்)

அசுவத்:—துரியோதனா? பீமனை ஜயிக்க இந்த கர்ணனால் முடியாது? நீயே செல். இவனை நம்பாதே. யானை வாயிலகப்பட்ட கரும்பு போல்தான், இனி துச்சாஸனன் நிலை! சீக்கிரம் துரியோதனா?

துரியோ:—அசுவத்தாமரே! நானிருக்கும் போது பீமன் துச்சாஸனனை எதுவும் செய்ய முடியாது; தெரியுமா? இதோ ஓடுகிறேன்.

(ஓடுகிறான் துரியோதனன்)

அசுவத்:—ஹா! தெய்வமே! இதோ பீமன் துச்சாஸனனைக் கிழித்து விட்டான். ஐயோ! நான் இதைப் பார்க்க ஸகியேன்; எந்தை இறந்ததைக் காட்டிலும் இது அதிகக் கொடுமை. ஹா! கிருபாசார்யரே! எங்கே என் வாள்! என் வாள்! கொடும் என் கையில்; இதோ துச்சாஸனனை மீட்டு வருகிறேன். வாள் எங்கே எங்கே! சீக்கிரம்.

கிருபா:—அசுவத்தாமா! வேண்டாம்; சபதத்தை மறந்தனையா?

அசுவத்:—முடியாது! கொடும் தடுக்க வேண்டாம். துர்யோதனன் சோற்றைத் தின்ற நான் இதை சும்மா பார்த்திருக்க முடியாது.

அசரீரிவாக்கு:—அசுவத்தாமா? போகாதே! 'கர்ணன் இறக்கும் வரையில் ஆயுதத்தை தொடேன்' என்று சபதம் செய்த பின் அதை மீறலாமோ? ஸத்தியத்தை கைவிடலாமோ? வேண்டாம், நடப்பது நடக்கும் பொறு.

கிருபா:—அசுவத்தாமா கேட்டனையா அசரீரி வாக்கை!

அசுவத்:—ஐயோ! பாழும் தெய்வமே! நீயும் பாண்டவர் பக்கம் சேர்ந்தனையா? அசரீரியும் எனக்கு பிரதிகூலமாகி விட்டதே. ஐயோ! கர்ணனிடம் கொண்ட கோபத்தால் மெய் மறந்து சபதம் செய்து விட்டேனே! காரியம் கெட்டது. நான் என்ன செய்வேன். கர்ணனிறப்பதற்குள் இன்னும் எவ்வளவு பேரிறக்கின்றனரோ? கெட்டேன். கிருபாசாரியரே! நீராவது துரியோதனனுக்கு உதவியாகப் போய் வாரும்.

கிருபா:—அப்படியே போய் வருகிறேன். நீ நடப்பதைக் கவனித்துவா. உனக்கு காரிய சித்தி உண்டாகட்டும். போகிறேன்.



உண்மை உறுதிக்கும் உத்திர வாதம்.

—:—

"ஷண்முகம் பிராண்டு" ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்

தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர்,
P. 3094, 341. எஸ்பிளநேட், மதராஸ்

உங்கள் அபிமானம் பெற்ற கடை

வெள்ளி சாமான்கள்

* சமீபத்திய மோஸ்தர்
* ரகம்
* விலைக்கு உத்திரவாதம்.

ஜி. ஸ்ரீராமுலுசெட்டி & ஸன்
184, சைனா பஜார், மதராஸ்.
போன் : 3268.

வேற்கூறு, சொரி முதலியவற்றிற்கு சிறந்த நிவாரணி.

ஜாம்-பெக் நமைச்சலை ஒழித்துவிடும்.

வேர்கூறு, சொரி, நமைச்சல் மற்றும் கோடைகால சரும உபத்திரவங்களால் அவதிப்படுவது ஆச்சரியமானதே. ஜாம்-பெக் சமனமூட்டி நிவர்த்தியளிக்கும். ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகைச் சத்துக்களை சருமம் சுலபமாக இழுத்துக்கொள்ளுகின்றது. சூரிய வெப்பம் காரணமாக உலர்ந்துவிடும் இயற்கை ஆயில்களை ஜாம்-பெக் அளிக்கின்றது. ஜாம்-பெக் மெழுகு ரூபா 1 அல்லது ரூபா 2—4. ஸோப் ரூபா 1. பவுடர் ரூபா 1. ஏஜண்டுகள்:— மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது

ஒரு மாதத்திற்கு மட்டும் சரஸ் விலை
100 கார்டுகள் கொண்ட ஸெட் 1-க்கு விலை ரு. 5-12-0

கார்டு படங்கள்

கணவன் மனைவியின் அந்தரங்கமான நிலைகளைக் காட்டும் அழகான தோற்றங்களுடைய அபூர்வமான ஸெட், தபால் சார்ஜ் உள்பட 100 கார்டுகளடங்கிய ஸெட் 1க்கு ரூ 5/12/- பொறுக்கியெடுத்த 25 கார்டுகள் கொண்ட ஸெட் 1-க்கு தபால் சார்ஜ் உள்பட ரூ. 2/10/- ஒரு சமயத்தில் 25 கார்டுகளுக்கு குறைவாக அனுப்புவதில்லை.

AMERICAN CORPORATION (S.M.W)
(B P S) DINA NAGAR (PUNJAB)

அறிக்கை

Dr, பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதரின்
ஓர் புதிய பிராஞ்சு
கும்பகோணம்
நெ. 7 சாரங்கபாணி கோவில் கீழ வீதியில்
ஸ்தாபிக்கப்பட்டிக்கிறது
வைத்ய நிபுணர் குழந்தைகளை பரீக்ஷிப்பார்

பாத்ருடுவின்
"பால சஞ்சீவினி"
குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டியை குணப்படுத்தும்

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ். போன்: 86257.

திருச்சி பிராஞ்சு: 81, ஆண்டார் தெரு, தெப்பகுளம்.

திருச்சியில் ராணி மங்கம்மாள் ஹாலில் சென்ற மாதம் திருச்சி ஜில்லா பிராமணர்கள் மகாநாடு நடைபெற்றது. திருச்சி நகர சபைத் தலைவர் ஸ்ரீ எம். தெம்பர சேர்வை அச்சமயம் அக்ராஸனம் வகித்தார். (எஸ். எ. எஸ்.)

குழந்தைகள்

★

ஹிந்தி கதை

★

"சர்மா"

மொழிபெயர்ப்பு

★

"மனிதர் தங்கள் வாழ்க்கையில் ஆரம்பம் முதல் முடிவு வரை எத்தனையோ நட்பைப் பெறுகிறார்கள். அதை அறுத்தெறிகிறார்கள். ஆனால் இவைகளில் சில மறதியின் பள்ளத்தாக்கில் திடீரென்று மலையருவியைப் போல் பெருகி ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணி விடுகின்றன, அப்போது பழைய நினைவின் மிருதுவான இந்த அதிர்ச்சி, கவனத்திற்குள் ஒரு இன்பத்தையும், நெகிழ்ச்சியையும் உண்டாக்கி விடுகிறது." இளமைப் பருவத்தில் ஏற்படும் நட்பும் அந்நியோந்நியமும் நீடித்து நிற்கும்; அந்தக் காலத்தில் வளரும் ப்ரீதி இக் கதையில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

★

பஞ்சாப் நேஷனல் பாங்கி மானேஜர் பண்டித ஸூர்யநாத குஞ்சரு கல்கத்தாவுக்கு மாற்றலாகிவந்தார். ஒரு வருஷம் கழிந்தது. அவர் மனைவி தாராதேவிக்கு அந்த ஊர் பிடிக்கவில்லை.

ஹாரிஸன் ரோடில் நாள் பூராவும், மோட்டார், டிராம், குதிரை வண்டி இவைகளின் பேரிரைச்சலும் ஜனக் கூட்டமும் அவளுக்கு வெறுப்பை உண்டாக்கின. இதைப் பார்க்கும்போது தாராதேவி கண்களை மூடிக்கொண்டு இந்தப் பேரிச்சைலும் சந்தடியும் ஓயாதா? இந்தப் பெரு மாளிகைகளெல்லாம் பசு மரங்கள் தழைத்து மலைகளாக மாறக் கூடாதா?—என்று எண்ணுவாள்.

மேல் மாடியில் பார்ஸிகளும், கீழே சீனர்களும், பக்கத்தில் வங்காளிகளும், எதிரே மதராஸிகளும் வசித்து வந்தார்கள். ஆனால் ஒருவருக்கொருவர் யாதொரு சம்பந்தமும் இல்லை.

இதன் காரணமாகவோ என்னவோ, ஒருநாள் எதிர் வீட்டுப் பெண்கள் மாடிப் படியிலே நின்று கொண்டு தயக்கத்தோடு, "கிரண் எங்கே?" என்று கேட்டார்கள்.

அன்றிரவு தாரா கிரணை அழைத்து, "இந்தக் கிறிஸ்தவப் பெண்களோடெல்லாம் சேரக் கூடாது" என்று கண்டித்தாள்.

மறுநாள் பள்ளிக் கூடத்திலிருந்து கிரண் திரும்பி வந்ததும், இரைக்க இரைக்க மூச்சைப்பிடித்துக்கொண்டு, "அம்மா! அவர்கள் கிறிஸ்தவர்களல்ல! அவர்கள் மதராஸிகள். அவர்களுக்கு எவ்வளவு நீளமான கூந்தல் இருக்கிறது தெரியுமா? ரவி!...ஓ...ரவீ!... ஸூர்யாவிடம் ஒன்றையும் சொல்லிவிடாதே! அம்மா, யாராவது ஸூர்யாவிடம் அவள் தாயைப்பற்றிக் கேட்டால் அவளுக்கு அழுகை வந்துவிடும்!...... அவர் அம்மா இல்லை..." என்றாள்.

"சரி!" என்று சொல்லி ஒன்றும் அறியாத ரவி, சகோதரியின் வார்த்தையின் அர்த்தத்தை உணராமல். அவள் சொன்னதை ஒப்புக்கொண்டதாக தலையை ஆட்டினான். கிரணின் தாய் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டே நின்றாள்.

* * *

ரத்னு, ஸீதா, ஸூர்யா மூவரும் கோவிந்த ராவின் இரண்டாவது மனைவியின் குழந்தைகள். டாக்கா ஜில்லாவில் வெகு நாள் உத்யோகம். பென்ஷன் வாங்கிக்கொண்டு, குழந்தைகள் படிப்பதற்காகவும் வேறு சில காரணங்களுக்காகவும் அவர் கல்கத்தாவிலேயே இருந்து வந்தார்.

மூத்த மனைவியின் மகன் ராமராவ் ஒரு கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டே பி. ஏ. பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தான் அவன் தம்பிகள் கிருஷ்ணனும், மூர்த்தியும் காலேஜில் படித்துக் கொண்டிருந்தார்கள். ரத்னு, ஸீதா, ஐந்து வயதான ஸூர்யா இவர்களை விட்டுவிட்டு, கோவிந்த ராவின் மனைவி இறந்து போனாள். இது மூன்று வருஷங்களுக்கு முந்திய சம்பவம்.

குழந்தைகளின் பாஷை, நாய் பூனை இவைகளின் பாஷையைப் போன்றதுதான். ஒருவர் மற்றொருவருடைய ஊர் ஜாதி, பாஷை இவைகளை அறியமாட்டார். ஆயினும் மிகக் குறுகிய காலத்திற்குள் தங்களுக்குள் அறுக்கமுடியாத நட்பைப் பெற்று விடுகின்றனர்.

ஸீதாவும், ரத்னுவும், கிரணின் தாயை அம்மா வென்றும் கிரணின் தந்தையை அப்பா என்றும் கூப்பிடுவார்கள். ரவியும், கிரனும். ரத்னுவின் சகோதரனை அண்ணு என்றும் வயயோதிகத் தந்தையை 'பாபா' என்றும் அழைப்பது வழக்கம்,

ரத்னுவும் ஸீதாவும் பச்சை வர்ணபாவாடை அணிந்தால் கிரண் மாத்திரம் வெள்ளை வர்ணப் பாவாடை அணியமுடியுமா? கிரணுக்கு அவள் தந்தை கறுப்பு பூட்ஸ் வாங்கிக்கொண்டு வந்தால் ரத்னுவின் அண்ணுவும் உடனே அதைப் போல வாங்கிக் கொண்டு வரவேண்டும்

தாய் ஆயிரம் தான் தடுக்கட்டும் கிரண், ரத்னு, ஸூர்யா, ரவி எல்லோரும் ஒன்ருகத்தான் ஸ்நான அறைக்குச் செல்வார்கள். ஒரு மணி நேரம் கூத்தடிப்பார்கள். அதன் முடிவாக அவர்களில் யாராவது ஒருவர் அழுது கொண்டே வெளியே வருவார்.

2

மாலை நேரம். எதிர் வீட்டு மேல்மாடி சூரியன் ஒளியால் ஜ்வலித்துக் கொண்டிருந்தது. காக்கை ஒன்று கா, கா, என்று கத்திக்கொண்டிருந்தது. தாராதேவியின் மனதில் பால்ய கால நினைவுகள் எழுந்தன. பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வந்ததும் புஸ்தகத்தை எறிந்து விட்டு சகுந்தலாவின் வீட்டுக்குப் போய் விடுவாள். வெகு நேரம் வரை பல வர்ணமுள்ள கற்களைப் பொறுக்கி விளையாடுவார்கள். பசும் புல் தரையில் கவிழ்ந்து படுத்துக் கொண்டு எத்தனை மாலை நேரத்தை இருவரும் கழித்திருக்கிறார்கள்!

அந்த நாட்கள் எங்கு சென்று மறைந்தன? உயிருக்குயிரான அந்தத் தோழியர் ஒருவர் கூட இன்று அவள் கண் முன் இல்லை. சகுந்தலா இரண்டு குழந்தைகளை விட்டு விட்டு இரண்டு நாளைய ஜ்வரத்தில் போய் விட்டாள். சம்பூா, தன் கணவன் குழந்தைகள் ஆகியவர்களுடன் குவெட்டா பூகம்பத்தில்......... பாவம்......

அதேசமயம் அறைக்கதவை தாளிட்டுக் கொண்டு ரத்னு, ஸீதா, கிரண் மூவரும் விளையாடிக் கொண்டிருந்தனர். மூலையில் ஒரு ஜப்பான் பொம்மை, சிறிய சிறிய டீக் கோப்பைகள், சிறிய சிறிய மேஜை நாற்காலிகள், இவைகளெல்லாம் தயாராக இருந்தன. ஒருபக்கம் ரவியும் ஸூர்யாவும் தனவான்களைப் போல் கம்பீரமாக உட்கார்ந்திருந்தார்கள்,

"சரி! நீங்கள் இன்று எங்கள் வீட்டுக்கு டீ சாப்பிட வாருங்கள்!" என கிரணையும் ஸீதாவையும் அழைத்து விட்டு, ரத்னு அந்தச் சிறிய பாத்திரங்களில் வழைப்பழம், மிட்டாய் இவைகளைத் துண்டு துண்டாக்கிப் பரிமாரலானாள்.

"ஸீதா! நீ இந்த ஆகாய நீலப்புடவையைக் கட்டிக் கொள். கொண்டுவா இங்கே. நான் கட்டி விடுகிறேன். நான் இந்த ஜரிகை போட்ட பனாஸ் புடவையைக் கட்டிக் கொள்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டே பெட்டியிலிருந்த தன் தாயாரின் புடவைகளைக் கிளரலானாள் கிரண்.

"அடேடே! எங்க அம்மாவிடம் கூட இந்தமாதிரிப் புடவை இருந்தது!" என ஒரு சிகப்புப் பட்டுப் புடவையை இழுத்துக்கொண்டே கூறினாள் ஸீதா. அதோடு நில்லாமல் விருந்து தயாரித்துக்கொண்டிருந்த ரத்னுவை இழுத்துக் கொண்டு வந்து, "ஏன் அக்கா! இதே மாதிரி புடவை . நம்ம அம்மாவிடம் இருந்ததா இல்லையா? இதேமாதிரி சிகப்பு...?" என்றாள்,

இம்மாதிரிக் கூறி கிரன் முன் பெருமை காட்டிக் கொண்டதாக நினைத்தாள் ஸீதா. சந்தோஷத்தால் அவள் முகம் மலர்ந்தது. ஆனால் ரத்னு சற்று வயதானவள்; விவரம் தெரிந்தவள். தாயாரைக் கேட்டதும் அவள் கண்களின் முன் துக்ககரமான காட்சிகள் எழுந்தன. ஆஸ்பத்திரிக்குப் போகும் போது, அவள் தாய் அவளை மடியில், வைத்துக் கொண்டு முத்தமிட்டு "ரத்னு! ஸீதா, ஸூர்யா இருவரிடமும் மிக்க பக்ஷமாக இரு!" என்று சொன்னாள். ரத்னுவும் ஏதோ சொல்ல விரும்பினாள். ஆனால் அதற்குள் தாயை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விட்டார்கள். இதற்குச் சில நாட்களுக்குப் பிறகு தாயின் புடவையையும் நகைகளையும் மாத்திரம் எடுத்துக் கொண்டு அவள் தந்தை திரும்பி வந்தார். அப்பொழுது அவளுடைய இளங் கண்களுக்குப் ப்ரளயத்தின் சித்திரம்தான் தோன்றியது. எரிமலை போன்ற ஜ்வாலை வெடித்தது. தலையில் அடித்துக் கொண்டு, நெஞ்சு வரண்டு போக அழுதாள். எப்படிப்பட்ட பயங்கரமான இரவு! சூரியனே இனி உதயமாகாதோ என்று தோன்றியது அவளுக்கு.

மறு நாள் அவள் தாயின் ஆடைகளை யெல்லாம் மடித்து வைத்தாள். இதே மாதிரி-இதே சிகப்பு வர்ணமுள்ள புடவை-இதைப் போலவே......!

அன்று விளையாட்டு ஒன்றும் நடைபெற வில்லை. ரத்னு வீட்டுக்குச் சென்று விட்டாள். கிரணும் ஒன்றும் தோன்ருதவளாய் தாயிடம் சென்றாள்.

3

வீட்டுச் சாமான்களையும். புடவைகளையும் கலைத்து இங்குமங்கும் போட்டதற்காகக் கிரணின் தாய் அவளை அன்றிரவு ரொம்ப மிரட்டிக் கண்டித்தாள். இதன் காரணமாக ஒரு வாரம் வரை அவள் பள்ளிக்கூடத்திலிருந்துவந்ததும் பேசாமல் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்து விடுவாள்.

ஒரு நாள் தாய் சந்தோஷமாக இருப்பதைக் கண்டு தைரியமாக "ராவ் அண்ணு ரொம்ப இளைத்

துப் போய் விட்டார் அம்மா! அவர் தலை மயிர் கூட நரைக்க ஆரம்பித்து விட்டது. வீட்டைப் பற்றி அவருக்கு ரொம்ப கவலையல்லவா? இந்தத் தடவை அவர் பாஸ் ஆகவில்லை.' இப்பொழுது பாடா நகரில் வேலை பார்க்கிறார். நேற்று ராத்திரி பூராவும் ரத்னு தூங்கவே இல்லை. சிறு சந்தடி ஏற்பட்டால் கூட அவளுக்கு அண்ணு வந்து விட்டதாகவே தோன்றியது" என்றாள்.

கிரணின் முகத் தோற்றத்தையும் கண்டு தாரா தேவிக்குச் சிரிப்பு வந்து விட்டது. இவர்களை எவ்வளவு பிரித்தாலும் இவர்களால் தனித்திருக்க முடியாது. தாயற்ற அந்த எதிர் வீட்டுக் குழந்தைகளிடம் இன்று அநாயாசமாக அவளுக்கு அநுதாபமும் வாஞ்சையும் ஏற்பட்டன.

அவள் சிரித்துக் கொண்டே "சில நாட்களாக ரத்னுவைக் காணவில்லையே? நீ அவர்கள் வீட்டுக்குப் போவதில்லையா?" என்று கேட்டாள்.

கிரண், தாயாருக்குத் தெரியாமல் தினம் சென்று கொண்டிருந்தாள். ஆனால் தாயாருக்கு என்ன பதில் சொல்வதென்று அவளுக்குத் தோன்றவில்லை. அப்பொழுது தாய், "இன்று சாயங்காலம் அவர்களைச் சற்றுக் கூப்பிட்டுக் கொண்டு வா, ரொம்ப நாள் ஆயிற்று அவர்களைப் பார்த்து!" என்றாள்.

"இப்பொழுதே அழைத்துக் கொண்டு வருகிறேன் அம்மா!" என்று சொல்லி மிகுந்த உற்சாகத்துடன் ரத்னுவின் வீட்டை நோக்கி ஓடினாள் கிரண். அன்றைய தினத்திலிருந்து அவர்களுடைய போக்கு வரவும் நட்பும் முன்னைவிட பன் மடங்கு பெருகின. இரு குடும்பங்களுக்கும் நட்பு ஏற்பட்டது.

4

மனிதர் தங்கள் வாழ்க்கையில் ஆரம்பம் முதல் முடிவுவரை எத்தனையோ நட்பைப் பெறுகிறார்கள். அதை அறுத்தெறிகிறார்கள். ஆனால் இவைகளில் சில மறதியின் பள்ளத்தாக்கில் திடீரென்று மலையருவியைப் போல் பெருகி ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணிவிடுகின்றன. அப்பொழுது பழைய நினைவின் மிருதுவான இந்த அதிர்ச்சி, கணத்திற்குள் ஒரு இன்பத்தையும், நெகிழ்ச்சியையும் உண்டாக்கிவிடுகிறது.

"நேற்று இரவு நான் கனவு கண்டேன். ஸீதா, ரத்னு, எல்லோரும் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களைக் கூப்பிடு அம்மா!" என்று சொல்லி கிரண் பயத்துடன் ஜ்வரத்தினால் கொதிக்கும் தன் இரு கரங்களாலும் தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

குழந்தையின் கோமள ஹிருதயத்திலிருந்து அநாயாசமாகப் பொங்கும் வேதனையைத் தாய் நன்கு உணர்ந்தாள். அவள் மனதில் கல்கத்தாவை விட்டுப் புறப்பட்ட அன்றும் அதற்கு முன்னும் நடந்த நிகழ்ச்சிகள் படம்போல் விரிந்தன.

சாயங்காலம் மின்சார விளக்கொளியில் குழந்தைகளெல்லாம் வருத்தமாக உட்கார்ந்திருந்தார்கள். மலரினும் மேன்மையான அவர்களுடைய ஹிருதயங்கள், தங்கள் தோழிகளைப் பிரிய வேண்டுமே என்ற பயத்தினுலும் வருத்தத்தினுலும்கலங்கி நின்றன. அவர்களுடைய நிலைமையைக் கண்ட தாய் "ரத்னு! லாகூருக்குப் போனதும் ஒரு பெரிய வீடு வாங்கப் போகிறோம்! பிறகு உங்களையும் அங்கேயே அழைத்துக்கொள்கிறேன். என்ன, வருகிறாயா?" என்று கேட்டாள்.

குழந்தைகளின் முகங்கள் மலர்ந்தன. ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு ஒரு புதிய இன்பத்தைக் கற்பனை செய்தார்கள்.

"லாகூருக்குச் சென்று நாம் ஒரே பள்ளிக்கூடத்தில் படிப்போம், ஒரேமாதிரி ஆடையணிந்து செல்வோம். மூவரும் சகோதரிகள் என்று எல்லோரும் சொல்வார்கள், நம் மூவருக்கும் ஒரே தனி அறை. ஸூர்யாவையும் ரவியையும் கூட வைத்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் தொந்தரவு செய்வார்கள்!" என்றாள் கிரண்.

புறப்படும் தினத்தன்று முத்து மாலை வளையல் இவைகளை பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஞாபகச் சின்னமாகக் கொடுத்து விடைபெற்றுக் கொண்டனர். அப்பொழுது அந்தத் தாய் உள்ளத்திற்குள் யாரோ ஒருவர் புகுந்து "எப்பொழுதிற்கும்! எப்பொழுதிற்கும்!" என்று கூறுவதைப் போல் இருந்தது. அவள் உள்ளம் குழைந்தது. உலகில் யார் யாருடையவர்? இவர்கள் சந்தித்தார்கள். பிரிந்தார்கள். இப்பொழுது அவர்கள் எங்கே இருக்கிறார்களோ? யார் கண்டார்?

ஜ்வரத்துடன் தூங்கும் கிரணின் கண்களில் அரும்பிய கண்ணீரைக் கண்டு தாரா தேவி திடுக்கிட்டாள். அவள் தலையணைக்கருகில் பென்ஸிலினால் கிறுக்கிய ஒரு கடிதம் கிடந்தது. அதை மெள்ள எடுத்தாள். அதில் "அன்புள்ள ரத்னு! ஸீதா! எனக்கு உங்கள் கனவு வருகிறது. நான் ஸ்நானம் செய்யப் போகும்போதும், தலை வாரிக் கொள்ளும் போதும், சாப்பிட உட்காரும் போதும், நாம் ஒன்ருக இருப்பதாகவும், ஒன்ருக விளையாடுவதாகவும் சண்டைப் போட்டுக் கொள்வதைப் போலவும் தோன்றுகிறது. நான் தீபாவளியன்று நிறைய சீனு வெடி வெடித்தது கூட நினைவுக்கு வருகிறது. இந்தத் தடவை தீபாவளி எனக்குப் பிடிக்கவேயில்லை. பள்ளிக் கூடத்தில் எனக்குத் தோழி ஒருவரும் இன்னும் கிடைக்கவில்லை. நேற்று இரு சிறுமிகள் பள்ளிக் கூடத்தில் ஒரு மூலையில் பேசிக் கொண்டிருந்தார்கள் அப்பொழுது எனக்கு அழுகை வந்து விட்டது. அழுது...... அழுது......"

கடிதத்தில் இதுவரை தான் இருந்தது. இதற்குமேல் இருந்தவை கண்ணீர்த் துளிகள் விழுந்ததால் சரியாக விளங்கவில்லை.

ஆனால் தாரா தேவியின் தாய் உள்ளத்திற்கு அந்த விளங்காத பாகமும் விளங்கிவிட்டது.

பிரிட்டன் கரையோரப் பாதுகாப்பு



பிரிட்டனின் சமுத்திரக் கரை முழுதும் பெரிய வாய்கொண்ட பீரங்கிகள் அமைக்கப் படுகின்றன. அவற்றில் ஒன்றை படத்தில் பார்க்கலாம்.

ரூ. 60,000 பெருமானமுள்ள
ஆபரணங்கள் வழங்கப்பட்டன

உலகின் எட்டாவது அதிசயம். அமெரிக்கன் நியூ கோல்டு எங்கள் சிருஷ்டி. அது இந்தியா பூராவும் பிரபல்யம் அடைந்துவிட்டது. அதற்கு அறிமுகமே தேவையில்லை. பத்திரிகைகளும், பொது மக்களும் அதை எங்கும் புகழ்கிறார்கள். அதன் தெமிகல் நிறம் எப்பொழுதும் தங்க நிறமாகவே இருக்கிறது. இந்தத் தங்கத்தைக்கொண்டு நீங்கள் சிறந்த ஆபரணங்களை செய்து கொள்ளலாம்.

இந்த அமெரிக்கன் நியூ கோல்டை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் ஒரு சாம்பிள் செட் விநியோகம் செய்ய நாங்கள்நிச்சயித்துளேளாம்.

இந்த செட்டில் உண்மையான அமெரிக்கன் நியூகோல்டு 6 தோலாவும். ஒரு ஜதை புது மோஸ்தர் வளையல்களும் ஒரு ஜதை மூக்குத்திகளும் 2 பம்பாய் மோஸ்தர் மோதிரங்களும், ஒரு ஜதை தோடுகளும் இருக்கும்.

AMERICAN NEW GOLD WORKS, (S.M.W) Dina Nagar (Punjab)

சிறந்த மூன்று ஆயுர்வேத ஔஷதங்கள்

(வியாதி விபரம் தபால் பில்லையுடன் எழுதி சிகிச்சை பெறுக.)

சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

நவநாகரீகம்

★

ஒரு புடவை

★

காசினி எழுதியது

***'ரஜினி கட்டி இருந்தது என்னமோ ஒரு துணிப் புடவைதான்! இருந்தாலும் எவ்வளவு அழகாக இருந்தது!' என்று கூறி மாலினி பெருமூச்சு விட்டாள்.

'ஆமாம்: ரொம்பவும் நன்ருகத்தான் இருந்தது! ஏழெட்டு ரூபாய்களுக்கு உள்பட்ட விலைதான் இருக்கும்! இருந்தாலும் எவ்வளவு நாசூக்காக இருந்தது!' என்று சுலோசனு ஒத்துப் பாடினுள்.

'அது என்ன அவ்வளவு அதிசயமான புடவை?' என்று லேடி சின்னையாவின் பெண் கேட்டாள்.

'அதுதானே தெரியாமல் தவிக்கிருேம்' என்ருள் சுலோசனு.

'அந்தப் புடவை அவளுக்கு அவ்வளவு பொருத்தமாக இருந்தது என்று நினைக்கிறேன்! அதுதான் அப்படி பார்ப்பவர் மனதைக் கவர்ந்தது!' என்ருள் நளினுதேவி.

'ஏதேது புடவையின் அழகில் ஈடுபட்ட நீங்கள் கவி பாட ஆரம்பித்து விடுவீர்கள்போலிருக்கே?' என்று லேடி சின்னையாவின் மகள் நகைத்தாள்.

புடவை மட்டும் இல்லை; அவள் அலங்காரம் அப்படி ஒத்து அமைந்திருந்தது! என்றேன்.

கொஞ்சம் அதை விஸ்தாரமாக வர்ணித்துத்தான் சொல்லுங்கோளேன்! என்ருள் இது வரை மௌனமாக இருந்த பங்கஜம்.

அவர்களுக்குச் சொன்னதையே இதோ சுருக்கமாக உனக்கும் எழுதி இருக்கிறேன். ரஜினி நல்ல உயரமாக பூசினுப் போல் இருப்பாள். தலையில் கறு கறு என்று மயிர் அடர்ந்து இருக்கும். நல்ல சிகப்பு என்று சொல்லுவதற்கில்லை. களை பொருந்திய ஒருவித சாந்தம் நிறைந்த முகம். தற்காலத்திய அமைதியின்மை, பரபரப்பு, சஞ்சலம் இதெல்லாம் இவளிடம் கிடையாது என்று வைத்துக்கொள்ளேன்.

இவள் சிகப்பும், வெளுப்பும் கலந்த புடவை கட்டி இருந்தாள். மங்கலான வெள்ளைப் பட்டை; இதில் நெடுக கோணல் கோணலான விளும்பு உள்ள சிறிய, சற்றே பெரிய வட்டங்கள்: வட்டங்களின் ஓரம் இதே மங்கலான வெள்ளை தான். வட்டங்கள் நடுவில் மங்கலான நீல, ஊதாப் புள்ளிகள். மிகவும் மங்கலான சிகப்புப் பட்டை; இதே வட்டங்கள், புள்ளிகள். இந்தப் புடவையின் தோற்றம் புராதனக் கோயில்கள், பண்டை காலத்து நாகரீகம் இவைகளை நினைவு மூட்டிற்று, புடவை மெல்லியதாகவே இருந்தது. கரை என்றும், தலைப்பென்றும் வித்தியாசமாகப் போடவில்லை.

ரஜினி கூந்தலை ஒரு பெரிய பிச்சோடாவாகப் போட்டு, இதில் பழுப்பு நிற ரோஜாப் பூவை இலையுடன் பறித்துச் சொருகி இருந்தாள். கழுத்தில் ஐந்தாறு வடம் முத்துக்கள் போட்டிருந்தாள். காதில் ஒரு பெரிய தோடு; வைரமில்லை; தளுக்குகள் தட்டி கலப்பு லோகத்தில் செய்யப்பட்டது. இது பளிச்சென்று இருக்காமல் மங்கலாகவே இருந்தது. நல்ல ஆழ்ந்த கருஞ்சிகப்பு மங்களூர் குங்குமத்தில் நெத்தியில் சற்றே பெரிதான பொட்டு வைத்திருந்தாள்.

ஒரு வளையல்

இவள் கையில் போட்டிருந்த வளையல் ரொம்பவும் நேர்த்தியாக இருந்தது. தங்கமில்லை, இதுவும் ஒரு தினுசுக் கலப்பு லோகத்தில் செய்தது தான். பாம்பு மாதிரியில் செய்திருந்தது. முதலில் பாம்பின் தலை பிறகு கொட்டுகள் விழுந்து தளுக்குத் தளுக்கான உடல் இது முதலில் ஒரு சுற்று வந்து மறுபடியும் முறுக்கிக் கொண்டிருந்தது. இது நெருக்கமாக இல்லாமல் மிகவும் இடம் விட்டு முறுக்கின தாம்பக் கயிர் போல் இருந்தது. வால மறுபடியும் தலைப்பக்கம் வந்து இரட்டைத் தலைப் பாம்பு மாதிரியில் ஆனல் சற்றே குறுகித் தொங்கிறது. தங்கமில்லை என்று முன்னமே சொன்னேன். இந்த லோகம் ஏற்கனவே தொங்கிப் படியும் தன்மை உடையது. துவளும் குணம் உடையது என்று வைத்துக் கொள்ளேன். மேலும் வளையலுக்குப் பாம்பின் உடல் தோற்றம் ஏற்படுவதற்காக, சிதள், சிதளாகச் செய்தும் இருந்தது. இது கையுடன் துவண்டு படிந்து அழகாக இருந்தது. விரைத்து நிற்கவில்லை. மேலும் பள பளப்பாக இருக்காமல் சற்றே மங்கி, லேசாகக் கறுத்துக் காட்டிற்று. வளையலை கழட்டிப் போட, கொக்கி, கண்ணுக்குத் தெரியாமல் தந்திரமாக வைத்திருந்தது,

ஏற்றுப்போல் சட்டை போட்டு, காலில் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டி இருந்தாள். மெல்லிய பாதசரம் ஒன்றும் போட்டிருந்தாள். அவள் தோற்றம் நாகரீகம் முதிர்ச்சி அடைந்த ஒரு அழகிய பண்டைக் காலத்துப் பதுமை உயிர் பெற்று வந்ததுபோல் இருந்தது. மிகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் இருந்தது.

தளி வடாம்

அலங்காரங்களைப் பற்றிப் பொதுவாகக் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தோம். பிறகு சுலோசனு, 'அத்தை எங்கே? அவரை அரிசி தளிவடாம் போடும் தினுசைக் கேட்க வேணுமே?' என்ருள்.

'என்ன திடீரென்று அரிசித் தளிவடாத்தில் மோகம்?' என்ருள் மாலினி.

'எனக்கு இல்லை; என் நாத்தனுர் பெண் தலைச்சன் பிள்ளையாண்டிருக்காளாம்! அரிசித் தளிவடாத்துக்கு மசக்கை செய்கிறதாம். என் நாத்தனுர் பண்ணிக் கொடுத்ததை...இது ஜெவ்வரிசி வாசனை அடிக்கிறது! எப்படியோ இருக்கு! பாட்டி வடாம் மாதிரியில் புளிப்புடன் ருசியாக மணமாக இல்லை என்று விட்டாளாம். அதுதான் உங்க அத்தையைக் கேட்டு எழுதும்படி நாத்தனுர் எழுதி இருக்கார்!' என்ருள்.

அத்தை சொன்ன முறை இது தான், அரிசிக் குருணை இல்லாமல் கொழித்து எடுத்து, சுத்தம் செய்து, நன்ருகக் களைந்து, இடித்து, முறுக்கு மாவு மாதிரியில் மாவு சல்லடையில் சலித்து, தண்ணீர் விட்டு, சற்றுத் தளரப் பிசைந்து வைக்க வேண்டும், இரண்டு நாள் கழித்து இதை அம்மியிலோ, உரலிலோ நன்ருக இழைக்க வேண்டும். மறு நாள், ஓமமோ, ஜீரகமோ, எள்ளோ, அவர் அவர்கள் இஷ்டம்போல் போட்டு, கரைத்துக் கொள்ள வேண்டும், திட்டமாக உப்பு, கொஞ்சம் பெருங்காய ஜலம் விட்டு, வாழை இலையிலோ, அல்லது பாதம் இலையிலோ தளி வாடம் எழுத வேண்டும், ஆவியில் வெந்து, உரித்து உலர்த்த வேண்டும். இதை முதல் நாளே அதிகம் உலர்த்த விடக்கூடாது. முட, முட என்று உடைந்து விடும். வாழை இலையில் எழுதுவதாக இருந்தால், இலையை கிழித்து. துண்டுகளை அடுக்கி, முதல் நாளே ஒரு பாரத்துக்கு அடியில் வைத்தால், சற்றே வதங்கிப் படிந்திருக்கும். இது வடாம் எழுத சௌகரியமாக இருக்கும் ரொம்பவும் லேசாக மாவைக் கரைத்து விடக் கூடாது, கோல மாவைவிட கட்டியாக இருக்க வேண்டும். எழுதும் போதும் அதிக லேசாக எழுதாமல் இருந்தால், சுட்டு உபயோகிக்கவும் சௌகரியமாக இருக்கும். மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்.



கர்ப்பச் சேதத்துக்குப்

பிறகும், பிரஸவத்துக்குப் பிறகும், நீடித்த ஜுரங்களுக்குப் பிறகும் தலைமயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜுரங்களுக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹிதமான ஜுரமானுலும் மயிர் அபரிமிதமாகக் கொட்டும். சில சமயம் கூந்தல் விடாமல் உதிர்ந்து கொண்டேயிருக்கும். எந்தக்காரணத்தால் மயிர் உதிர்ந்த போதிலும் கேசவர்த்தினியைக்கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக்கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்பகேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணு 12; மேற் செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் – கோயமுத்தூர்.

கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி,
வைத்தியசாலை,
பழனி. S. I.

ஜம்மியின் லிவர்க்யூர்மூலம் புனர்ஜன்மம்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி கோய்களை குணப்படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருஷ காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்,
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்,
மற்றும் பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினுப்பள்ளி.

இந்த வாழ்க்கை! ★ ★

★ ★

ஸ்ரீமதி
விஜயலக்ஷ்மி பண்டிட்
எழுதியது

★

"அந்நிய ஆட்சி அநேக ஆண்டுகள் நம் நாட்டில் நிலவியதால், நம்மை அடிமைப் படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட கல்வி முறையை நாம் ஆக்ஷேபசமாதானமேதுமின்றி ஸ்வீகரித்து வந்திருக்கிருேம். நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் பயிற்சி நாம் வாழ்க்கையின் கருத்தை அறிந்து கொண்டு அதில் பங்கெடுத்துக்கொள்வதற்கு வழி காட்டுவதாக இல்லை: ஆனல் நம்மை ஆளுவோரின் நடையுடை பாவனைகளைப் பின்பற்றத்தான் அது நமக்குக் கற்பித்திருக்கிறது. சுயமாக சிந்திக்கும் சக்தியை இழந்த நாம் மேனுட்டு கோஷங்கள் சிலவற்றைக் கிரஹித்து, அவற்றிற்கனுகுணமாக நம் வாழ்க்கையை உருப்படுத்திக்கொண்டிருக்கிருேம். தற்போதைய கல்வி முறையினுல் எத்தகைய மஹத்தான கெடுதல் உண்டாக்கியிருக்கிறது என்பதை நம்மில் பலர்: இன்னும் உணர்ந்தபாடில்லை."

– என்கிருர் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்.

★

உலக நிலை

நம் முன் தோன்றியிருக்கும் பல பிரச்னைகளைப்பற்றி நான் இப்போது ஒளியாமல் என் அபிப்பிராயத்தை வெளியிடப்போகிறேன். தற்சமயம் எங்கு பார்த்தாலும் ஒரே அமளி: உலகெங்கும் கொதிப்பும் அக்கிரமமும் அடக்குமுறையும் தான் இருக்கின்றன. ஒரு சிலரது பேராசை காரணமாக அநேகர் அவதிப்படுகின்றனர். ஆகவே நம் நாட்டிற்கான திட்டத்தை நாம் தயாரிக்கும்போது, நம் தேசத்தின் ஸ்திதியையும் சர்வதேச நிலைமையையும் நாம் மனதில் முக்கியமாகக் கொள்ளவேண்டும். அவை எவ்விதம் நமது திட்டத்தைப் பாதிக்கும் என்பதையும் நாம் பிரதானமாகப் பாவிக்கவேண்டும்.

ஐரோப்பா சென்ற சமயம்

நான் சமீபத்தில் மேனுடு சென்றிருந்தேன். என் ஐரோப்பிய விஜயத்தின் சமயம் அங்கு அதிக நெருக்கடி. மூனிச் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு சற்று முன்பு தான் நான் ஸெக்கோ-ஸ்லோவேகியாவில் தங்கியிருந்தேன். ஒப்பந்தம் ஏற்பட்ட சமயம் நான் லண்டனில் இருந்தேன். நம் மக்களை நீடித்த காலமாக ஒடுக்கி வைத்திருக்கும் சக்திகள் தான், 'ஸெக்கோ-ஸ்லோவேகியாவைக் காட்டிக் கொடுப்பதற்கும் காரணமாயின: அபிஸீனியா வீழ்ச்சியின் போதும் இவை வாளா விருந்தன. இதே சக்தி, ஸ்பெயினில் தலையிடுவதையும், ஆஸ்திரியாவுக்குள் புகுவதையும். சீனுவை ஆக்ரமிப்பதையும், பாலஸ்தீனத்தில் சச்சரவுண்டாக்கியிருப்பதையும் நாம் காண்கிருேம். ஆகவே நம் நாட்டின் எதிர் காலத்திட்டத்தை நாம் தயாரிக்கும்போது இந்த சக்தி இங்கும் புகுந்து வேலை செய்யும் என்பதை மறந்துவிடக்கூடாது.

வேடிக்கை பார்க்க முடியாது

ஸ்திரீ புருஷர்களும், சிறுவர் சிறுமிகளும், தாங்கள் ஒவ்வொருவரும் எந்தக் கக்ஷியில் சேர்ந்து கொள்வது என்றும் தீர்மானிக்கும் காலம் வந்துவிட்டது. எளியாரை வதக்கி வாட்டும் சக்தியை ஆதரிப்பதா, அல்லது மனுஷத் தன்மை, சகோதரத்துவம், நியாயம் இவற்றை விரும்பும் சக்தியைப் பலப்படுத்துவதா என்பதே முன் நிற்கும் விஷயம், உலகத்தில் நடந்து வரும் இந்த நாடகத்தை மதிற்சுவர் மேல் உட்கார்ந்து கொண்டு நாம் இனி வேடிக்கை பார்க்க முடியாது. நாம் ஒவ்வொருவரும் இதில் நடிகர்கள்: நம் பாகத்தை நாம் நடித்தே தீர வேண்டும்: சரியாக நடிப்பதா அல்லவா என்பது நம்மையே பொறுத்திருக்கிறது.

மாணவர்களுக்கு உபதேசர்

சென்ற சில மாத காலமாக, தங்கள் வாழ்க்கையை, எந்த நோக்கத்துடன் நடத்துவது என்பது பற்றி மாணவர்கள் பல தப்பான கருத்துகளைக் கொண்டு வந்திருக்கின்றனர். இதனுல் பல விரும்பத்தகாத விளைவுகள் தோன்றி, இந்திய மாணவர் கோஷ்டிக்கே அபக்யாதி ஏற்பட்டிருக்கிறது. நான் இதை குறை காணும் நோக்கத்துடன் குறிப்பிடவில்லை: ஆனுல் சில யோசனைகளைக் கொடுக்கிறேன். இஷ்டமிருந்தால் ஸ்வீகரியுங்கள்: இல்லாவிட்டால் உதறித் தள்ளுங்கள். நம் மாணவர்களிடை கட்டுப்பாடும் ஒழுங்கு முறையும் தற்போது அடியோடு கிடையவே கிடையாது: சமீப காலத்தில் அவர்கள் நடத்திய சில ஆர்ப்பாட்டங்கள் அவர்களுடைய குறைகளுக்கு பொருத்தமில்லாதபடி இருக்கின்றன. தகாத சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்களது தேசபக்தியைக் காட்டியிருக்கின்றனர்: இதனுல் அவர்களது கக்ஷியும், அவர்களுக்கு ஆதரவு கொடுக்க முன் வந்தவர்களும் பலவீனப்படுத்தப்பட்டிருக்கின்றனர். மாணவர்ச்சங்கங்கள், இதர காரியங்களில் ஈடுபடு முன் கட்டுப்பாடாக இருக்கும் விதத்தைக் கற்க வேண்டும். பிறர் கட்டுப்பாடு பண்ணுவதால் பயன் இல்லை: மாணவர்கள் தங்கள் படிப்பு காலத்தில் இருக்கும் கட்டுப்பாட்டை மீறுவதிலிருந்தே இது ப்ரத்யக்ஷமாகிறது. அவர்களுக்குள்ளேயே கட்டுப்பாடு உணர்ச்சி உதயமாக வேண்டும். இதனுல் லக்ஷியசித்தி சீக்கிரம் கிட்டும் என்றறிந்தால், அவர்களே இதைச் செய்யத் தயங்க

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் தமது சகோதரர் பண்டித ஜவஹர்லால் நேருவுடன் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலிருந்து வெளியே வரும் காட்சி

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டும் ஸ்ரீமதி இந்திரா நேருவும்

மாட்டார்கள். அவர்கள் தம் தம் வாழ்க்கையை ஆரம்பிக்கும் தறுவாயில் இருக்கிறார்கள்; இந்த உலகத்தை அவர்கள் ஜயித்துவிடலாம்: அது வலிமையின் மஹிமையால் சாத்யமல்ல: அன்பும் சேவா உணர்ச்சியும் தான் அதற்குத் தேவை. முதலில் நாமே நம்மை ஜயிக்க வேண்டும்: அப்புறம் வினயத்துடன் புதிய உலக முறையை நிர்ணயிக்க நாம் முற்பட வேண்டும்.

நன்னம்பிக்கை உதயம்

உலகில் தற்சமயம் சோகமே நிறைந்திருக்கிறது. யுத்தம் எந்த சமயத்திலும் ஆரம்பிக்கலாம்: இனி வரும் எந்த யுத்தமும் சண்டை போடுபவர்களுடன் மட்டுமே நின்றுவிடாது: இந்த யுத்தத்திற்குக் காரணமாயில்லாத பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு, இதனால் நாசமும், நஷ்டமும், துயரமும் அதிகரிப்பது நிச்சயம். நான் முன்னமே குறிப்பிட்டபடி, அதிகாரம் வகித்து ஆட்டி வைக்கும் சிலர் தான். இந்த பல்லாயிரக்கணக்கான பேர்கள் கஷ்டப்படுவதற்குக் காரணபூதர்களாகின்றனர். இந்த சமயம் உலகத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே இருட்டாக இருந்தபோதிலும், உலகம் ஒன்றுபடவேண்டும் என்ற கருத்துடன் பிறர் பரிஹாஸத்தையும் இடையூறுகளையும் பொருட்படுத்தாமல் சில ஸ்திரீ புருஷர்கள் காரியத்தில் புகுந்திருப்பது தான் நன்னம்பிக்கையையும் ஆஸ்வாஸத்தையும் நமக்கு அளிக்கிறது: உலகம் யாவும் ஒன்று தான் என்ற எண்ணமும், மானிட கோஷ்டி முழுமைக்குமே ஒரே நியாயமும் சுதந்திரமும் இருக்க வேண்டும் என்ற கருத்தும் அறிவாளிகளிடையே அதிகம் வளர்ந்து வருகின்றன.

மஹத்தான பொறுப்பு நிர்வாகம்

உலக சுதந்திரத்திற்கும் இந்தியாவுக்கும் எவ்வளவு முக்கிய சம்பந்தம் இருக்கிறது என்பதை நாம் பரிபூரணமாக உணரவில்லை போலும்! அடிமைப்பட்ட இந்தியா, சாம்ராஜ்ய சித்தாந்தம் செழிப்புற உதவுகிறது: ஆனால் சுதந்திர இந்தியாவில், ஜனநாயகம் ஜயகோஷத்துடன் சோபிக்கும்: அடக்கி வைக்கப்பட்ட இதர நாடுகளும் மோக்ஷம்பெற வழி பேற்படும். ஆகவே நாம் நமது சுதந்திரத்திற்காக மட்டுமல்லாமல், அடக்கிவைக்கப்பட்ட இதரர்களுடைய விடுதலைக்காகவும் போராடுகிறோம். இந்த மஹத்தான பொறுப்பு யுவர்கள் மீது தான் இருக்கிறது. யுவர்கள் தான் இந்த சுதந்திர விளக்கை அணையாமல் பாதுகாக்கக் கூடியவர்கள், மிகவும் ஜாக்கிரதையாயிருந்தால்தான் சுதந்திரம் சித்தித்து நிலைபெறும் என்பதை மறக்காதீர்கள்: அது, எதிரிகளைப்பற்றி ஜாக்கிரதையாயிருப்பதல்ல: நம்மைப் பற்றி நாமே ஜாக்கிரதையாயிருப்பது தான் அது: சுதந்திரம் பெற்றுவிட்டால், மஹத்தான பொறுப்பு ஏற்படுகிறது: இந்த பொறுப்பை நிர்வகிக்க நாம் ஒன்றுபட வேண்டும்.

நம் கடமை

இந்தியாவின் எதிர்காலம் நன்கு சோபிக்க வல்லது. இந்த புதிய சகாப்தம் ஆரம்பமாவதற்குள், நாம் நமது லக்ஷியத்தையடைய நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும். நம் சரித்திரத்தில் இந்த புது அத்தியாயம் ஆரம்பிப்பதற்கு முன், சுதந்திர மக்கள் தங்கள் வாழ்க்கையைப் பற்றி கொண்டிருக்கும் அடிப்படையான கருத்துகளை நாமும் ஏற்று, நம்முடைய தற்போதைய மனோபாவத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்: இது தான் முதல்படி: பிறகு கல்வி முறை, சேவை, தேசபக்தி இவை சம்பந்தமாகவும் நமது அபிப்பிராயங்களை நாம் திருத்திக்கொள்ளவேண்டும்.

கல்வி முறையின் கெடுதி

அந்நிய ஆட்சி அநேக ஆண்டுகள் நம் நாட்டில் நிலவியதால் நம்மை அடிமைப்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட கல்வி முறையை ஆக்ஷேப சமாதானமின்றி நாம் ஸ்வீகரித்து வந்திருக்கிறோம். நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் பயிற்சி, நாம் வாழ்க்கையின் கருத்தை அறிந்து அதில் பங்கெடுத்துக்கொள்வதற்கு வழிகாட்டுவதாக இல்லை: ஆனால் நம்மை ஆளுவோரின் நடையுடைபாவனைகளைப் பின்பற்றத்தான் அது நமக்குக் கற்பித்திருக்கிறது. சுயமாக சிந்திக்கும் சக்தியை இழந்த நாம், மேனாட்டு கோஷங்கள் சிலவற்றைக் கிரஹித்து, அவற்றிற்கனுகுணமாக நம் வாழ்க்கையை உருப்படுத்திக்கொண்டிருக்கிறோம், தற்போதைய கல்வி முறையினால் எத்தகைய மஹத்தான கெடுதல் உண்டாகியிருக்கிறது என்பதை நம்மில் பலர் இன்னும் உணர்ந்தபாடில்லை, மத்ய வகுப்பைச் சேர்ந்த சிறுவர் சிறுமிகளுக்கு, பள்ளிக்கூடத்திற்கோ அல்லது கலாசாலைக்கோ போய் படிப்பது ஒரு பழக்கமாகிவிட்டது. இதன் முடிவு என்னவாகும் என்பதைப் பற்றி ஒருவரும் சிந்திப்பது கிடையாது, திறமையற்றவர் பள்ளிக்கூடத்திற்கோ அல்லது கலாசாலைக்கோ போய் வருவதால் பிரயோஜனம் கிடையாது. படிக்கும் சிறுவர் சிறுமிகள் பயன் பெறுவது அவர்களது ஊக்கத்தையும் சிரத்தையையும்தான் தழுவியிருக்கிறது. பள்ளிக்கூடத்திற்கும் கலாசாலைக்கும் போய் படிக்கும் மாணவ மாணவிகள், தங்கள் தேசத்தின் தேவைகளையறிந்து அதற்கு உதவும்படியான படிப்பு பெற வேண்டும் என்பதே நாம் மேற் கொள்ளவேண்டிய முயற்சியாகும்.

வாழ்க்கைக் கலை

தங்களது கொள்கைகளுக்காகவும் தாய்நாட்டிற்காகவும் தியாகம் புரிந்த பல உத்தம ஸ்திரீ புருஷர்கள் நம் நாட்டில் அதிகம். தேசத்திற்காக வாழவே நாம் கற்க வேண்டும். இது சுலபமானதல்ல: நமது ஜீவியத்தின் தரங்களையும் நாம் அவ்வப்போது பரிசீலித்து வரவேண்டும்: பல தரங்களைக் கிரஹித்து ஒரே சீராக வாழ்க்கையை நடத்துவது அதிசய கலையாகும்: இந்த வாழ்க்கைக் கலையை நம் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் கட்டாயம் கற்க வேண்டும்.

சந்தோஷம் பெற வழி

பொருத்தமற்ற படிப்பு, பொய்யான வாழ்க்கைத்தரங்கள் ஆகியவை காரணமாக தேசத்திற்குத் தங்களால் இயன்றதைச் செய்யாத யுவர்களிடம் எனக்கு அனுதாபம் கிடையாது. ஆகவே சிறுவர்கள் அந்நிய ஆட்சியைப் பார்த்து பீதியடையாமல், சீக்கிரத்திலேயே சுதந்திர இந்தியாவின் பிரஜைகளாகலாம் என்ற உணர்ச்சி கொண்டு, உள்ளத்தில் சத்தியத்தையும் சேவா புத்தியையும் வளர்த்து, உழைக்கவும், சேவை புரியவும் முன் வரவேண்டும்: இதனால்தான் அவர்களுக்கும் நாட்டிற்கும் நலன் கிட்டும். ஊழியம் புரியவும் சேவை செய்யவும் கற்றுக்கொள்ளுங்கள். ஊழியம் புரியும்போது நம் பலவீனம் வெளியாவதுடன் நம் பலமும் விசதமாகிறது. ஊழியத்தின் மூலம் நாம் நம்முடைய தன்மையை பரிபூரணமாகக் காட்ட முடியும்: நமது ஊழியத்தால் பிறர் உள்ளத்திலும் நமது கருத்துகள் இடம்பெறும்படி நாம் செய்ய முடியும், ஊழியம்தான் நமது உட்புற சக்தியைப் பிரகாசப்படுத்துகிறது. மாணவர்கள் கடமை மஹத்தானது. அவர்களுக்கும் பல கஷ்டங்கள் நேரிடக்கூடும், வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே, அவர்களுக்கு நல்ல அஸ்திவாரம் இருந்தால் பின்னர் அவர்களுக்கு மஹத்தான சந்தோஷம் கிட்டும்: திடமனதுடனும் தைர்யத்துடனும் இடையூறுகளைத் தாண்ட முடியும்; வாழ்க்கை என்ற இந்தப்பெரிய வேட்டையில் அவர்களுக்குப் புதிய புதிய அனுபவங்கள் ஏற்படும்.

Vijaya Lakshmi Pandit

சிறுவர் கதை

★

மூன்று முனிவர்கள்

★

"கே. ஜி. கே."

முன்னொரு காலத்தில் மிகுந்த தபஸ்விகளான மூன்று முனிவர்கள் இருந்தனர். அவர்களின் பெயர் முறையே ஏகர், த்விதியர், த்ருதர் என்பன. இம்மூவரும் மிகுந்த தபஸ்விகளாக இருந்தாலும், கடைக் குட்டியான த்ருதர் தான் மிகுந்த புத்திசாலியாயும், குணவானுயுமிருந்தார். ஆகவே லோகத்தில் த்ருதரையே மிகவும் கொண்டாடினர். ஆனால் த்ருதரின் தமயன்மார் இருவரும் தங்களை விடச் சிறியவனான த்ருதனுக்கு இவ்வளவு புகழா என்று மிகவும் அசூயைப் பட்டனர். இருப்பினும் என்ன செய்வது? அவர்களது பொறுமை அதிகரிக்க அதிகரிக்க த்ருதரின் கீர்த்தியும் பெருகிக்கொண்டே வந்தது.

இவ்வித மிருக்கையில் ஒரு சமயம் அம் மூன்று ரிஷிகளும் ஒரு யாகம் செய்வதென்று தீர்மானித்தனர். அதற்காக மற்றொரு காட்டு மார்க்கத்தில் வசிக்கும் சில ரிஷிகளுக்கு அவ் விஷயத்தைத் தெரியப்படுத்திவிட்டு வர எண்ணி, மூன்று ரிஷிகளும் புறப்பட்டனர்.

மூன்று முனிவர்களும் பாதி வழி கடந்த சமயத்தில் எதிர்பாராமல் ஒரு பயங்கரமான புலி ஒன்று அவர்களை நோக்கி வேகமாய்ப் பாய்ந்து ஓடி வரவும், புலியைக் கண்ட முனிவர்கள் மூலைக்கொருவராய் விழுந்தடித்து ஓடினர். அப்படி ஓடுகையில்



தரையோடு தரையாக இருந்த ஒரு பாழுங்கிணற்றில் த்ருதர் தடாலென்று பெரும் சப்த மிட்டபடி விழுந்து விட்டார்.

த்ருதர் கிணற்றில் விழுந்ததை மற்ற இரண்டு பேர்களும் நன்ருகப் பார்த்தாலும் பாராதவர்கள் போலவே காட்டில் ஓடினர். கிணற்றில் விழுந்த த்ருதர் "அண்ணா! அண்ணா!! அண்ணா!!! நான் கிணற்றில் விழுந்து விட்டேன். என்னை எடுத்து விடுங்கள்'' என்று பரிதாபகரமாய்க் கூச்சலிட்டார். ஆனால் பொறுமை கொண்ட தமயன்மார்களோ அந்த அபயக் குரலால் துளிக்கூட நெஞ்சிளகாமல் "எங்களுக்கு வர வேண்டிய கீர்த்தியை எல்லாம் தானே பூண்டு, நம்மை உலகம் மதிக்காதவாறுசெய்த அவன் நல்ல வேளையாய் ஒழியட்டும். சனி தொலைந்தது. நமக்கு இம்சையாக இருந்தவனை கடவுளாகவே வழி செய்து ஒழிய வைத்தார். போகட்டும்'' என்று சந்தோஷமாகச் சென்றுவிட்டனர். பொறுமைப் பேய்க்குடிமையான அவர்கள் மனதில் சகோதர வாஞ்சைகூட அற்றுப் போய் விட்டது.

பாழுங்கிணற்றில் விழுந்த த்ருதரின் கழுத்து மட்டுமே வெளியில் தெரிந்துக் கொண்டிருக்க, மற்ற பாகம் முழுவதும் சேற்றில் புதைந்து கிடக்க, த்ருதர் அந்த நரகத்துக் கொப்பான சேற்றில் புதையுண்டு பல நாள் தவித்துக் கொண்டிருந்தார். அவரது தேகத்தை புழு, பூச்சிகள் தின்றுக் கொண்டு வந்தன. அந் நிலையில் அவரது மனதில் "ஐயோ, நான் எனது தமயன்மாருடன் உன்னதமான யாகத்தைச் செய்ய வேண்டுமென எண்ணினேனே. எனது எண்ணம் கூடாமல் இப்படிச் செயலற்றவனாகி விட்டேனே'' என்று விசன மடைந்தார். பின்னர் தெளிந்து எனது உடல் செயலற்றுப் போய் விட்டதே தவிர என் மனம் இன்னும் செயலற்றுப் போகவில்லை. ஆகவே நான் மனதினாலேயே மந்திரங்களைச் சொல்லி மனதினாலேயே யாகத்தைச் செய்கிறேன் என்ற தீர்மானத்தை அடைந்தவராய் அப்பொழுதே யாகத்தின் ஒரு அணுக்கூடப் பிசகாமல் மந்திரத்துடன் மானஸீகமான யாகத்தைச் செய்ய ஆரம்பித்து விட்டார்.

அதே சமயத்தில் த்ருதரின் தமயன்மாரான முனிவர்களும் மற்றும் பல முனிவர்கள் புடைசூழ வெகு விமரிசையுடன் யாகத்தைச் செய்ய ஆரம்பித்தனர்.

பாழுங் கிணற்றில் விழுந்த த்ருதர் மானஸீகமாய்ச் செய்யும் யாகத்தில் ஆவிர் பாகம் கொடுக்கும் இடம் வரவும் அதையும் மானஸீகமாகவே கொடுத்தார். அச் சமயம் அவரது உள்ளம் அப்படியே கைங்கரியத்திலீடுபட்டு பரவசப்பட்டிருந்தது. அந்த சமயம் திடீரென தேவகானம் முழங்க சாக்ஷாத் பகவானே பாழுங் கிணற்றடிக்கு வந்து நின்று "ஓ த்ருதா! உனது யாகத்தின் ஆவிர் பாகத்தைப் பெற்றுக் கொண்டேன்'' என்றார்.

"த்ருதா'' என்று கூப்பிட்டதும் மானஸீக உலகினின்றும் திடுக்கிட்டு விழித்து த்ருதர் நிமிர்ந்து பார்த்தார். கண்டார் ஜோதியான பகவானை. எனினும் ஒன்றும் புரியாதவராய் "ஆ! நான் ஒன்றையும் கொடுக்கவில்லையே'' என்றார்.

பகவான் "த்ருதா! உனது அண்ணன் மார்கள் ஆங்கு உள்ளபடி யாகம் செய்து கொண்டிருந்தாலும் பக்தனான நீ பகட்டுக்கோ பெருமைக்கோ நினையாமல் உள்ளன்புடன் பக்தியுடன் மானஸிகமாய்ச் செய்த யாகத்தின் ஆவிர் பாகத்தை தான் நான் பெற்று பரம

த்ருப்தி அடைந்தேன்: ஆகவே உனக்கு வேண்டும் வரத்தை கேள். தருகிறேம்'' என்றார்.

பகவானைக்கண்டு பரவசமுற்ற த்ருதர் "அப்பனே! இனிமேல் என்றும்எனது தமயன்மார்கள் என்னிடம் பகைமை பாராட்டாது அன்புடனிருக்க அருளவேண்டும்.'' என்றார்.

'த்ருதா! அப்படியே அருள்புரிந்தோம்' என்று வரமருளி பகவான் கையைத் தூக்கி ஆசீர்வதிக்கவும், த்ருதர் பாழுங் கிணற்றிலிருந்து வெளி வந்து பகவானைப் பிரார்த்தித்து பரவச முற்றிருக்க, பகவான் மறைந்த பின்னும் வெகு நேரம் அப்படியேயிருந்து, பிறகு தமயன்மாருடன் போய்ச் சேர்ந்து நடந்த விஷயங்களைக்கூறி யாவராலும் கொண்டாடப்பட்டார்.

விலை: அணா 4. — ஸ்டாம்பு அணா 5 அனுப்ப

நவீன முறையில் — தினசரி உதவும்

இகபர பலனளிக்கும் விஷயங்களுடன்

அமிர்தவசனி

தமிழ் வருட பஞ்சாங்கமும் அடங்கியது.

30-வது வருஷ வெளியீடு.

100-க்கு ரூ. 20. — ரயில் செலவு வேறு.

பதிப்பகம் :—54, பந்தர் தெரு, மதருஸ். (மதுரை: 42, தெற்காவணி.) (கோவை: 234, ராஜா தெரு.)

தலைநிறைந்த கூந்தலே முகத்தின் அழகை எடுத்துக்காட்டுவது. கூந்தலே முக அழகை ஆக்குவதும், அழிப்பதும். கூந்தலழகையும்முக அழகையும் இன்றே கேசவர்த்தினியைக் கொண்டு விருத்திசெய்யுங்கள்.

அற்பகேசத்தைவிட அழகுக்கு ஹானி வேறில்லை. இதைப் பரிஹரிக்கக் கேசவர்த்தினியைவிடச் சிறந்த மருந்துமில்லை. இழந்த கூந்தலையும், இளமையையும் கேசவர்த்தினியைக் கொண்டு இன்றே பெறுங்கள்.

அழகுள்ளவர் ஒரு சிலரே. ஆனால் கூந்தலழகையோ கேசவர்த்தினி உபயோகத்தால் ஒவ்வொருவரும் பெறலாம். கேச சம்பத்து படைத்தவர் அதை இழக்காமல் கேசவர்த்தினி கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியால் அதை அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது, விருத்திசெய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12. மேற்செலவுவேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்.

தென் இந்திய ரஸாயன சாலை,

ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்

புளப்புடன் இருக்காமல் சற்றே பழுக்காய் நிறம் தட்டி இருந்தது. கரையில் ஒரு விரல் அகலத்துக்கு மேலான இரண்டு கனமான, எடுப்பான சரிகைக் கோடுகளும், சில மெல்லிய சரிகைக் கோடுகளும் போட்டிருந்தது. தலைப்பும் இப்படித்தான் இருந்தது, மொக்குகளும் சரிகை மொக்குகள்தான். இந்தப் புடவையின் விசேஷம் என்னவென்றால், புடவை புதிய புடவையாக இருந்தபோதிலும், பழைமையினால் உண்டாகும் ஒரு கம்பீரத் தோற்றமும், படாடோபம் இல்லாத களையும் இதில் தென்பட்டது.

இதற்கு ஏற்றாப்போல், யசோதா, கை சற்றே நீளமான கழுத்து, தாழ்வில்லாத ரவிக்கை போல் தோன்றும் சட்டை போட்டிருந்தாள். காதில் லோலக்குப் போடாமல், ஒத்தை முத்து வைத்து செய்த கிராம்பு போன்ற தோடு போட்டிருந்தாள். முத்து நல்ல முத்தில்லை; சுமாருக்கு ஒரு தம்படி வட்டமான செயற்கை முத்துத்தான். கூந்தலைச் சற்றே இருக வாரியே கட்டி இருந்தாள்; நெற்றியின் மேல் தாழ்ந்திருக்கும்படியே வாரி இருந்தபோதிலும், புஸ் புஸ் என்று அதிகத் தளர்த்தியாக இல்லை புதிய வழக்கப் பிரகாரம் காதை மூடித்தான் பின் பக்கம் கொண்டை போட்டிருந்தாள், கொண்டையையும்சற்றே பிருவாகவே போட்டு, கதம்பம் சூடி இருந்தாள். நேர் வகிடு எடுத்து, நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டாக இட்டு இருந்தாள்.

கையில் அகல வளையல் ஒன்று போட்டிருந்தாள்; மற்றொரு கையில் புதிய சம்பிரதாயப்படி ஒரு கை கடிகாரம் போட்டிருந்தாள். கைப்பையும் சடாவும் பழைய-புதிய தினுசாக இருந்தது. நிறைய சரிகை போட்ட பழைய சிகப்புக் கரை ஒன்றை எடுத்து இது செய்திருந்தது. கைப்பை விரைப்பாக இருக்கும்படியாக உள்ளே அட்டை

"சுதேசமித்திரன்" துணை ஆசிரியரும் ஜனரல் மானேஜருமான ஸ்ரீமான் டி. எஸ். விஸ்வநாதய்யர் புத்ரன் சி. சுப்ரமண்யத்திற்கும் எம். எஸ். எம். ரயில்வே ஆடிட்டர் ஸ்ரீ வி. எஸ். மஹாதேவய்யர் புத்ரி சௌ. ஜயலக்ஷ்மிக்கும் சமீபத்தில் விவாகம் நகரில் நடைபெற்றது.

கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி, உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி,
வைத்தியசாலை,
பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஆருடம்கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித கீழ்நூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, வன்சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

மற்ற எல்லா நகைகளுக்கும், கோருவோருக்கு, காட்லாக் எஸ்டிமேட்டுகள் அனுப்பப்படும்.

மூன்று அவசிய குடும்ப ஔஷதங்கள்.

இரண்டும் அணா 10. **ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜனை மாத்திரை** இரண்டும் அணா 10

பாலக்ஸ்—பேதியாக மாத்திரை, டப்பாட்டில் அணா 4.
யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதராஸ் (மாடுங்கா)

கொடுத்து தைத்திருந்தது. சொல்ல மறந்தே போனேனே! கழுத்தில் ஐஞ்சு வடம் கண்டி மணி மாலை போட்டிருந்தாள். பழமையும்-புதுமையும் கலந்து செய்யப்பட்டிருந்த யசோதாவின் இந்த அலங்காரம் மிகவும் நேர்த்தியாகவும், கம்பீரமாகவும், தனிச் சோபையுடனும் விளங்கிற்று.

கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

தூக்கம்

'இந்தப் புடவைகள் எங்கே கிடைக்கிறது?' என்று பங்கஜம் ஆவலுடன்கேட்டாள். 'கிடைக்கும் இடத்தைச் சொல்லி விட்டு, வேறு ஏதோ பேசிக்கொண்டிருந்தோம். இதற்குள் மாலினி சோம்பல் முறித்தாள்.

'இதற்குள் உன் கைகால்கள் தூங்கி விட்டதா?' என்று நளினதேவி கேட்டாள்.

'கைகால் தூங்கவாவது? கண் தூங்கவாவது? அப்புறம் உடம்பு வேறையாகத் தூங்குமா?' என்று என் அத்தை கேட்டாள்.

'இதென்ன அத்தை, இப்படிச் சொல்லுகிறீர்கள்? நாமென்ன அப்படியே மெய்ம் மறந்தா தூங்குகிறோம்; கொஞ்சம், கொஞ்சமாகத்தான் தூங்குகிறோம்?' என்றாள் நளினதேவி.

'அதெப்படி?' என்று பங்கஜம் கேட்டாள்.

'முதலில் தூக்கம் ஏற்படும்போது, கண் மூடிக் கொள்ளுகிறது: பிறகு வாயில் ருசி தெரிவதில்லை; அப்புறம் வாசனை நாசியில் தெரிவதில்லை;' என்று நளினதேவி கூறிக்கொண்டிருக்கும் போதே:—

'அப்படி என்றால்?' என்று என்னுடைய அத்தை குறுக்கிட்டாள்.

'அதாவது, ஒரு புஷ்பத்தை இவ்விதம் அரை நித்திரையில் ஆழ்ந்துள்ளவன் மூக்கின் அருகில் கொண்டு போனால், வாசனை தெரியாது; இதற்கும் ஆழ்ந்த நித்திரை ஏற்படுவதற்கும் இடையில் கேட்கும் சக்தி மட்டும் இருந்துகொண்டிருக்கும். இதனால்தான் ஒரு சப்தம் கேட்டதும் திடுக்கிட்டு எழுகிறோம்; அல்லது சொப்பனமாவது ஏற்படுகிறது!' என்று நளினதேவி விளக்கினாள்.

'அப்புறம்?' என்றாள்பங்கஜம்.

'கடைசியில்தான் தொட்டாலும் தெரிவதில்லை. நல்ல நித்ரையில் இருந்தாலும்கூட, ஒரு ஈ வந்து உட்கார்ந்தால், தூக்கத்திலேயே முகத்தைச் சுளித்து கையை அசக்கி அதை விரட்ட முயற்சி செய்வார்கள். இப்படி ஐம்புலன்களும், ஒன்று ஒன்றாக நித்ரையில் ஆழ்வதுபோலவே, சரீரம் பாகம், பாகமாகத்தான் முழு நித்திரையில் இறங்குகிறது! என்றாள்.

அதாவது, முதலாவது கைகளும், கால்களும், பிறகு உடலும், பிறகு தலை, கழுத்தில் உள்ள தசைகளும், கடைசியாக வீணா தண்டத்தில் உள்ள தசைகளும் தூங்கப்போகின்றனவாம்

'இதெல்லாம் உனக்கு மட்டும் எப்படித் தெரிந்ததாம்?' என்று மாலினி கேட்டாள்.

'எப்படியா? ஒரு பத்திரிகையில் படித்தேன்! இது கூடவா உன்னால் ஊகிக்க முடியவில்லை?' என்றுகூறி, நளினதேவி நகைத்தாள்.

'பத்திரிகையில் போடுவதை எல்லாம் அப்படியே நம்பலாமோ?' என்று கேட்டு, என் அத்தை ஒரு பெரிய தர்க்கத்தைத் துவக்கி விட்டு. அடுக்களையில் ஏதோ வேலை இருக்கிறது என்று உள்ளே சென்று விட்டாள். மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்,

நிர்மலா

★

சிறு கதை - கே. வி. ராமசாமி

மலர்களின் மகரந்தப் பொடியை அள்ளிவீசும் இளங்காற்று வாலிபதசையிலிருக்கும் ஆண் பெண்களை எப்படி உத்ஸாகப்படுத்துமோ, அதுபோலிருந்தது நிர்மலாவின் எழிலுருவம் இளைஞர்களின் உலகத்திற்கு. அவளுடைய முகாரவிந்தத்தின் காந்தி ஆடவர்களை மட்டுமல்ல, பெண்களையும் ஆகர்ஷிக்கவல்லதா யிருந்ததென்றால், அதற்குமேல் அங்க வர்ணனைக்கு வார்த்தைகளைச் செலவிடுவானேன்? அழகிருக்கும் இடத்தில் குணமிருக்காது, குணமிருக்கும் இடத்தில், சௌந்தர்யமிருக்காது என்று சாதாரணமாகச் சொல்லுவார்கள். இந்தப் பொது வாக்குக்கும் விதிவிலக்கு உண்டு என்பதை உலகத்திற்கு நிரூபித்துக் காண்பிக்கத்தானோ என்னவோ நிர்மலாவைப் புதல்வியாகப் பெறும் பாக்கியம் பெற்றிருந்தார் நரேந்திர சர்மா. இந்த பாக்கியம் அவருக்குக் கிடைத்ததில் அகண்ட உலகத்திலே மற்றெல்லோரையும்விட அதிகமாக சந்தோஷப்பட்டவன் சேகர் ஒருவன்தான். சேகரும் நிர்மலாவும் கல்லூரியில் ஒரே வகுப்பில் படித்து வந்தார்கள். சேகரின் அபாரமான புத்தி நுட்பத்தையும் நாவன்மையையும் கண்டு அவனை நிர்மலா அடிக்கடி புகழ்ந்து பேசுவதுண்டு. ஆனால் தன்னுடைய பிரஸன்னமும், பேச்சும், பிரியமான அன்பு ததும்பும் வார்த்தைகளும்தான் சேகரின்புத்திசாலித்தனத்திற்கு மூல காரணமென்பதை நிர்மலா அறியாள். அவளுடைய புகழ்ச்சி அவனை படிப்பில் உற்சாகப்படுத்தியது. அவள் மெச்சவேண்டும், ஆச்சர்யப்படவேண்டும், மதிக்கவேண்டும் என்பதற்காகத்தான் கல்வியில் அவன் அபார ஊக்கம் செலுத்தினனே தவிர பட்டம் பதவிகளைப் பெறும் ஆசை சேகருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. சுருங்கச் சொல்ல வேண்டுமானால் நிர்மலாவிற்காகத்தான் அவன் உயிர்வாழ்வதைப்போலக்கூட தோன்றியது. ஆனால் நிர்மலா இப்படி நினைத்தாளா? அது சேகருக்குத் தெரியாது. அதைப்பற்றி அவன் கவலைப்படவுமில்லை.

இரண்டு வருஷங்கள் கழிந்தன. நிர்மலாவிடம் கொண்டிருந்த பிரேமை சேகரின் மனதில் வளர்பிறையைப்போல வளர்ந்துகொண்டே இருந்தது. காலக்கிரமத்தில் இது ஒரு பித்துமாதிரிக்கூட ஆகிவிட்டது. முன்போல நிர்மலா இப்பொழுது அவ்வளவு அதிகமாக சேகருடன் பேசுவதில்லை. சேகரை அவள் புகழ்ந்து பேசுவது மற்ற சகா மாணவர்களிடையே தவறான அபிப்பிராயங்களைக் கிளப்பிவிட்டதுதான் இதற்குக் காரணம்: சேகர் முன்போல படிப்பில் அவ்வளவு அக்கரை காண்பியாததற்கும் இதுதான் காரணம். புத்தகத்தைக் கையிலெடுத்தால் அதில் நிர்மலாவின் மதிவதனம்தான் பிரதிபலிக்கும் அவனுடைய கண்களுக்கு. அந்த மயக்கத்தில் உலகத்தையே அவன் மறந்துவிடுவான். ஆனால் மாதங்கள் மட்டும் சேகரைக் கவனியாமல் ஒவ்வொன்றாக ஓடி மறைந்து பரீட்சை மாதமும் வந்துவிட்டது. ஒரு காலத்தில் சேகரை மதிப்பாக நினைத்து வந்த மாணவர்கள் "இவனாவது பரீட்சையில் தேறவாவது! என்னவோ குருட்டு அதிர்ஷ்டம் அடித்தது. கிளாஸ் பரீட்சைகளில் நல்ல மார்க் வாங்கிவிட்டான். சர்க்கார் பரீட்சையில் காண்பிக்கட்டுமே அவனுடையகைச்சரக்கை, பார்க்கலாம்!" என்று மறைமுகமாக கேலி செய்வதற்குக்கூட ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் சேகர் என்ன நினைத்தான் தெரியுமா? பரீட்சைக்கு இன்னும் ஒரு வாரம் தான் இருக்கிறது. இருந்தாலும் பாதகமில்லை. இப்பொழுதுகூட என் காதலை நிர்மலா அங்கீகரித்தால், ஒரே ஒரு புன்முறுவல் செய்து என்னை உற்சாகப்படுத்தினால், பரீட்சையில் நிச்சயம் முதலாவதாகத் தேறிவிடுவேன் என்று சேகர் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

சேகரின் குணத்தை நன்றாக அறிவாள் நிர்மலா. கல்வியில் அவன் அடைந்த திடீர் வீழ்ச்சிஅவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது சேகரை அவள் காதலித்தாளோ என்னமோ அது நமக்குத் தெரியாது. ஏன் அவளுக்கே தெரியாது. ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. அவனுடைய வீழ்ச்சி அவளைத் துன்புறுத்தியது. அவன் சோகம் அவளுடைய மனதையும் கவ்விக் கொண்டது. அவனுடைய துக்கம் சூரிய சந்திரர்களை மறைக்கும் கிரஹண கால நிழலைப் போல அவளுடைய மதிவதனத்திலும் படர்ந்து நின்றது. இதற்கெல்லாம் ஒரே ஒரு வழிதான் உண்டென்பதை நிர்மலா அறிவாள். சேகரிடம் இரண்டு வார்த்தை ப்ரியமாகப் பேசினால், அன்பு ததும்ப ஒரு புன்னகை செய்தால், அந்யோன்ய பாவத்துடன் ஒரு கண் ஜாடை காட்டினால், அவனுடைய நிலைமையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டுவிடுமென்பது நிர்மலாவுக்குத் தெரியும். ஆனால் சேகருக்குப் புத்துயிரளிக்க தகுந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தைரியமுமில்லை. என்ன இருந்தாலும் பெண் பெண்தானே!

* * * *

ஒரு நாள் நிர்மலா நதியில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்புகையில் சேகர் எதிரில் வந்தான். இரண்டு வருஷங்களாக கிடைக்காமலிருந்த ஒரு அருமையான சந்தர்ப்பம் அன்று அவர்களுக்கு கிடைத்தது. சேகரைப் பார்த்தவுடன் நிர்மலா தனது ஈரப் புடவையை சரிப்படுத்திக்கொண்டு இளஞ் சூரிய கிரணத்தில் மலர்ந்து நிற்கும் கமலத்தைப்போல காட்சியளித்தாள் பக்தனுக்கு.

"ஏன் நிர்மலா என்னிடம் என்ன இவ்வளவு வெட்கம்? இன்னமும் என்னை அந்நியனாகத்தான் மதிக்கிறாய் போலிருக்கிறது? உண்மையில் நான் பெரிய துர்ப்பாக்கியசாலிதான்!" என்றான் சேகர் மிகுந்த வருத்தத்துடன் தாழ்ந்த குரலிலே.

"உங்களுடைய ஊகங்களை என்னிடம் தானா காட்ட வேண்டும்? படிப்பில் காட்டினால் எவ்வளவு அழகாயிருக்கும்!" என்று இனிமையான தொனியில் தலை நிமிராமலே பதிலளித்தாள் நிர்மலா.

"படிப்பில் சுத்த மோசமாகி விட்டேனென்பதைத் தானே மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறாய்? வாஸ்தவம் தான். இதற்கு யார் ஜவாப்தாரி? யார் மூல காரணம்?" என்று உணர்ச்சியுடன் சொன்னான் சேகர். அதற்கு நிர்மலா பதிலளிக்க வில்லை. சில வினாடிகள் வரை இருவரும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

"உன்னிடம் நான் எவ்வளவு அன்பு செலுத்துகிறேனென்பதை நீ அறியமாட்டாய் நிர்மலா!" என்று அடுத்தபடியாக சேகர் சொல்லியபொழுது அவன் கண்கள் கண்ணீரில் மறைந்துவிட்டன.

"ஒருவர் மற்றொருவரிடம் அன்பு செலுத்துவதுதானே மானிடர்களின் கடமை? இதில் அதிசயமென்ன இருக்கிறது!" என்று சொல்ல வாயெடுத்தாள் நிர்மலா. ஆனால் என்னவோ ஒரு வஸ்து திடீரென்று வந்து தொண்டையை அடைத்துவிட்டதைப் போன்ற உணர்ச்சி யேற்பட்டது அவளுக்கு. சிறிது நேரம் அவள் மௌனம் சாதித்து விட்டு "சேகர்! பரீட்சைக்கு இன்னும் இரண்டு நாட்கள்தானிருக்கின்றன. இப்படியிருந்தால் பரீட்சையில் தேறுவதெப்படி?" என்றாள்.

"நான் நிச்சயம் பரீட்சையில் தேறி பட்டம் பெற்றுதான் ஆக வேண்டுமா? இது உன் விருப்பமானால் கண்டிப்பாக அதை நான் நிறைவேற்றுவேன்!" என்று சேகர் சொல்லவே, "இது என் விருப்பம் மட்டுமல்ல! ஆக்ஞை! உத்தரவு! கட்டளை! தெரிகிறதா? உத்தரவை நிறைவேற்றத் தவறினால் தகுந்த தண்டனை கிடைக்குமென்பதை மறந்து விடாதீர்!" என்று தமாஷாகவும், சுந்தரமான புன்முறுவலுடனும், சேகரைப் பார்த்து கொஞ்சும் கிளி மொழியில் சொல்லி விட்டு பின்னால் வந்த மற்ற பெண்களுடன் சேர்ந்து கூட்டத்துடன் கூட்டமாக அவள் போய் விட்டாள்.

"ஆம்! நான் பரீட்சையில் தேற வேண்டும்! தேறித்தான் ஆக வேண்டும்! இது நிர்மலாவின் ஆக்ஞை!" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டே வீடு திரும்பினான் சேகர். அன்று ஒரே குஷி. அமர்க்களம். ஆர்ப்பாட்டம். வாழ்க்கையில் வேறு என்றுமே அடைந்திராத ஆனந்த பரவசமடைந்திருந்தது அவன் மனம். பிணம் போன்று உணர்ச்சியற்றுப் போயிருந்த அவன் முகத்தில் உயிர்க்களை நர்த்தனம் செய்தது. அதே போல அன்று நிர்மலாவிடமும் வர்ணிக்க முடியாத உற்சாகம் குடிகொண்டிருந்தது மனதிலிருந்த ஒரு பெரிய சுமை இறங்கி விட்டதைப் போலவும், தான் செய்த ஒரு மன்னிக்க முடியாத பெரிய குற்றத்திற்கு பரிகார மேற்பட்டு விட்டதைப் போலவும், அவள் மனம் பூரிப்படைந்திருந்தது. அவள் இப்படி நினைத்தது தவறில்லை. ஏனெனில் பரீட்சைகள் நடந்து முடிந்தன. இரண்டு மாதங்களில் பரீட்சையின் முடிவுகளும் வெளி வந்தன. சேகர் அவனுடைய கல்லூரிக்கு மட்டுமல்லாமல் மாகாணத்திற்கே முதல்வனாகத் தேறி கவர்னரின் யோக்யதாம்சப் பதக்கத்திற்கு உரியவனானான்: அவனுடைய சகா மாணவர்களும் ஆசிரியர்களும் அதிசயித்தார்கள். நிர்மலா பிரமித்துப் போனாள். ஏன், சேகர் கூட ஆச்சர்யப்பட்டான்!

* * * *

நிர்மலா படித்த பெண் தான். இருந்தாலும் அவள் ஹிந்து சமுதாயத்தில் பிறந்த பெண்தானே? அவளுடையதகப்பனார், தம் குழந்தை பருவமடைந்து விட்டாளென்று அவளுக்கு விவாக ஏற்பாடுகளைச் செய்ய வாரம்பித்தார், ஒன்றில்லை, இரண்டில்லை, ஒரு நூறு ஜாதகங்கள் பொருத்தம் பார்க்கப் பட்டன. குலப் பொருத்தம்,

நிர்மலாவுக்கும் சேகருக்கும் நீடித்த நட்பு உண்டு: நிர்மலாவின் சிநேகமே சேகர் சிறப்புடன் தேற உதவியது: இறுதியில் இருவருக்கும் விவாகமும் நடந்தது: மிகவும் அந்யோந்யமான தம்பதிகள்! இருவரும் ஒருவர் மற்றவர் மீது எல்லையற்ற ப்ரீதியை வைத்திருந்தனர். எதுவும் அளவு மீறினால் விபரீதமாகவே முடிகிறதல்லவா? அதேபோல் தான் இவர்களது தாம்பத்ய வாழ்க்கை: இதைக் குலைக்க கங்கணம் கட்டிக்கொண்டான் பொருமை பிடித்த ஒருவன்: காரியமும் நிறைவேறியது. அது எப்படி நிறைவேறியது? முடிவு என்ன? கதையில் காணும் முடிவு படித்தறிய வேண்டியதாகும்.



பிரிட்டனின் பறக்கும் கோட்டை:
அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இந்த விமானம் மிகப்பெரியது.

கோத்திரப் பொருத்தம், காத்திரப் பொருத்தம் என்றெல்லாம் வீட்டில் என்னென்னவோ பேசுகிறார்கள் நடந்தன. ஆனல் நிர்மலாவின் மனம் சேகரிடம் ஐக்கியமடைந்திருந்தது. ஒரு காலத்தில் சேகரை பயித்தியக்காரனென்ற நிர்மலா இப்பொழுது அதே பயித்தியத்தில் விழ்ந்திருந்தாள். இந்தப் பித்தம் இவ்வளவு உக்ரமானதென்பது முன்னரே தெரிந்திருந்தால் சேகரிடம் தான் நடந்துகொண்டிருக்கக்கூடிய முறையே வேறு என்று கூட அவள் இன்று நினைத்தாள். பித்தம் தெளிய ஒரே ஒரு மருந்துதான் உண்டு, அது தான் தகப்பனரிடம் தனது அந்தரங்கத்தை வெளியிடுவது. ஆனல் அதற்கு தைரியமில்லை. அவளுடைய தயக்கமே ஆளுக்கு எமனுக வந்து முடிந்தது. நிர்மலாவை நரஸிம்மன் என்ற ஒரு பணக்கார வீட்டு வாலிபனுக்கு மணம் செய்து வைக்க தீர்மானம் செய்திருந்தார் நரேந்திர சர்மா. இதைக் கேட்டதும் சேகருக்கு தலையில் இடிவிழுந்தாற்போலிருந்தது. வாழ்க்கை ஒடிந்து மடிந்து குட்டிச் சுவராகி விட்டதாகவே அவன் நினைத்தான்: நரஸிம்மனை மணக்க நிர்மலா சம்மதித்திருப்பாளென்று மட்டும் அவன் ஹ்ருதயம் நம்பவேயில்லை. இதை எப்படி அறிவது? கொஞ்சம் துணிந்து நடந்து கொண்டாலொழிய மோசம்போய்விடும் போல அவனுக்குத் தோன்றியது. தனது செய்கையின் பலன் எப்படியிருக்குமென்பதை நிதானிக்காமல் நிர்மலாவுக்கு அவன் ஒரு கடிதமெழுதி அவள் கரத்திற்கும் போய்ச் சேரும்படி செய்தான். அதற்கு ஒரே ஒரு வரியில் பதில் வந்தது: "நான் என்ன செய்வேன்?" என்று அவள் எழுதியிருந்தது ஒரு வரி சேகருக்கு உயிர் கொடுத்தது. துணிவையும் கொடுத்தது. அன்றைய தினமே நரேந்திர சர்மாவை அவன் கண்டு பேசினன். அவருடன் நீண்டநேரம் கடுமையாக விவாதித்தான். நரேந்திர சர்மா உண்மையை உணர்ந்தார். எத்தனையோ ஏற்பாடுகளைச் செய்த பிறகு கல்யாணத்தை நிறுத்த அவர் கொஞ்சம் தயங்கினர். தனது ஒரே குழந்தையான நிர்மலாவின் வருங்காலத்தை நினைத்தபொழுது தயக்கம், தாட்சண்யம், மான அவமானங்கள் எல்லாம் பறந்து போய் விட்டன. முன்பு நிர்ணயித்த அதே முகூர்த்தத்தில் நிர்மலாவுக்கும் சேகருக்கும் சிறப்பாக திருமணம் நடந்தேறி விட்டது. அவர்களுடைய தாம்பத்ய வாழ்க்கை எப்படியிருக்குமென்பதைச் சொல்லவேண்டுமா?

* * * *

அளவு மீறிய சுகம் துக்கத்தில் முடியுமென்பார்கள். நிர்மலாவும் சேகரும் எல்லையற்ற இன்பத்துடன் அந்யோன்யமாக இல்லறம் நடத்தியது இறைவனுக்கே பொறுக்கவில்லைபோலிருக்கிறது! அவர்களுடைய வாழ்க்கைக்கு கிரகணம் பிடிக்க வாரம்பித்தது. அவர்களுக்கு நரஸிம்மன் கேதுவாக வந்து சேர்ந்தான். என்னை மணந்து கொள்ள மறுத்து, சேகரை நாடிய நிர்மலாவின் வாழ்வை சீர்குலைத்து விடாவிட்டால் நான் நரஸிம்மனில்லை என்று அவன் சபதம் பூண்டிருந்தான். கொஞ்ச காலம் காத்திருந்து சந்தேகத்திற்கு இடமில்லாத நிலைமையேற்பட்டவுடன் ஒரு நாள் ஆனந்தன் என்ற புனைப்பெயரோடு நிர்மலாவுக்கு அவன் ஒரு காதல்கடிதம் எழுதினன்: அந்தக் கடிதம் சேகரிடம் போய்ச்சேரும்படியும் அவன் செய்தான், அதைப்பார்த்ததிலிருந்து சேகரின் மனம் நிம்மதியாயில்லை: பிறகு சில சம்பவங்கள் நிகழ்ந்தன. மிரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப் போல அவை சேகரின் சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்திவிட்டன. ஒரு நாள் நிர்மலா தனிமையாக சினிமாவிற்குப் போய் விட்டு வந்தாள். இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டான் நரஸிம்மன். "கண்மணி நிர்மலா! இன்று மாலை உன் கணவன் டென்னிஸ் விளையாடப் போவான். நேற்று வந்ததைப் போல இன்று மாலையும் நிச்சயமாக வா! என் கண்ணல்லவா! ஏமாற்றி விடமாட்டாயே!" — இப்படி ஒரு கடிதம் எழுதியனுப்பினன் நரஸிம்மன். அது சேகரின் ஹ்ருதயத்தைப் பிளந்துவிட்டது. கோபோன்மத்தனக நிர்மலாவின் அறையில் பிரவேசித்து அந்தக் கடிதத்தை அவளுடைய முகத்தில் வீசியெறிந்தான் சேகர். அவன் இருந்த நிலைமையைப் பார்த்து நிர்மலா பீதியடைந்தாள். அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்ததும் அவளுடைய சர்வ அங்கமும் அதிர்ச்சியடைந்தது. "பொய்! பொய்! பொய்! இது சுத்தப் பொய்! நம் வாழ்வைச் சீர்குலைக்க யாரோ செய்த சதி! இதை நம்பாதீர்கள்!" என்று அவன் காலில் விழுந்து நிர்மலா கதறினுள். ஆனல் சேகருக்கு அவளிடம் நம்பிக்கை யேற்படவில்லை. "உன்னைப் பொன்னென்று மதித்தேன்! அது என் குற்றம்!" என்று சொல்லிவிட்டு சேகர் வெளியே போய்விட்டான்.

அன்றுமுதல் அவனுடைய வாழ்க்கையில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டுவிட்டது. இரண்டு வாரம் கழித்து ஒரு நாள் அளவு மீறிக் குடித்துவிட்டு ரஸ்தாவில் விழுந்து கிடந்த சேகரை யாரோ இரண்டு பேர் வீட்டில் கொண்டு வந்து போட்டுவிட்டுப் போனர்கள். "ஐயோ! சேகர்! மதுபானம் பொல்லாது! வேண்டாம் சேகர்!" என்று அவனுடைய காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினுள் நிர்மலா.

"மதுபானம் மட்டுமா செய்வேன்! இன்னும் என்ன வேண்டுமானுலும் செய்வேன்! நீ தொலைந்தால் அதன்பிறகு என் வாழ்க்கை நல்வழிக்குத் திரும்புகிறதோ என்னவோ? நீ இருக்கும்வரையில் உன்னுடைய பாபத்தை மறந்திருக்க மதுபானம் தான் எனக்கு ஔஷதம்!" என்று வெறுப்புடன் அவன் பதிலளித்தான். இந்த வார்த்தை புண்பட்டிருந்த நிர்மலாவின் நெஞ்சத்தில் சுருக்கென்று தைத்தது. அவள் சுய நினைவை இழந்தாள். உணர்ச்சிப் புரட்சியில் நாம் என்ன செய்கிருேமென்பதுகூட அவளுக்குத் தெரியவில்லை. "நான் தொலைந்தால் நீங்கள் நல்வழிக்குத் திரும்பி சுகப்படுவீர்களா? அப்படியே நடக்கட்டும். உங்கள் சுகம் தான் இந்த ஜீவனின் லட்சியம்!" என்று சொல்லிவிட்டு கரிகாய் நறுக்கும் கத்தியினுல் மார்பில் குத்திக்கொண்டுவிட்டாள் அவள்.

"ஐயோ! நிர்மலா! நிர்மலா! என்ன காரியம் செய்துவிட்டாய்!" என்று வெறிபிடித்தவனைப்போல அலறிக்கொண்டே டெலிபோனில் டாக்டரை அழைத்தான். டாக்டர் வந்தார். சிகிச்சை செய்தார்; பந்துக்களெல்லாம் வந்து கூடினர்கள். சேகரைத் திட்டினர்கள்: சபித்தார்கள்: சேகருக்கு அவனுடைய நெஞ்சமே அவனை சுருக் சுருக்கென்று குத்தியது. இரண்டு தினங்கள் கழிந்தன. இந்த இரண்டு நாளும் நிர்மலாவிற்கு பிரக்ஞை வரவில்லை. விஷயம் ஊர் முழுவதும் பரவிவிட்டது. நரஸிம்மன் இதை எதிர்பார்க்கவில்லை. தன்னுடைய விஷமம் இவ்வளவு தூரத்திற்குப் போகுமென்று அவன் நினைக்கவில்லை. ஒரு உயிருக்கே உலை வைத்து விட்டோமென்பதை உணர்ந்த பொழுது அவனுடைய மூளை கிறு கிறுவென்று சுற்றியது. சேகருக்கு உண்மையை விளக்கி ஒரு உருக்கமான கடிதம் எழுதினன். அதன் முடிவில் "என் உண்மைப் பெயரை அறிந்து அரசாங்கம் என்னை தண்டிக்கும். அந்த அவமானத்திற்கு இடம் வைக்காமல் நானே என்னை தண்டித்துக்கொள்ளுகிறேன்!" என்று நரஸிம்மன் எழுதியிருந்தான்: இக்கடிதம் கிடைத்ததும் சேகர் வெறிபிடித்தவனைப் போல நிர்மலாவின் அறையில் நுழைந்து பிரக்ஞையற்றுக் கிடந்த அவளுடைய காதில் "நிர்மலா! நான் பாபி! பாபி! சண்டாளன்! நீ நிரபராதி!" என்று அலறினன். அந்த சப்தத்தை நிர்மலாவின் ஹ்ருதயம் கேட்டு பூரிப்படைந்தது: அந்த பூரிப்பு வெள்ளை வெளேரென்று வெளுத்திருந்த அவளுடைய உதடுகளில் பிரதிபலித்தது. அதே புன்னகையுடன் கடலத்தை விட்டுப் பிரிந்து சந்தேகப் பிசாசின் எல்லைக்கு அப்பாலுள்ள வைகுண்டத்திற்குப் போய்ச் சேர்ந்து விட்டது பரிசுத்தமான அவளது ஆத்மா. அதன் பிறகு சேகர் எங்கு போனன், என்ன ஆனன், என்பது ஒருவருக்கும் தெரியாது: நரஸிம்மன் தானுக விதித்துக்கொண்ட தண்டனை என்ன? அவன் என்ன ஆனன்? என்பதும் உலகத்திற்குத் தெரியாது, நிர்மலா போய்விட்டாள். மற்றவர்கள் என்ன கதியானுல் தான் நமக்கென்ன? அக்னியை விடப் பரிசுத்தமான நிர்மலாவை களங்கப்படுத்த முயற்சித்த இரு துராத்மாக்கள் குடும்பஸ்தர்களாயிருக்கும் கணவன்மார்களுக்கு ஒரு படிப்பினையாவது வைத்து விட்டுப் போனர்களே. அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துவோம். (ஓர் அந்நியக் கதையைத் தழுவியது.)

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்த ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகாமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிருன். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நபன் தனது பழைய நண்பனுன ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிருன். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிருன். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிருள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிருன். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடைபெற்று கப்பலேறிக் கிளம்புகிருன்: கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிருன். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிருன். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிருள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிருன். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிருன். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிருள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிருள். இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர். பிறகு அவர் பிரிந்து போகிருர் பின்பு இவர்கள் தங்கள் கிராமத்திற்கு வருகின்றனர்.

என்னையே முற்றிலும் அர்ப்பணம் செய்த பிறகு மற்ற ஆசாமிகளுடைய மறைமுகமான மனஸ்தாபத்தின் மேல் ஒவ்வொரு கணமும் என்னுடைய கவனம் செல்லுகிறது. அதை நான் நன்ருகப் பார்க்க முடியாமல் போகலாம். ஆனுல் இதை மட்டும் என்னுல் பார்க்க முடிகிறது. அவளுடைய அடக்க முடியாத இச்சை இது வரை வெகு உக்கிரமான சாராயம் போல் அவளுடைய முழு மனதையும் உன்மத்தமாக்கி வைத்திருந்தது. அது இன்று நிதானமடைந்து அவளுக்கு நன்மையையும் எப்பேர்ப்பட்ட நிலைமையையும் கொடுத்திருக்கிறது. அதன் அடையாளங்கள் என்ன என்று எனக்குத் தெரியாது. ஆனுல் சூன்யத்தைத் தவிர வேறொன்றையும் பார்க்க முடியா விட்டால் நான் எங்கு சென்று, எப்படி மறுபடியும் நூறு விதமாகச் சிதைந்து போன வாழ்க்கையின் வலையை தைத்துக்கொண்டு உட்காருவேன் என்ற எண்ணமே, என்னைப்பல தடவைகளில் குழப்பியிருக்கிறது. யோசித்துப் பார்த்ததில் ஒன்றும் விளங்கவில்லை. ஆனுல் ஒன்று மட்டும் நிச்சயம் செய்து கொண்டேன். இவ்வளவு நாள் எந்தப் பாதையில் போனேனே, அதே பாதையில் அவசிய மேற்பட்டால் போவேன. என்னுடைய சுகத்திற்காகவும் நன்மைக்காகவும், யாருடைய வாழ்க்கையும் சிக்கலாக்க மாட்டேன். ஆனுல் ஆச்சரியமென்னவென்ருல், எந்த மந்திரத்தினுடைய உயிர்ச்சக்தியைப் பற்றி யோசனை செய்ததில், எங்களிடையே ஒரு நிமிஷம் மகத்தான வெள்ளப் பெருக் கெடுத்தது? அதே மந்திரத்தினுலேயே சமீபத்தில் ஒரு வீட்டில் மல் யுத்தம் நடந்து கொணடிருந்தது. ஆனுல் அது எங்களுக்குத் தெரியாது

திடீரென்று ஐந்தாறு மனிதர்கள் இரண்டு மூன்று விளக்குகளை எடுத்துக்கொண்டு, பெருத்த சப்தத்துடன் தாழ்வாரத்தில் வந்து நின்ருர்கள். கலவரமடைந்த குரலில் "ஹுஜூர் பாபு" என்று கத்தினுர்கள்.

நான் திடுக்கிட்டுப் போய் வெளியே வந்தேன். ராஜலக்ஷ்மியும் ஆச்சரியத்துடன் எழுந்து என் பக்கத்தில் வந்து நின்ருள். எல்லோரும் ஏககாலத்தில் முறையிட விரும்பினுர்கள். ரதன் அடிக்கடி முயன்றும் கடைசி வரையில் யாரும் வாயை மூடிக் கொண்டிருக்கவில்லை. எப்படியோ விஷயம் இன்னதென்று விளங்கிற்று, கன்னிகாதானம் நின்று போய்விட்டது. ஏனென்ருல் மந்திரம் பிசகிப் போய் விட்டது என்று மாப்பிள்ளை பக்கத்துப் புரோகிதர் பெண் வீட்டுப் புரோகிதரை புஷ்பம் ஜலம் முதலியவைகளைக் கொண்டு அடித்து வாயையும் புதைத்து விட்டார். உண்மையில் இது எப்பேர்ப்பட்ட அடாத செய்கை! புரோகித சம்பிரதாயத்திற்கு மதிப்பு அதிகம் இருக்கிறது. வாஸ்தவம்தான்; ஆனுல் அதற்காக வேறு கிராமத்திலிருந்து வந்து பலாத்காரமாக ஒரே தொழிலைச் சேர்ந்தவன்மீது ஜலம் புஷ்பங்களை வாரி எறிவது, பலாத்காரமாக அவனுடைய வாயை பொத்திச் சுவாதீனமும் சுதந்திரமும் கொண்ட அந்த மந்திர உச்சாடனத்தை தடை செய்வது, என்பதை நான் எங்கும் கேட்டதில்லை.

ராஜலக்ஷ்மிக்கு என்ன சொல்வதென்று தோன்றவில்லை. ஆனுல், வீட்டிற்குள் ஏதோ வேலை செய்து கொண்டிருந்த ரதன் வெளியே வந்து அதட்டலுடன் "உங்களுடைய புரோகிதன் யாரடா" என்ருன். இங்கே அதாவது அந்த ஜமீன்தாரிக்கு வந்தவுடன் ரதன் கிராமத்தார்களை 'அடே' 'நீ' என்றும் பேச ஆரம்பித்தான். ஏனென்ருல் அங்கே அவனுக்கு மேற்போயோ அல்லது சமானமாகவோ யாருமில்லை.

"கூடை முறம் முடைகிறபயல்களுக்கு விவாகம், விவாகத்தில் புரோகிதன் வேறு. இதென்ன பிராம்மண காயஸ்தக் கலியாணமா அப்படிப் பிராம்மணப் புரோகிதர் வருவதற்கு?" என்று சொல்லி அடிக்கடி என்னையும் ராஜலக்ஷ்மியையும் கர்வத்துடன் பார்த்தான்.

இந்த இடத்தில் ரதன் நாவிதன் என்பதை நினைப்பூட்ட விரும்புகிறேன்.

மது தானே நேரில் வர முடியவில்லை. அவன் கன்னிகாதானத்திற்காக மணை மேல் உட்கார்ந்திருந்தான். ஆனுல் அவன் சம்பந்தி வந்திருந்தான். அவன் சொன்னதிலிருந்து இது தெரிந்தது. அவர்கள் கலியாணங்களுக்கு பிராமணர்கள் வருவதில்லை. ஆனுல் அவர்களுக்குள்ளேயே புரோகிதர் உண்டு. ராகால் பண்டிதன் பிராமணனுக்குச் சமானம். ஏனென்ருல்



திருச்சிராப்பள்ளி காட்டுப்புதூர் ஹாலில் திருச்சி லேடீஸ் க்ளப் மெம்பர்கள் மிஸஸ் ஸெக்கிரா தலைமையில் ஒரு மகாநாடு நடத்தினர். (எஸ். எ. எஸ்.)

அவன் கழுத்தில் பூனூல் இருக்கிறது. அவன் பத்துக் கருமாக்களையும் செய்து வருகிறான். இது வரை அவன் அவர்களுடைய ஜலத்தைக் கூடச் சாப்பிட்டதில்லை. அப்பேர்ப்பட்ட சத்வ குணத்தால்தான் அவனுக்கு யாரும் பதில் சொல்ல முடியவில்லை. அதனால் தான் அவனுக்கும் அசல் பிராமணனுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை.

எது எப்படியானாலும் அவளுடைய சங்கடமும் அருகில் கலியாண வீட்டில் நடைபெற்ற பெருத்தக் கூச்சலும் சேர்ந்து என்னை அங்கே போகும்படியாகச் செய்து விட்டது.

"நீ போய் விட்டால் நான் வீட்டில் தனியாக என்ன செய்வேன்?" என்றாள் ராஜலக்ஷ்மி,

ராஜலக்ஷ்மி முதலில் ஆட்சேபித்தாலும் பிறகு ஆவலின் மிகுதியால் தானும் என்னுடன் வரச் சம்மதித்தாள். அங்கே போய் பார்த்தபொழுது மதுவினுடைய சம்பந்தி சொன்னது ஒன்றும் பொய் இல்லை. விவாகம் பெரிய சண்டையாக முடியும் போல இருந்தது. மாப்பிள்ளை வீட்டுப் பக்கம் இருபது முப்பது பேர்: பெண் வீட்டுப் பக்கமும் அதேமாதிரி. நடுவில் பருத்த சரீரமுடைய சிபு பண்டிதன், இளைத்த சரீரமுடைய ராகால் பண்டிதனைக் கையைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்தான். எங்களைப் பார்த்ததும் கையை விட்டு விட்டு விலகி நின்றான். நாங்கள் வெகுமதிகளுடன் ஒரு பாயின்மேல் உட்கார்ந்து சிபு பண்டிதன் காரணமின்றி எதற்காக இந்த மாதிரி அநியாயம் செய்தான் என்று விசாரித்தோம்.

"பாருங்கள் ஹுஜூர், மந்திரத்தின் 'ம' கூடத்தெரியாத இந்தப் பயல், இவன் தன்னைப் பண்டிதன் என்று சொல்லிக் கொள்ளுகிறான். இன்று இந்த விவாகத்தைக் குட்டிச் சுவராக்குகிறான்" என்றான் சிபு பண்டிதன்.

ராகால் பண்டிதன் முகத்தைச் சுளித்துக்கொண்டு "ஆமாம் ஆமாம். ஐந்து கிராமங்களில் எனக்குப் புரோகிதம். தினம் ஒரு கலியாணம் செய்து வைக்கிறேன். எனக்கு மந்திரம் தெரியாது!" என்றான்.

"இங்கேயும் அந்த மந்திரம் தானா என்று நான் யோசிக்கலானேன். வீட்டில் ராஜலக்ஷ்மிக்குப் பதில் சொல்லாமலே மௌனமாக இருந்துவிட்டேன். ஆனால் இங்கே மத்தியஸ்தம் செய்யாவிட்டால் சண்டை முற்றிப்போகும். கடைசியாக வாதத்தை ஒருவாறு தீர்த்து, ராகால் பண்டிதனே மந்திரத்தைச் சொல்ல வேண்டியது என்றும், அவன் ஏதாவது பிசகு செய்தால் சிபு பண்டிதனுக்குத் தன் இடத்தைக் காலி செய்து கொடுத்துவிடவேண்டியது என்றும் சமரசம் செய்துவைத்தேன். ராகால் அதை ஒப்புக்கொண்டு புரோகித ஆசனத்தில், உட்கார்ந்து கொண்டு பெண்ணின் தகப்பனாரின் கையில் புஷ்பத்தைக் கொடுத்து, கலியாண தம்பதிகளை ஒன்று சேர்த்து மந்திரத்தைச் சொன்னான். அது இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. அந்த மந்திரங்கள் உயிருள்ளவையா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு மந்திரங்களில் தேர்ச்சி இல்லாவிட்டாலும், ரிஷிகள் வேதங்களில் அமைத்துவிட்டுப்போன மந்திரம் அவை அல்ல என்று தோன்றிற்று.

ராகால் பண்டிதன் மாப்பிள்ளையைப் பார்த்து "மதுடோமாய கன்யாய நம:என்று சொல்" என்றான்.

மாப்பிள்ளையும் அதேமாதிரி 'மதுடோமாய கன்னியாய நம:' என்றான்: ராகல் பெண்ணைப் பார்த்துப் 'பகவதி டோமாய புத்திராய நம: என்று சொல்' என்றான்.

கலியாணப்பெண் சிறுமி ஆதலால், மந்திரத்தைச் சொல்வதில் தவறு ஏற்படும் என்று அவளுக்காகத் தகப்பனாரே மந்திரத்தைச் சொல்ல ஆரம்பித்த, பொழுது சிபு பண்டிதன் இரண்டு கைகளையும் தூக்கி கர்ஜித்து எல்லோரையும் திடுக்கிடச் செய்து "அது மந்திரமல்ல, கலியாணம் சரியாக நடக்கவில்லை" என்று கத்தினான். நான் பின்னால் திரும்பிப் பார்த்தேன், ராஜலக்ஷ்மி புடவையால் முகத்தை மூடிக்கொண்டு பொங்கி வந்த சிரிப்பை அடக்க முயன்று கொண்டிருந்தாள். வந்திருந்தவர்கள் எல்லோரும் ஒரே அடியாகக் கூக்குரல் போட்டார்கள். ராகால் பண்டிதன் வெட்கிய முகத்துடன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் அவன் சொன்னது யார் காதிலும் ஏறவில்லை. எல்லோரும் ஒன்று சேர்ந்து சிபு பண்டிதனைச் சமாதானம்செய்ய ஆரம்பித்தார்கள்.

"பண்டிதரே, மந்திரங்களை நீரே சொல்லுங்கள். இல்லாவிட்டால் கலியாணம் நடைபெறாது. எல்லாம் நஷ்டமாகப் போகும்" என்றார்கள்.

சிபு பண்டிதன் அப்பொழுது கொஞ்சம் உதாரத் தன்மையைக் காட்டி "ராகால் மேல் பிசகில்லை. அசல் மந்திரம் இந்தப் பக்கம் என்னைத்தவிர வேறு யாருக்குமே தெரியாது, சரி, நான் இங்கே இருந்தே மந்திரம் சொல்லுகிறேன். ராகால் அதை பெண் மாப்பிள்ளைகளுக்குச் சொல்லட்டும்" என்று சொல்லி அவன் மந்திரம் சொல்ல ஆரம்பித்தான்.

தோல்வி யடைந்த ராகாலும் உதவியற்ற நல்ல மனிதன் போல, அந்த மந்திரத்தைத்திருப்பிச்சொல்லிக் கொண்டிருந்தான்.

'மதுடோமாய கன்னியாய பூஜ்ய பத்திரம் நம: என்று சொல்' என்றான் சிபு.

மாப்பிள்ளை அதைச் சொன்னான்.

"மது, இந்தத் தடவை நீ சொல்! பகவதி டோமாய புத்திராய சம்பிராதானம் நம:" என்றான் சிபு.

மதுவும் பெண்ணுடன் கூட அதைத் திருப்பிச் சொன்னான். எல்லோரும் மௌனமாக அசைவற்று உட்கார்ந்திருந்தார்கள். சிபுவைப் போன்ற மகா பண்டிதன் அந்தப் பக்கம், யாருமே வந்ததில்லை என்று எல்லோரும் எண்ணினார்கள் போலிருந்தது.

சிபு, மாப்பிள்ளை கையில் புஷ்பத்தைக் கொடுத்து "விபின், நீ இதைச் 'சொல்லு—உயிரோடு இருக்கிற வரை,அன்ன வஸ்திரம் கொடுக்கிறேன் ஸ்வாஹா!" என்றான்.

விபின் வெகு சிரமப்பட்டு இந்த மந்திரத்தை நிறுத்திச் சொல்லி முடித்தான்.

"பெண் மாப்பிள்ளை இருவரும் சொல்லுங்கள் யுகள மிலனம் நம:" என்றான் சிபு.

இருவரும் சொன்னார்கள். பிறகு கல்யாணம் சுபமாக முடிந்தது.

அவ்வளவு நேரமும் நான் எப்படியோ சிரிக்காமல் இருந்துவிட்டேன். முடிவில் ராஜலக்ஷ்மியின் கையைப் பிடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். அது வரை அவள் எப்படிச் சமாளித்தாளோ எனக்குத் தெரியாது. ஆனால் வீடு திரும்பினதும் அவள் சிரித்த சிரிப்பில் மூச்சே நின்று விடும் போலிருந்தது.

முதலில் எனக்கும சிரிப்புத் தாங்கவில்லை. பிறகு "இரண்டு புரோகிதர்களும் பெரிய சாஸ்திரிகள், இவ்வளவு வருஷ காலம் தலை முறை, தலை முறையாக இவர்கள் இப்படித் தான் கலியாணம் நடத்தி வந்திருக்கிறார்கள். சிபு பண்டிதன் சொன்ன மந்திரம் ரிஷி வாக்கியமோ இல்

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம்

கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

ஸங்கீத சிந்தாமணி ... ரூ. 3
திராவிட கானம் ... ரூ. 3
ஸங்கீத சில்லரைக்கோவை ரூ. 3

முழு விபரமான கேட்லாக் இனாம். முன் பணமாக ரூ. 6. மணியார்டர் செய்தால், டி மூன்று புஸ்தகங்களையும் வேறுவிதச் செலவின்றி ரயிலில் அனுப்பிவைக்கப்படும்

எம். எஸ். ராமுலு & கோ.,
286, எஸ்ப்ளனேட் :: மதராஸ்

இங்கே கவனியுங்கள்

உங்கள் காலத்தையும், பலத்தையும், பணத்தையும் மற்றவர்களுடன் கலந்து பேசி ஏன் வீண் செய்கிறீர்கள். எங்களுடைய மாயக் கண்ணாடியின் உதவியால் நீங்களே எஜமானாகிவிடுவீர்கள். இந்த மாயக் கண்ணாடி கைலாசத்திலுள்ள உயர்ந்த மூலிகையைக் கொண்டு தயார் செய்யப்பட்டது. இதன் சக்தியைக் கண்டால் நீங்கள் ஆச்சரியமடைவீர்கள். நீங்கள் ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, எத்தனை வயதானவர்களானாலும் சரி, எந்த ஜாதியாயிருந்தாலும் சரி, ஜோதிஷர் உதவியை நாடாமலே நடந்தவைகளையும்,நடக்கப்போவதையும் கண்டறியலாம். இதைக் கொண்டு இறந்துபோன பந்துக்களுடனும், சிநேகிதர்களுடனும் கூடப்பேசலாம். உங்களுக்குச் சிநேகமுள்ளவர்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் பார்க்க முடியும். இதைவைத்துக்கொண்டால் யுத்தத்தில்வெற்றி, வியாபாரம் கலியாணம் முதலியவற்றில் வெற்றியடையலாம். புதையல் இருக்குமிடத்தையும் கெட்டுப்போன சாமான்களும்,அதிர்ஷ்டநம்பர்களும் கண்டுபிடிக்கலாம். இது உலகத்திற்கு ஒரு உண்மையான சிநேகிதன். விலை ரூ. 2/8. ஸ்பெஷல் ரூ. 4/8. போஸ்டேஜ் தனி. இன்றேஒன்றுக்குஎழுதுங்கள். பர்மா,சிலோன் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். பலனில்லையேல் பணம் வாபீஸ்.

SHRI MAHAMUNI JYOTISH ASHRAM, (S. M. W) DINA NAGAR.
(B P S) PUNJAB.

பிரிட்டிஷ் வெடி குண்டுகள்



பிரிட்டிஷ் விமானப் படையினர் பிரயோகிக்கும் 2000 பவுண்டு எடையுள்ள வெடி குண்டை படத்தில் பார்க்கலாம். பார்ப்பதற்கு மிகப் பெரியனவாக இராவிட்டாலும், இவை எந்த வஸ்துவையும் குடைந்து மஹத்தான சேதத்தை விளைவிக்க வல்லவை.

லையோ. அது வீணாக மட்டும் போகவில்லை. அவன் செய்து வைத்த விவாகங்கள், இன்னும் கெட்டியாகத் தான் இருக்கின்றன" என்றேன் நான்.

ராஜலக்ஷ்மி சிரிப்பை நிறுத்தி திடீரென்று எழுந்து உட்கார்ந்து என் முகத்தைப் பார்த்துக் கொண்டு ஏதோ யோசிக்கலானாள்.

காலையில் எழுந்ததும் குசாரி மகாசயா பகல் சாப்பாட்டிற்கு, எங்களை அழைத்து விட்டுப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்படி ஒரு சமயம் நேரலாம் என்று நான் சந்தேகப்பட்டுக் கொண்டுதான் இருந்தேன்.

"நான் மட்டு மில்லையே?" என்று ராஜலக்ஷ்மியைக் கேட்டேன்,

ராஜலக்ஷ்மி சிரித்துக் கொண்டு "இல்லை, நானும் தான்!" என்றாள்.

"நீயும் வருகிறாயா?"

"ஏன் கூடாது!"

தயக்கமில்லாமல் அவள் இப்படிப் பதில் சொன்னதைக் கேட்டு, நான் வாயடைத்துப் போனேன். இந்து தர்மத்தின் படி சாப்பாடு, அதன் விஷயமாகச் சமாஜம், எவ்வளவு கட்டுப்படுத்தியிருக்கிறது என்பது ராஜலக்ஷ்மிக்குத் தெரியும். தெரிந்தும் அவள் இந்த மாதிரி பதில் சொன்னாள். குசாரியைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால் வெளித் தோற்றத்திற்கு அவர் ஒரு ஆசார சீலரான பிராமணராகத் தென்பட்டார். ராஜலக்ஷ்மியினுடைய சரித்திரம் அவருக்குத் தெரியாது என்பதும் நிச்சயம். தன்னுடைய எஜமானி என்பதற்காகத்தான் சாப்பாட்டிற்கு கூப்பிட்டிருக்கிறார். ஆனால் இன்று ராஜலக்ஷ்மி அங்கே போய் என்ன செய்யப் போகிறாள் என்பது எனக்கு ஒன்றும் விளங்கவே இல்லை. ஆகையால் நான் கேட்ட கேள்வியின் தாத்பர்யத்தை அறிந்தும் அவள் ஒன்றும் சொல்லாமல் இருந்ததால் நானும் சும்மா இருந்து விட்டேன்.

குறித்த நேரத்தில் வண்டி வந்து நின்றது. நான் புறப்பட்டு வெளியே வந்துபார்த்த பொழுது ராஜலக்ஷ்மி வண்டியின் அருகில் நின்றுகொண்டிருந்தாள்.

"போவோமா" என்றேன்,

"போவதற்காகத்தான் இங்கே நின்றுகொண்டிருக்கிறேன்" என்று சொல்லி அவள் வண்டியிலேறி உட்கார்ந்து கொண்டாள்.

ரதன்கூட வரவேண்டியவன்: அவன் என் பின்னால் நின்று கொண்டிருந்தான். எஜமானி அணிந்து கொண்டிருந்த அதி சாமான்யமான ஆடை ஆபரணத்தைக் கண்டு அவன் மிகவும் ஆச்சரியமடைந்து போனான் என்பது அவன் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. நானும் ஆச்சரியமடைந்து தான் போனேன். ஆனால் அவள் ஒன்றுமே வெளியிடாததால் நானும் அதேமாதிரி மௌனமாக இருந்தேன். வீட்டில் அவள் ஒரு பொழுதும் மிகவும் அதிகமாக ஆடை ஆபரணங்கள் அணிந்து கொண்டதில்லை. கொஞ்ச காலமாக அலங்காரமே மிகவும் மட்டுப்பட்டிருந்தது. ஆனால் இன்று அவள் உடம்பில் அநேகமாக ஒரு ஆபரணம்கூட இல்லை. எப்பொழுதும் அவள் கழுத்தில் இருக்கும் ஹாரமும், கையில் ஒரு ஜதை வளையல்களும், தான் இருந்தன. முதல் நாள் இரவு வரைகூட அவள் அணிந்திருந்த வளையல்களைக் கூட அவள் வேண்டுமென்றே கழற்றி இருந்தாள் என்று ஞாபகம் வந்தது. முதல் நாள் அவள் அணிந்திருந்த ஆடை மிகவும் சாதாரணமானது. அதிகாலையில் ஸ்நானம் செய்துவிட்டு மறுபடியும் அதையே அணிந்திருந்தாள் என்று தெரிந்தது. வண்டியிலேறி உட்கார்ந்துகொண்டு மெதுவாக "ஒவ்வொன்றாக எல்லாவற்றையும் துறந்துவிட்டாய் என்று காண்கிறேன். நான் தான் பாக்கி போலிருக்கிறது" என்றேன்.

ராஜலக்ஷ்மி என் முகத்தைப் பார்த்துச் சிறிது சிரித்த வண்ணம் "பாக்கியிருக்கும்,அந்தஒன்றில் எல்லாம் இருக்கலாம் அல்லவா, அதனால்தான் வீட்டில் இருந்ததை யெல்லாம் ஒவ்வொன்றாகத் தானம் செய்து விட்டேன்" என்று சொல்லி ரதன் அருகில் இருக்கிறானா இல்லையா என்று திரும்பிப் பார்த்துவிட்டு வண்டிக்காரன் காதில் கூடப்படாதபடி, அவ்வளவு மெல்லிய குரலில் "ஸபாஷ் என்றுஎனக்குஆசீர்வாதம்செய்ய வேண்டும். உன்னைக் காட்டிலும் மேலானது எனக்கு வேறொன்றுமேயில்லை. உண்மையில் நான் அனாயாசமாக எதற்குப் பதிலாக வாவது கொடுக்க முடியுமானால் அந்த ஆசீர்வாதத்தையும் எனக்குச் செய்யவேண்டும்" என்றாள்.

நான் பதில் சொல்லவில்லை. பேச்சு போய்கொண்டிருந்த மாதிரியில் நான் எந்தவிதமான பதிலும் சொல்ல முடியாதவனாக இருந்தேன். அவளும் மேலும் ஒன்றும் சொல்லாமல், ஒரு பெரிய தலையணியைத் தன் பக்கம் இழுத்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டு என் காலடியில் படுத்துக் கொண்டாள். கங்காமாட்டியிலிருந்து போடாமாட்டிக்குப் போக நல்ல பாதை இல்லை. எதிரே உலர்ந்து போன ஆற்றங்கரையில் தென்பட்ட மூங்கில் காட்டில் நுழைந்து போனால் பத்து நிமிஷங்களில் போய்விடலாம். ஆனால் வண்டிப் பாதை வெகுதூரம், சுற்றிக் கொண்டு போவதால், இரண்டு மணி நேரமாகிறது. அந்த நீண்ட வழியில் இருவரும் ஒருவார்த்தை கூடப் பேசவில்லை. அவள் என் கை மட்டும் தன்கழுத்தின்மேல் இழுத்து வைத்துக்கொண்டு தூங்குபவள் போல மௌனமாகப் படுத்திருந்தாள்.

வண்டி குசாரி மகாசயர் வீட்டு வாசலில் போய் நின்றபொழுது மணி பனிரெண்டாகி விட்டது. வீட்டுக்காரரும், அவர் மனைவியும் இருவருமாக வெளியே வந்து எங்களை வரவேற்று, மதிப்புள்ள விருந்தாளிகள் என்ற காரணத்தால் வாசல் திண்ணையில் கூட உட்காரச் சொல்லாமல் உள்ளே கூட்டிக்கொண்டு போனார்கள். மேலும் பட்டணத்திற்கு வெகு தூரத்திலிருந்த இந்தமாதிரியான சாதாரண கிராமங்களில் பர்தா (பெண்கள் முகத்தை மூடிக்கொள்வது)வினுடையநிர்ப்பந்தம் அவ்வளவு அதிகமாக இல்லை என்று, எனக்கு சற்று நேரத்திற்குள் தெரிய வந்தது. எங்களுடைய வருகையைப் பற்றி தகவல் வெளியாயிற்றோ இல்லையோ, பக்கத்திலிருந்த அநேகம் குசாரியின் பந்துக்களும், அத்தை, மாமா, சிறிய தகப்பனார், சிறிய தாயார், என்று முறை சொல்லிக் கூப்பிட்டுக் கொண்டும், குசாரியையும் அவருடைய பத்னியையும், திருப்தி செய்வதற்காக, ஒவ்வொருவராக உள்ளே வந்து வேடிக்கை பார்த்தார்கள், ராஜலக்ஷ்மி எப்பொழுதுமே முக்காடு போடுவதில்லை. அவளும் என்னைப் போலவே எதிரே வராந்தாவில் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்திருந்தாள். அறிமுகமாகாத பெண் முன் கூட, கூப்பிடாத அந்தக் கூட்டம் கொஞ்சங்கூடச் சங்கோசங் கொள்ள வில்லை. நல்ல வேளையாக எங்களுடன் பேச வேண்டும் என்ற உற்சாகத்தை அவளிடம் காட்டாமல் என்னிடம் மட்டும் காட்டினார்கள். வீட்டுக்காரரும் அவருடைய மனைவியாரும நிரம்பப் பதட்ட மடைந்து போனார்கள. அவருடைய விதவைப் பெண் தான் ராஜலக்ஷ்மியின் பக்கத்தில் உட்கார்ந்து அவளுக்கு விசிறிக் கொண்டிருந்தாள். நான் எப்படியிருக்கிறேன்? என்ன உடம்பு? எவ்வளவு நாள் இருப்பேன்? ஊர் பிடித்திருக்கிறதா இல்லையா? ஜமீன்தார் வேலைச் சரியாக நடக்கிறதா, அல்லது பார்வையன்றித் திருட்டுப் போகிறதா? அதற்காக ஏதாவது புது ஏற்பாடு செய்யப் போகிறோமா இல்லையா?—இந்த மாதிரி கேள்விகளை அர்த்தத்துடனும், அர்த்த மற்றும் கேட்க அவர்களுக்கு நான் பலவிதமாகப் பதில் சொல்லிக்கொண்டே குசாரியினுடைய வீட்டு நிலைமையைக் கொஞ்சம் நினைக்க ஆரம்பித்தேன். வீட்டில் அநேக அறைகள் இருந்தன. வீட்டில் நுழைகிற பொழுதே பார்த்தேன்: இரண்டு மூன்று களஞ்சியங்கள் இருந்தன. ஒரு மரத்தடியில் நெல்லைப் புழுக்குவதற்குச் சில பாத்திரங்களும், அருகில் இரண்டு கன்றுக் குட்டிகளுமிருந்தன. மாடை மட்டும் அங்கே காணும். ஆனால் குசாரிக்கு அன்னத்தைப் போல பாலும் குறைவில்லை என்று கண்டு கொண்டேன். தென்புறத்து வராந்தாவில் ஏழெட்டு மண் குடங்கள் வரிசையாக இருந்தன. அவற்றில் வெல்லமோ அல்லது, வேறு ஏதாவது சாமான்களோ இருக்கலாம். அல்லது சில காலியாகவும இருக்கலாம்.

குசாரியினுடைய மனைவி எங்களை உபசரிக்கும் விஷயமாகத் தான் எங்கோ போயிருக்கவேண்டும். வீட்டுக்காரரும் ஒரு தரம் கண்ணில் பட்டுவிட்டு எங்கோ போய்விட்டார். அவர் திடீரென்று வெகு பரபரப்புடன் அங்கே வந்து ராஜலக்ஷ்மியைப் பார்த்து "அம்மா வா், கை கால் அலம்பிக்கொண்டு உட்காருவோம்" என்றார்.

பதினைந்து பதினாறு வயதுள்ள அழகும் நல்ல தேகமும் உடைத்த பையன் ஒருவன், ஒரு பக்கம் உட்கார்ந்து கொண்டு கவனமாக எங்கள் பேச்சைக்கேட்டுக் கொண்டிருந்தான். வீட்டிற்கார குசாரியின் பார்வையில் அவன் விழுந்ததும் "அடே, ஹரிபதா நைவேத்தியம்தயாராகிஇருக்கும் போய் எடுத்து வைத்துவிட்டுவா. பாக்கிப் பூஜைநேரமாகாது" என்று சொல்லி என்னைப் பார்த்து "உங்களுக்கு ரொம்ப கஷ்டத்தைக் கொடுத்துவிட்டேன். ரொம்ப நாழிகை ஆகிவிட்டது" என்று சொல்லி என் பதிலைக் கூடப்பாராமல் கண் மூடித் திறப்பதற்குள் அந்தர்த்யானமாகிவிட்டார்.

குறித்த நேரத்தில். அதாவது, குறித்த நேரத்திற்கு வெகு நாழிகைக்குப் பிறகு மத்தியான போஜனத்திற்காக ஏற்பாடாயிற்று. எங்களுக்குத் தகவல் அடிக்கடி வந்தது. வந்தவர்கள் கேள்விகேட்பது ஒருவாறு ஓய்ந்ததைக் கண்டு மூச்சுவிட்டேன். நாங்கள் சாப்பிடப்போகிறோம் என்பதைக் கேள்விப்பட்டதும், அவர்கள் ஒவ்வொருவராக விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்குப் போனார்கள். ஆனால் நான் சாப்பிடும் இடம் தனியாக இருந்தது. குசாரி கூட உட்காரவில்லை. எதிரேவந்து உட்கார்ந்தார். பூணல் போட்ட தினம் முதல் அன்று வரை சாப்பிடும் போது அவர் பேசினதே கிடையாதாம். ஆகையால்தான் அவர் தனியாகத் தன் சாப்பாட்டை முடித்துக்கொள்ள விரும்பினாராம். நான் அதற்கு ஒரு ஆட்சேபணையும் செய்யவில்லை. ஆச்சரியமும் அடையவில்லை.

அதே மாதிரி ராஜலக்ஷ்மியும் தான் பரான்னம் சாப்பிடுவதில்லை என்று சொல்லிவிட்டாள் என்று கேள்விப்பட்டதும் கூட நான் ஆச்சரியப்படவில்லை, ஆனால் அந்த நிகழ்ச்சியைக் கண்டு என் மனதில் கோபம் ஏற்பட்டது. அப்படி ஏன் செய்ய வேண்டும் என்று எனக்கு அர்த்தமாகவில்லை, ராஜலக்ஷ்மி என் மனதில் இருந்ததை ஊகித்து "இதற்காக நீ வருத்தப்படாதே. நன்றாகச் சாப்பிடு, நான் சாப்பிடமாட்டேன் என்பது அவர்கள் எல்லோருக்கும் தெரியும்" என்றாள்.

"எனக்கும் தெரியாது. ஆனால் எதற்காக அழைப்பை ஏற்றுக் கொண்டு இங்கே வரவேண்டும்? என்றேன் நான்.

இதற்குப் பதில் ராஜலக்ஷ்மி அளிக்கவில்லை. குசாரியினுடைய மனைவி அளித்தாள்.

"நான்தான் கட்டாயப்படுத்தி அழைத்து வந்தேன் அப்பா. இவள் இங்கே சாப்பிடமாட்டாள் என்பது தெரியும். ஆனால் அவளுடைய கிருபையால் எங்கள் வயிறு வளர்கிறது. அவளுடைய பாத தூளி இந்த வீட்டில் பட வேண்டும் என்ற ஆசையால் நான் இங்கே கூட்டிக் கொண்டு வந்தேன். என்னம்மா சரிதானே!" என்று சொல்லி அவள் ராஜலக்ஷ்மியின் முகத்தைப் பார்த்தாள்.

"இதற்குப் பதில் நான் இன்று சொல்லமாட்டேன் அம்மா. வேறொரு நாள் தான் சொல்லுவேன்" என்று சொல்லி விட்டு ராஜலக்ஷ்மி சிரித்தாள்.

ஆனால் நான் மிகவும் ஆச்சரியமடைந்தவனாக நிமிர்ந்து குசாரியினுடைய மனைவியின் முகத்தைப் பார்த்தேன். அப்பேர்ப்பட்ட ஒதுப்புறமான கிராமாந்திரத்தில் இயற்கையாகவே அவ்வளவு அழகாகவும், நயமாகவும் பேசும் பெண்மணி இருப்பாள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அந்த இடத்தில் இன்னுமோர் அதிசயமான பெண்ணினுடைய பரிச்சயம் ஏற்படுவது பாக்கியிருந்தது என்று நான் கனவில் கூட எண்ணவேயில்லை; எனக்குப் பரிமாறும் வேலையைத் தன் விதவைப் பெண்ணிடம் ஒப்படைத்து விட்டு விசிறியைக் கையில் வைத்துக்கொண்டு என் எதிரே உட்கார்ந்தாள். வயதில் எனக்கு மிகவும் மூத்தவளாக இருப்பாள்: அதனால் தான் முக்காட்டைத் தவிர அவள் முகத்தை வேறுவிதமாக மூடிக் கொள்ள வில்லை. அவள் அழகு வாய்ந்தவளோ இல்லையோ அது என் மனதில் படவில்லை. அவள் சாதாரண வங்காளிப் பெண்ணை போல ஸ்நேக பாவமும். கருணையும் கொண்டவளாகத் தென்பட்டாள். வாசற்படிக்கருகில் வீட்டுக்காரர் நின்று கொண்டிருந்தார். வெளியிலிருந்து அவருடைய பெண் "அப்பா உனக்கு இலை போட்டாய் விட்டது" என்றாள்.

நாழிகையாகி விட்டது ஆகையால் அவரும் அவள் எப்பொழுது கூப்பிடுவாள் என்று தான் காத்திருந்தார். இருந்தாலும் ஒரு முறை தன் பெண்ணையும் என்னையும் பார்த்து விட்டு "கொஞ்சம் போகட்டும் அம்மா. பாபு சாப்பிட்டானதும்—" என்று இழுத்தார்.

உடனே அவள் மனைவி "இல்லை நீங்கள் போங்கள். அநாவசியமாக அதெல்லாம் வீணாக வேண்டாம். எல்லாம் ஆறிப்போய்விட்டால் நீங்கள் சாப்பிட மாட்டீர்கள். எனக்குத் தெரியும்" என்றாள்.

குசாரி தயக்கத்துடன் "ஏன் வீணாகிறது?—பாபு சாப்பிட்டானதும் போகக்கூடாதா?" என்றார்.

"நான் இருக்கிற பொழுதே அவர் மிகவும் சங்கோசப்படுகிறார். நீங்களும் இங்கே நின்று கொண்டிருப்பானேன. நீங்கள் போங்கள்—நான் சொல்லுகிறேன் அப்பா" என்று சொல்லி அவள் என் முகத்தைப் பார்த்தாள்.

நானும் சிரித்து "இன்னும் அதிகமாகச் சங்கோசம தான் படுவேன். நீங்கள் போங்கள் குசாரி மகாசயரே! சாப்பிடாமல் நின்று கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம்" என்றேன்.

மேலே ஒன்றும் சொல்லாமல் அவர் தயங்கிக்கொண்டே போனார். விருந்தாளி சாப்பிடும் பொழுது கூட இருக்காமல் போகிறோமே என்று எண்ணிக் கொண்டு தான் போனார் போலத் தோன்றிற்று. அவர் என்னுடைய பலவந்தத்தை ஏன் ஒப்புக்கொண்டார் என்பதும் எனக்குத் தெரிந்தது. அவர் போனதும் அவருடைய மனைவி "சாப்பாடு தயாரானவுடனே சாப்பிட்டு விட வேண்டும் ஆறிப்போன பிறகுச் சாப்பிடக் கூடாது. அதனால் தான் பலவந்தப் படுத்தி அனுப்பினேன். ஆனால் விருந்தாளிகள் சாப்பிட்டு முடிவதற்கு முன் சாப்பிடுவது என்பதும் கடினம் தான்" என்றாள்.

அதைக் கேட்டு நான் மனதிற்குள் வெட்கமடைந்தேன். "நான் யாருக்கும் விருந்தளித்ததில்லை. ஆனால் வாஸ்தம் தான். ஏதோ கொஞ்சம் இருக்கிறது வீணாகி விட்டால் திரும்பவும் தயாரிக்க முடியாதல்லவா?" என்றேன்.

குசாரியின் மனைவி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். அவளுடைய முகம் சிறுத்து விட்டது என்று எனக்குத் தோன்றிற்று. அதற்குப் பிறகு அவள் சொன்னாள்.

"நீ சொல்லுவது முற்றிலும் பிசகல்ல அப்பா, பகவான் எங்களுக்கு ஏதோ கொஞ்சம் கொடுத்திருக்கிறார். ஆனால் ஒரு வேளை ஒன்றும் கொடுத்திராவிட்டால் கூட அது அவருடைய தயவுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. வீட்டில் இந்த விதவைப் பெண் ஒருவள் தான். களஞ்சியங்களில் அதிகமாகத் தானியங்களும், குடம் குடமாகப் பாலும இருந்து என்ன செய்கிறது? இதை யெல்லாம் அனுபவிக்க வேண்டியவர்கள் எங்களை விட்டு விட்டுப் போய் விட்டார்கள்."

இப்படிச் சொல்லும்போதே அவளுடைய கண்கள் கலங்கி விட்டன. உதடுகள் துடித்தன. ஏதோ ஒரு ஆழ்ந்த வேதனை அந்த வார்த்தையில் பதிந்திருந்தது என்று கண்டேன். ஒரு வேளை அவர்களுடைய செல்லப்பிள்ளை இறந்து போயிருக்கலாம். நான் முன்னால் பார்த்த பையனை ஆதரவில் எடுத்துக் கொண்டும், தாய் தந்தையருடைய மனது சமாதானமடையாமல் இருக்கக்கூடும் என்று எண்ணினேன். நான் மௌனமாக இருந்து விட்டேன். ராஜலக்ஷ்மியும் ஒரு வார்த்தையும் சொல்லாமல் அவள் கையைத் தன் கையில் வைத்துக் கொண்டு மௌனமாக இருந்தாள். அவள் மேலும் பேச ஆரம்பித்த பொழுது எங்கள் மெய் மறந்து கலைந்து விட்டது. அவள் தன்னைத் தானே சமாளித்துக் கொண்டு "ஆனால் எங்களைப் போல அவர்களுக்கும் நீங்கள் தான் அன்ன தாதாக்கள். என் வீட்டுக்காரரிடம் சொன்னேன். நம்முடைய எஜமானிடம் நமது துக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதில் என்ன வெட்கம். நம் எஜமானர்களை ஒரு தரம் சாப்பாட்டிற்குக் கூப்பிட்டுக் கொண்டு வாருங்கள். இதற்கு ஏதாவது ஒரு வழியிருக்கிறதாஎன்று கேட்டுப் பார்க்கிறேன்" என்று சொல்லி அவள் தன் புடவைத் தலைப்பை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

விஷயம் என்னவென்று எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ராஜலக்ஷ்மியினுடைய முகத்தைப் பார்த்தேன். அவளும் என்னைப்போல் திகைத்திருந்தாள். முன்போல இருவரும் மௌனமாக இருந்தோம். குசாரி தங்களுடைய துக்கத்தின் கதையை மெதுவாக எடுத்துச் சொன்னாள். கடைசீ வரையில் கேட்டுவிட்டு எல்லோரும வாய் வார்த்தை வராமல் உட்கார்ந்திருந்தோம். ஆனால் அந்தக் கதையை வெளியிடுவதற்கு அவ்வளவு பீடிகை வேண்டித்தான் இருந்தது என்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை. ராஜலக்ஷ்மி பிறர் வீட்டில் சாப்பிடமாட்டாள் என்பதை அறிந்தும் அவளைச் சாப்பிடக் கூப்பிட்டதிலிருந்து, வீட்டுக்காரரை வேறு இடத்திற்கு அனுப்பியவரை எல்லாம் அதற்காகவே ஏற்பட்டது. அது எப்படியானாலும் கண்ணீருடனும் அடைபட்ட குரலுடன் அவள் வெளியிட்ட விஷயம் எவ்வளவு தூரம் 'சரி' என்பது எனக்குத் தெரியாது. ஒரு தரப்பை மட்டும கேட்டு விட்டு அவள் சொன்னது உண்மை என்று சொல்லுவதும் கடினம். ஆனால் எங்களை மத்தியஸ்தம் வைத்து சிக்கல் எடுக்கும்படி அவள் வேண்டிக் கொண்ட விஷயம் எவ்வளவு ஆச்சரியகரமானதோ அவ்வளவு இனிமையும் கடினமும் கொண்டது.

(தொடரும்.)

FREE! FREE! FREE!

லைசென்ஸ் தேவையில்லை

ஆடோமாடிக் ரிபீடர்

திருடர்களையும், விலங்குகளையும பயமுறுத்த ஆடோமாடிக் ரிபீடர் எவ்விதத் தொந்தரவுமின்றி 6 முறை சுடலாம. உண்மை ரிவால்வரைபபோல் சப்தம் கேட்கும. சுடும்பொழுது நெருப்பு தெரியும. தீங்கான விலங்குகள் பறவைகளை விரட்ட உபயோகமானது. அவசரத்திற்குஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும். லைஸென்ஸ் தேவையில்லை. நெ. 7777 விலை ரூ. 4|4|-35 ரவைகள் இலவசம். நெ. 8888 ரூ. 5|8|- 45 ரவை இலவசம். நெ. 9999 ரூ. 6|4|- 55 ரவை இலவசம். அதிகப்படி 1000 ரவை ரூ. 3|- பெல்டுடன் கேஸ் ரூ. 1|4|- ஆயில் ரூ. -|5|- தபால் சார்ஜ் பிரத்யேகம்.

இலவசம்:— ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட் ஒரு அழகிய மியூட் கைக் கடியாரம். ஒவ்வொரு துப்பாக்கியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். சேர்ந்தாற்போல் இரண்டு வாங்கினால், 3 அழகிய மியூட் கடியாரங்கள், 3தோலா லண்டன் நியூ கோல்ட், தபால் சார்ஜ்.

LONDON COMMERCIAL COMPANY.

(EAB) Post Box No. 165, (S.M.M.) LAHORE (India)



த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

நின்னுடனேலே நீராஜாக்ஷ!

அனுபல்லவி

கன்னவாரிபைனி காகஸேயனேல

சரணம்

1. கர்மமுனகு தகின கார்யமுலு நடுசுனு
தர்மமுனகு தகினட்டு தைவமு ப்ரோசுனு
2. சித்தமுனகு தகின ஸித்தியு கல்குனு
வித்தமுனகு தகினட்டு வேடுக நடுசுனு
3. ஸத்யரூப! நின்னு ஸன்னுதி ஜேயு
தத்வமு தெலிஸின த்யாகராஜுனிகி

II

நீரஜாக்ஷ!	—தாமரைக் கண்ணா!
நின்னு ஆடன் ஏல	—உன்னைக் குற்றம் கூறுவதில் என்ன பயன்
கன்னவாரிபைனி	—கண்டவர்களிடமெல்லாம்
காகஸேயனேல	—கோபம் கொள்வதால் யாது பயன்
கர்மமுனகு தகின	—செய்த கருமங்களுக்கு தகுந்தபடி
கார்யமுலு நடசுனு	—காரியங்கள் நடைபெறும்
தர்மமுனகு	—தர்மபுத்திக்கு(செய்துள்ள தான தருமங்களுக்கு)
தகினட்டு	—தகுந்தாற்போல
தைவமு	—தெய்வம்
ப்ரோசுனு	—காப்பாற்றும்
சித்தமுனகு	—மனோபரிபக்குவத்திற்கு
தகின	—ஏற்றதாயுள்ள
ஸித்தியு	—அணிமாதி அஷ்டஸித்திகள்
கல்குனு	—உண்டாகும்
வித்தமுனகு	—செல்வத்திற்கு
தகினட்டு	—தகுந்தபடி
வேடுக நடுசுனு	—வேடிக்கைகள் நடைபெறும்
ஸத்யரூப!	—ஸத்யஸ்வரூபனே!
நின்னு ஸன்னுதிஜேயு	—உன்னைத் துதிசெய்து உய்யும்
தத்வமு தெலிஸின	—உண்மையை அறிந்துகொண்டுள்ள
த்யாகராஜுனிகி	—த்யாகராஜனுக்கு
நின்னு ஆடன் ஏல	—உன்னைக்குற்றம் கூறுவதில் யாதுபயன்

III

இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் தனக்கு பகவத் கிருபை கிட்டாததற்குக் காரணம் தன் பூர்வ கர்ம வினைப்பயனேயென்று கூறிக்கொண்டு, பகவானைக் குற்றம் கூறுவது தவறு என்று உணர்ந்ததாய் தெரிவித்துக் கொள்கிறார்.

நின்னுடனேல:—'நின்னன வலிஸினதேமி' 'மீவல்ல குணதோஷமேமி' என்ற கீர்த்தனங்களில் கூறப்பட்டுள்ளது போன்றே இங்கும் காணப்படுகிறது.

கன்னவாரிபைனி:—

ஸுகஸ்ய துக்கஸ்ய நகோபிதாதா
பரோத தாதீதிகு புத்திரேஷா |
அஹம் கரோமீதி வ்ருதா பிமான:
ஸ்வகர்ம ஸூத்ரக்ரதி தோஹிலோக:|| என்ற ச்லோகத்தில் கூறப்பட்டுள்ளது போன்று கர்ம வினையை அனுபவிக்கும் சேதனன், பிறரை நிந்திப்பதால் பயனில்லை என்று உணரலாகும்.

இதே அபிப்ராயத்தை 'ப்ராரப்த மிட்லுண்டகா' என்ற கீர்த்தனத்திலும் தெரிவித்துள்ளார்.

கர்மமுனுகு:—கர்மங்களைச் செய்து பயனை பகவதர்ப்பணப் செய்தவனுக்கு ஒருபோதும் துயரமில்லை. தனக்கென்று செய்த கர்மங்களின் பயனை சேதனன் அனுபவித்தேயாகவேண்டும். என்ற உண்மைக் குறிப்பிடுகிறார். இதற்குப் பொருத்தமான உதாரணங்களையும் இக்கீர்த்தனத்தில் தெரிவித்துள்ளார்.

ஏனெனில்
குணத்திலும்,
தரத்திலும், நறுமணத்திலும் அவை நிகரற்றவை.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியா, பர்மா, சிலோனில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.
மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்:
சேலம்.

MNK-14-TM

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugare like spellbound any one or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps SANTI ASRAM, Dacca (Bengal).

IV

ராகம் கன்னட ஆதி தாளம்

(29—வது மேள ஜன்யம்.)

ஆ: ஸரிகம பமதா நிஸா
அவ: ஸ்நி ஸ்தப கம தப (காமப) கமரிஸ:

பல்லவி

1. ; ; ; பா ;	பம மா கம	தா ;	; தா	நீ ஸா	; நிஸ்
நின்	ஞு	ட	நே	. .	. .
2. தா பாமா பா ;	பம மா கம	தா ;	; த நி	ஸ்ரி ஸ்நி	ஸா நிஸ்
. ல . நின்	ஞு	ட	நே .	. . . .	. . . .
3. தப தத பம	பத பத பம மா கம	தா ;	; த நி	ஸ்ரி க்ம	ரிஸ் ரிஸ்
. . ல . . .	நின் . . ஞு	ட	நே .	. . . . .	. . . .
நிஸ் தத பம	கா மா தப காமப	க ம ரீ	ஸா நிஸ	கம தநி	ரிஸ் நிஸ்
. . ல . . .	நீ . ர . ஜா . .	க்ஷ . .	. ஸ்ரீ .	. . . .	ரா . . .
தப ததபம					
. . ம . . .	(நின்னுட)				

அனுபல்லவி

1. ; ; ; தா நீ	ஸா ; ஸ்நி	ஸா ;	; தா	நீ தநி	ஸா நிஸ்
கன்ன	வா . .	ரி	பை	. . .	. . .
2. தா பத பம	தா நீ ஸா ; ஸ்நி	ஸா ;	; க ம	தநி ஸ்ரீ	ஸ் நிஸ்
. னி . . .	கன்ன வா . .	ரி	பை .	. . . .	. . .
3. தப தத பம	தாநீ ஸா; ஸ்நி	ஸா ;	; த நி	ஸ்ரி க்ம்	ரிஸ் ரிஸ்
. . னி . . .	கன்ன வா . .	ரி	பை .	. . . .	. . . .
4. நிஸ் தத பம	தா நீ ஸா; ஸ்நி	ஸா ;	; தா	நீ த நி	ஸ்ரி க்ம
. . னி . . .	கன்ன வா . .	ரி	பை	. . . .	. . . .
ரீ ஸா ; தநி ஸ்ரி	ஸா நிஸ் தா	பா ;	; க ம	தப கா	மப கம
. னி கா . . .	க ஸே . .	ய	னே .	. . .	. . . .
ரிஸ ஸரிகம					
. . வ . . .	(நின்னுட)				

சரணம்

1. ; ; ; பா	பா பம கம ரீ	ஸா ;	; ஸ நி	ஸா கா	மா கம
ஸத்	ய ரு	ப	நின் .	. .	. . .
2. பா பம கம பா	பா பம கம ரீ	ஸா ;	; நி ஸ	கம தநி	ஸா நிஸ்
. ஞு	ஸத் ய ரு	ப	நின் .	. . . .	. . .
தப பம கம ரிக	மப பம கா மா	ரீ ஸா	; நீ	ஸா ரிக	மப பம
. . ஞு	ஸன் . . . . ஞு .	தி .	ஜே	. . . .	. . . .
1. கம தா ;	தா நீ ஸா ; ஸ்நி	ஸா ;	; தா	நீ தநி	ஸா நிஸ்
. . யு	தத் . வ . .	மு	தெ	. வி .	. ஸி .
2. தா பத பம	தா நீ ஸா ; ஸ்நி	ஸா ;	; தா	நீ தநி	ஸ்ரி க்ம
. ன	தத் . வ . .	மு	தெ	. வி .	. . ஸி .
ரீ ஸா ; த நி	ஸ்ரி ஸா நிஸ் தா	பா ;	; க ம	தப கா	மப கம
. ன த்யா .	. . க . . .	ரா	ஜ .	. . .	. . னி .
ரிஸ நிஸ கம					
. . இ . . .	(நின்னுட)				

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

இனம் ! இனம் !! இனம் !!!
'திருவாசகத்தின் பெருமை' என்ற புத்தகம், விலாசம் தெரிவிப்பவர்களுக்கு இனம்.
ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராய நகர் : : மதராஸ்.

FREE!

மாதம் ரூ. 575 சம்பாதிக்க வேண்டுமென்ற அபிப்பிராயமிருந்தால் எமது உண்மையான அமெரிக்கன் நியூ கோல்ட் சம்பந்தமான பூரா விவரங்களுக்கு எழுதவும். உரைகல்லில் உண்மை தங்கத்தைப் போலிருக்கும். ... பிளேட்டுகளாகவும் அடிக்கலாம், நிறம் மாறுவதில்லை. எமது தங்கத்தால் செய்யப்பட்ட எல்லாவித நகைகளும் எம்மிடம் கிடைக்கும். 6 தோலா அமெரிக்கன் நியூ கோல்ட் 2 ஜோடி அழகிய கைவளையல்கள், 2 ஜோடி கடுக்கன், 2 மோதிரம் முதலியன சாம்பிளாக அனுப்பப்படும்.

இலவசம்;—நகைகளின் பூரா காட்லாக், விவரங்கள் இலவசமாக அனுப்பப்படும் இன்றே எழுதுங்கள்.

American New Gold Co.
P. B. 61 (S.M.M.) Lahore India)
(EAB.)

RINGWORM OINTMENT AMRUTANJAN Ld BOMBAY, MADRAS, CALCUTTA

குறைந்தவற்றை உபயோகித்து சர்மத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.
புண், படை, சிறங்கு, கொப்பளம்
முதலிய சர்ம வியாதிகளுக்கு
சூர்யோதயம்

படை மருந்தை உங்கள் படைமீது தடவினால் சர்மத்தில் எவ்வித மச்சமும் ஏற்படாமல் சீக்கிரத்தில் குணமளிக்கும்.

அமிர்தாஞ்சனம் லிமிடெட், பம்பாய், சென்னை.

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்.

நஞ்சன்கூட பல்பொடி
... பல வியாதிகளைத் தடுக்கவும், குணப்படுத்தவும்
ஊக்கம், உற்சாகம் ஊட்ட | ஜீர்சப் | அஜீர்ண, பித்த சமனி
உஷ்ண சமனி | கூலாயில் | ஸ்நான தைலம்

கவனிக்க: போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

மதிப்புரை

கலைஞன் தியாகம்-சிறு கதைகள்-வித்வான் கி. வா. ஜகந்நாதன் இயற்றியவை. கிடைக்குமிடம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூபா 1-4-0

"பண்டைத் தமிழிலக்கியங்களின் சுவையை நுகர நுகரப் பழமையும் புதுமையும் கலந்த நெறி ஒன்று இலக்கியத்திலே வேண்டுமென்ற எண்ணம் வர வர வலியுற்று வந்தது" என்று ஸ்ரீ கி. வா. ஜகந்நாதையர் தம் புத்தக முகவுரையில் எழுதுகிறார். அவர் கனவு கருகி உதிராமல் இப்புத்தகத்தில் மலர்ந்திருக்கிறது. ஆசிரியர் புத்தகத்தில் குறித்தவிஷயம் துருவி ஆராயத் தகுந்தது.

பழைய நூல்களில் தோய்ந்து பழுத்த தமிழ்ப் புலமை அடைந்து புதுத் துறையில் இறங்கியிருக்கிறார் இந்நூலாசிரியர்: இவ்விரு சேர்க்கையில் தான் இந்நூல் பிறந்திருக்கிறது.

இப்புத்தகத்தில் பதினெட்டுக் கதைகள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு கதையிலும் ஒரு பாவம் இல்லாமற் போகவில்லை, ஆனால் 'கலைஞன் தியாகம்' ஒரு சிகரம் போலத் தனித்து நிற்கிறது. ஆரம்பம் முதல் இறுதி வரையில் ஒரு துயர் படர்ந்த ஒப்பற்ற சோபை அதில் தோன்றுகிறது. கலைஞனுடைய கிழியில் தீட்டப்பட்ட சோக நாடகமோ என்று சொல்லும்படி அது காட்சி அளிக்கிறது. நாராயண பிள்ளையின் கலைத் திறனும், முருகனுடைய அளவு கடந்த பேரன்பும் ஆழ்ந்த குருபக்தியும் கிருஷ்ணனுடைய கடும் மனப்போரும் முடிவில் கண்ணீரெழுப்பும் அவனுடைய பச்சாத்தாபமும் நம் முன் வந்து நிற்கின்றன.

"அண்ணே இப்படி ஏன் பேசுகிறீர்கள்? என் அப்பன் என்கிறீர்களே; உங்களுக்கு அப்பனல்லவா?

"முதலில் உனக்குத்தான் அப்பன். அப்புறம் அவனுடைய ஆத்மாவுக்கு சம்மதமானால் எனக்கு அப்பன். இந்தா வாங்கிக் கொள்." கண்ணீரொழுக முருகன் அதைக் கை நீட்டி வாங்கிக்கொள்ளுகிறான்.

உள்ளங் கசிந்த ஒருவன் கலகஞ் செய்து பின் சோகம் தோய்ந்த அன்பு மிகுதியில் சகோதரனை நாடும் நிலையை இச்சம்பாஷணை நம் முன் நிறுத்துகிறது.

"மலரின் குறை" ஒரு கதை அன்று: ஒரு கானந்தான். மலரின் அழகு, இன்பம், மணம் முதலியன குணங்களைக் கண்டு மன்மதன் மலர்களைத் தனக்குச் சரங்களாக ஆக்கிக்கொள்ளுகிறான்.

வீட்டிற்கு விளக்காயுள்ளவன் தொலையிலிருந்து க்ஷயரோகத்தோடு வீடு திரும்புகிறான். அவன் வரும்பொழுது டார்ச்சு விளக்கொன்றைத் தன் பையன் ஜயராமனுக்கு வாங்கி வருகிறான். அந்தி வேளை; எல்லோரும் தீபம் ஏற்றுகிறார்கள். அந்த சமயத்தில் ஜயராமனும் ஏற்றுகிறான். ஆனால் வீட்டிற்கு விளக்காயுள்ளவன் ஒளி மெல்ல மழுங்கி அவிந்து விடுகிறது. ஜயராமன் டார்ச்சு விளக்கும் அதே சமயத்தில் அவிந்து விடுகிறது. "அவர்கள் ஒரு விளக்கு அணைந்து விட்டதென்று அழுகிறார்கள்; அவனும் ஒரு விளக்கு அணைந்ததென்று தான் அழுகிறான்." இந்தச்சித்திரத்தை "அணைந்த விளக்கு"என்ற கதையில் நாம் காண்கிறோம்.

'கிழவியின் நிழலை' வாசிக்கிறபொழுது ஏசுநாதர் சொல்லிய கதைக்கு என் மனம் விரைகிறது. ஒரு கிழவி தன்னுடைய சிறிய காணிக்கையைமனமுவந்து ஆண்டவனுக்கு அர்ப்பணஞ் செய்து விடுகிறாள். அவர் ஏற்றது இச்சிறு காணிக்கையே. செல்வச் சீமான்கள் தந்த காணிக்கைக் குவியல்களல்ல.

இங்குக் கிழவியின் நிழலில், சித்திரிக்கப்பட்டிருக்கிற அரசனுடைய அகங்காரமேபோல் எழுந்த பிரமாண்டமான கோயிலிலே ஆண்டவன் இல்லை. கிழவி தண்ணீர் கொற்றர்களுக்குத் தந்து தன் வீட்டுச் சிறு கல்லையும் உதவினாள். அக்கல்லின் நிழலில் அவள் படுத்தாள்" என்று கதை முடிகிறது. இக்கதை ஏசுநாதர் கதையை ஞாபகப்படுத்தாமல் போகுமா?

'தோட்டக்காரன்' என்ற கதை இயற்கையில் அன்பு வைத்த தோட்டக்காரனின் பாசத்தை நன்றாய்க் காண்பிக்கிறது. பிறர் கையில் தோட்டம் போகவே, தான் வைத்து வளர்த்த மாமரத்தை ஒருவரும் அறியாமல் தோட்டக்காரன் பார்க்கப் போகிறான். அவனைத் திருடனென்று வீட்டுக்காரன் சந்தேகிக்கிறான்.

"சாமி என் பிள்ளையைப் பார்க்க வந்தேன். சத்தியமாகச் சொல்லுகிறேன்.........

'சாமி, இந்த மாமரப் பைத்தியந்தான் பிடித்திருந்தது. இதை நான் என் கையால் வளர்த்தேன். ஒரு தடவையாவது இதைப்பார்க்க வேணுமென்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டேன்'

பிராண்டெல்லோ (Pirandello) எழுதிய ஒன்றில் மலைப் பாறைக்கிடையே தோன்றிய ஒரு புல்லின் அலகிற்காக ஒருவன் பிராணனை விடுகிறான். ஒரு மத்தகஜம் ஊராயும்பொழுது இமயமலையிலுள்ள ஒரு தேவதாரு மரத்தின் பட்டை பெயர்ந்து விடுகிறது. அம்மரத்தை வளர்த்தவள் பார்வதி: தன் பிள்ளை முருகவேள் அசுரர்களினால் அடிபட்டு வந்தால் எப்படி அழுவாளோ அப்படி அழுதாள் பார்வதி. பட்டை உரிந்த தன் மரத்தைக் கண்டு என்று காளிதாசனும் பேசுகிறார். மலர்களுக்காக கண்ணீர் விட்ட கவிகளும் உண்டு: ஆனால் இச் சம்பவம் எல்லோருக்கும் நிகழ்ந்து விடாது. ஓர் அபூர்வமான அனுபவம்.

இவருடைய ஒவ்வொரு கதையும் ஒரு கருத்தை முனையாக வைத்துக் கொண்டு கிளம்புகின்றது. அதில் குற்றமில்லை. ஆனால் 'அவன்' என்ற கதையில் உண்மையான வாழ்க்கைச் சித்திரம் எழுந்து நிற்கிறது. அதில் வாழ்க்கையின் கசப்புப் புயலடிக்கிறவை நாம் பார்க்கிறோம்,

உத்தராதி மடத்து ஸ்வாமிகளாகிய ஸ்ரீ ஸத்ய த்யான தீர்த்த ஸ்ரீ பாதங்களவரு சென்ற மாதம் 24-ம் தேதி பண்டரீபுரத்தில் ப்ருந்தாவனஸ்தரானார்.

பினாங்குக்குப் போய் விடுகிறான் புருஷன். அவனுடைய மனைவி வறுமையில் வயிறு வளர்க்க வேண்டியிருக்கிறது. ஒரு குருடனோடு பிச்சையெடுக்கிறாள் சில நாள். முடவனோடு பிச்சை யெடுக்கிறாள் மற்றுஞ் சில நாள்: ஆனால் சிந்தை முழுவதும் நீலக் கடலைக் கடந்து பினாங் ரப்பர் தோட்டத்திற்குத் தன் கணவன்பாற் செல்லுகிறது. இதை உணராமல் அவள் நடத்தையை சங்கிக்கும்படி நேர்ந்து விடுகிறது. தன் கதையை அவளே சொல்லுகிறாள். உண்மை வெளியாகிறது.

ஒவ்வொரு வாரமும் அவள் கப்பலை எதிர் பார்க்கிறாள். 'அவர் வருவாரா சாமி சொல்லுங்கள்!?'

என் கண்களில் நீர் ததும்பக் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர் வருவாரா? என்று அவன் கேட்டது தான் அவள் வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி. ஆனாலும் நான் இன்னும் அவள் கதையிலேதான் மூழ்கியிருந்தேன்.

உன் பெயர் என்ன? அம்மா. என்று கேட்க வாயெடுத்தேன். அவள் மின்னலைப் போல் யாரையோ கண்டு கூட்டத்துக்குள்ளே ஓடினாள்.'

அவளைத் தொடர்ந்து ஓட வேண்டுமென்ற பைத்தியக்கார உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. ஆனால் கால்கள் வேலை செய்யவில்லை. 'உன் பெயர் என்ன அம்மா? என்ற கேள்வியை மாத்திரம் என் உதடுகள் மந்திரத்தைப் போல ஜபித்தன"

இக்கதையிலும் கலைஞன் தியாகத்திலும் அழிவிலா அம்சங்கள் இருக்கின்றன. இவ்விரு கதைகள் அவருடைய உண்மையான சைத்திரிக மனப் பண்பை காண்பிக்க போதும்.

இந்நூலாசிரியர் எழுத்திலே பழமையும் புதுமையும் காண்கிறோம் என்று ஆரம்பத்திலேயே நான் கூறினேன். அவருடைய நடையை நோக்கினால் இந்த அபிப்பிராயம் வலிவுறும்.

"அவனுடைய முகத்தில் காலத்தின் கோடுகள் கீறப்பட்டிருந்தன" "ஆனாலும்அவனுடைய கையில் வெறும் மனித நாடி ஓடிற்றேயொழிய, ஒரு கலைஞனது நாடி ஓடவில்லை": "அவனுடைய கை விரல்கள் ஓடவில்லை; வயதின் கனம் பழைய முறுக்கை தளர்த்திவிட்டது": "இருதய உணர்ச்சியையும், வர்ணங்களையும் கலந்து அமைத்த அந்த அழகிய பொம்மைகள்": "நெஞ்சிலிருந்த அந்த உருவத்தை ஏன் புற உலகத்திலே தன் கைத்திறனால் வளையக் கூடாது": "உள்ளத்தில் பச்சையாயிருக்கும்போதே": "தன் ஜீவனை வர்ணமாகப் பிழிந்து கோலஞ் செய்திருக்கிறான்": "அவனிடம் இருந்த பொறுமையும் கோபமும் விடை பெற்றுக் கொண்டன": "இளங்குழந்தையின் ஹிருதயத்திலே காது வைத்துக் கேட்டிருந்தால்"

"முகத்தில் சோபை இல்லை; பேச்சிலே இன்பம் இல்லை நடையிலே துள்ளல் இல்லை; எல்லாவற்றிலும் ஒரு வாட்டம், ஒரு துயரத்தின் சாயையே தோன்றி வளர்ந்து வந்தது. அவன் உடல் மெலிந்தது" —

"முக வெட்டு, மெலிந்தஉடல், ஒட்டிப் போன கன்னம், நெற்றிக் கோடு எல்லாம் அதே அச்சு; நிறம் சாக்ஷாத் அவனுடைய நிறமே"

இம்மாதிரியான சொற்றொடர்களும், வாக்கியங்களும் பண்டையிலக்கியால்களிலேயே பொழுது போக்கின. ஆசிரியர்களிடம் காண்பது அரிது; ஆனால் இவரிடத்தில் பழைமையும், புதுமையும் கைகோர்த்து நிற்கின்றன. இவர் நடை புதிய எழுத்தாளர்களுக்கு ஒரு வழி காட்டியாய் நிற்கும் என்று நான் நினைக்கிறேன்.

— ஆர். எஸ். தேசிகன்

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3. ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1. வி. பி. செலவு அணு 5. ஜனனகால விவரம் or எழுதும்நேரம். சுமார் வயது தேவை.
ஹநுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

முஸ்லிம்களுக்கு
அவசியமான மதசம்பந்தமான நூல்களும், அங்கீகாரம்பெற்ற ஸ்கூல் புக் (வகுப்பு) 1—5வரையும் கிடைக்கும்.
ஷாஜஹான் புக் டெப்போ,
நாச்சியார் கோவில்.

சூதகம் நின்றிருந்தால்
3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.
Dr S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

சித்திரமும் சிருங்காரமும்

★

ஸாபுவின் வரலாறு — உன்னத ஸ்திதியை எட்டிய கதை — பிரிட்டனிடம் கொண்டிருக்கும் பற்றுதல் — 'பாக்ஸ்' படங்கள் — எதிர்பார்க்கவேண்டிய விருந்து — நடிகருக்குக் கௌரவம் — ஸீஸர் ரமிரோவுக்கு அழைப்பு — க்யூபா ஸர்க்கார் காரியம் — டைரோன் பவர் — பொருத்தமான நடிப்பில் விருப்பம் — கெட்டிக்கார கணவன் — ஜீன் டார்னியின் புருஷர் படும் பாடு — பம்பாய் நேஷனல் ஸ்டுடியோ.

எவ்வளவு கஷ்டம்!

"நீ பணக்காரனுக மாட்டாய்" என்ற கொலம்பியா படத்தில் ப்ரெட் அஸ்டேருடன் நடிக்கும் ரீட்டா ஹேவர்த், மேற்படி படத்தில் செய்யும் ஒரு நடனக் காட்சி.

ஸாபுவின் வரலாறு

ஸாபுவின் வாழ்க்கை விவரம் மிகவும் ரஸமானது: மிகுந்த ஏழ்மையிலிருந்த அவன் சகல போகங்களையும் அனுபவிக்கும்படியான நிலைமையை எட்டியிருக்கும் விதம் ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியதாகும். "யானைப் பையன்" என்ற படத்தில் முதன் முதல் நடித்து பிரசித்தியடைந்த ஸாபுவை இப்போது அறியாதவரே கிடையாது.

மத்ய இந்தியாவில் காராப்பூர் காட்டுப்பிரதேசத்தில் பிறந்தவன் ஸாபு. மைசூர் மஹாராஜாவிடம் வேலை பார்த்த ஒரு மாவுத்தனின் மகன். தகப்பனை யானைப்பாகன் சிறுவனின் ஆறும் வயதிலேயே காலமாகிவிட்டான். பையனுக்கு மாதம் இரண்டு ரூபா உபகாரமாகக் கொடுத்து வந்தார் மைசூர் மஹாராஜா. இதைக்கொண்டு ஸாபு ஜீவனம் நடத்தி வந்தான். படிப்பு வாசனை சிறிதுமில்லாத இந்தச் சிறுவன் யானைகளுடன் காலத்தைக் கழித்து வந்தான். இவ்விதம் மிகவும் கஷ்ட தசையில் இருந்த ஸாபு பணம் கிடைத்ததும் தலைகால் தெரியாமல் ஆடுவான் என பலர் எதிர் பார்த்தனர்; ஸாபுவின் மனோநிலை வேறு என்பதை இப்போது தான் அறிகின்றனர்.

ஸாபுவுக்கு இப்போது 16 வயதாகிறது. அவன் மனப்போக்கே ஒரு விதம். அவன் கொண்டிருக்கும் மனோபாவம் பிறர் கொள்வது போன்றதல்ல. அவன் கண்ட தத்துவமே வேறு விதமானது. தன்னை தூக்கிவிட்டவர்களிடம் அவன் கொண்டிருக்கும் பக்தியின் விஸ்வாசம் பார்ப்பவர் பாராட்டத்தக்கதாகும்: இத்தகைய உணர்ச்சியை சாதாரணமாக எல்லோரிடமும் காண முடியாது. ஸாபுவைக் கண்டெடுத்தவர் அலெக்ஸாண்டர் கோர்டா தான்; "யானைப் பையன்" என்ற படத்தில் நடிப்பதற்காக அந்த பிரபல டைரக்டர் அவனை அழைத்துப்போனார். அந்தப் படம் பிடித்து முடித்தது முதற்கொண்டே ஸாபுவுக்கு அவர் மாதாமாதம் சம்பளம் கொடுத்து தமது சேவையில் அமர்த்திக் கொண்டிருக்கிறார். இதனால் ஸாபுவுக்கும் அலெக்ஸாண்டர் கோர்டாவிடம் மஹத்தான ப்ரீதியும் மரியாதையும உண்டு. தன்னை புது வாழ்க்கையில் ஈடுபடுத்திய கோர்டாவுக்காக அவன் அவர் விரும்பியதை யெல்லாம் செய்து வைக்கத் தயார்.

கோர்டா ஸாபுவை இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு "ட்ரம்" "பக்தாத் திருடன்" என்ற இரு படங்களை அவர் பிடித்தார். அங்கு தான் ஸாபு புது வாழ்க்கை எத்தகையது என்பதைக் கண்டான். இங்கிலாந்திடம் ஸாபுவுக்கு விசேஷப் பற்றுதல் ஏற்பட்டது. ருட்யார்ட் கிப்ளிங் எழுதிய "ஜங்கிள் புக்" என்ற புத்தகத்தைப் படம் பிடிக்கும் வேலை பூர்த்தியானவுடன் அவன் இங்கிலாந்து திரும்பி, ஆகாய விமானப் படையில் சேர உத்தேசம் கொண்டிருக்கிறன். (கோர்டா தான் இந்த படத்தை டைரக்ட் செய்தவர்) இங்கிலாந்துக்காக சண்டையில் ஈடுபட்டு சேவை புரியும் பாக்கியம் தமக்களிக்கப் பட வேண்டும் என்று ஸாபு கோருகிறன்: இதற்குக் காரணம் இது தான்: படிப்பு வாசனையே இல்லாத தன்னை அந்த நாடு தான் வரவேற்று பெருமை படுத்தியது என்பதே அது. இந்த நோக்கத்துடன் தனது பெரிய சம்பாத்யத்தையும், சினிமாத் தொழிலையும் துறந்து விட்டு போக அவன் சித்தமாக இருக்கிறன்.

"ஜங்கிள் புக்" படம் பிடிப்பு ஆரம்பிப்பதற்கு முன்னர் ஸாபுவின் ஜோடியைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யப்பட்டது: காட்டு மிருகங்களுடன் உறவாடும் காட்சிகளுக்காக வேறு ஒருவனைக் கண்டு பிடிக்க டைரக்டர் முனைந்தார். ஆனல் ஸாபு இதை விரும்பவில்லை. இந்த விஷயத்திற்காக டைரக்டர் கோர்டா அதிகப் படி பணத்தை செலவு செய்யக் கூடாது என அவன் கூறிவிட்டான். தானே இந்த மிருகங்களுடன் கலந்து பழகத் தயாராக விருப்பதாகவும் அவன் தீர்மானமாகத் தெரிவித்து விட்டான்.

"நானே அந்த பயங்கர பிராணிகளுடன் சேர்ந்து நடித்தால்தான் உங்கள் படம் நன்கு சோபிக்கும். உண்மையாகவும் இருக்கும்" என்றான் ஸாபு.

"புலி, சிறுத்தை, வேங்கை, ஓநாய் முதலிய கொடிய விலங்குகளுடன் எல்லாம் பழகவேண்டியிருக்குமே?" என்றார் கோர்டா அவனிடம்.

"அதனல் பரவாயில்லை. மிஸ்டர் கோர்டாவுக்காக நான் அவற்றுடனும் உறவாடத் தயார்: எனக்கு பயம் கிடையாது, பிராணிகள் அதை அறிந்து கொண்டால் எனக்குத் தீங்கு இழைக்காது" என்றான் அவன் மறுபடியும்.

ஆகவே படத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு அநேக வாரங்கள், இந்தப் பிராணிகளின் சகவாஸத்தையே அவன் நாடி வந்தான். படப் பிடிப்பு துவக்கப் படும் சமயத்தில் அவன் தன்னந் தனியாக புலி, சிறுத்தை,



நியூ க்ளோப் தியேட்டரை சென்ற மாதம் சென்னை கவர்னர் மே த. ஸர் ஆர்தர் ஹோப் திறந்து வைத்தபோது எடுத்த படம். யூனியன் ஜாக் கொடி தொங்கவிட்டிருப்பதையும் அதற்கு சற்றுமேல் ஸர் ஆர்தர் ஹோப் உட்கார்ந்திருப்பதையும் பார்க்கலாம். (X) தியேட்டர் மானேஜிங் டைரக்டர் மிஸ்டர் ஸித்வா.

சித்திரமும் சிருங்காரமும்

சிசுவின் ஜனனம்

"சிசுவின் ஜனனம்" (Birth of a baby) என்ற படம் யாவரும் அவசியம் பார்க்க வேண்டிய படமாகும். இந்[illegible]தில் உண்மை நிலவாக்[illegible]ப்பட்டிருக்கிறது: ஒளிவு மறைவு ஒன்றும் கிடையாது: தலைப்புக்குப் பொருத்தமானபடியே படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது: சிசு பிறப்பு பற்றிய ஒவ்வொரு விஷயமும் நன்கு எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது:

மேரி பர்கஸ் (எலீனர் கிங்) தாயாகும் தருணத்தில இருக்கிருள். அப்போது அவளது டாக்டர் (ரிச்சர்ட் கார்டன்) கரு தரித்தவுடனேயே அவள் தன்னையண்டி தனது ஆலோசனையை நாடியது மிகவும் புத்திசாலித்தனமாகும் என்கிறார். அவர் அவளுக்கு குழந்தை ஜனித்தல் பற்றி ஆதிபோடந்தமாக எல்லா சமாச்சாரங்களையும் விஸ்தரித்துக் கூறுகிறார். அது எப்படி உருப்பெறுகிறது: எவ்விதம் வளர்கிறது: அந்த காலத்தில் எவ்வித போஜனத்தை உட்கொள்ளவேண்டும: எம்மாதிரியாக உடுக்கவேண்டும்: தனது அலுவல்களைக் கவனிக்கும் விதம் எவ்விதம்-இவற்றை எல்லாம் டாக்டர் மேரிக்குத் தெளிவுபடுத்துகிறார்.

இப்படத்தில் டாக்டர் கரு தரித்த ஸ்திரீ இயற்கைக்கு விரோதமாக, கருவைச் சிதைக்கச் செய்யும் முயற்சி எவ்வளவு கொடுமையான பாதகத்தைப் பண்ணும் என்பதைச் சுட்டிக் காட்டும் காட்சி மிகவும் முக்கியமானது. வயிற்றுக்குள் இருக்கும் சிசுவின் நாடி ஒலிப்பதும் மிகவும் திறமையுடன் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது.

இதில் குழந்தைப் பிறக்கும் தருணமும் எல்லாவற்றிற்கும் மேலான ஸ்வாரஸ்யக் காட்சி.

இந்தப் படத்தில் நடிப்புக்கு இடம் கிடையாதாயினும், மிகுந்த ஜாக்ரதையுடனும் சிரத்தையுடனும் தயாரிக்கப்பட்ட இப்படத்தை சிறுவர் தவிர மற்ற பெரியவர்கள் யாவரும் பார்க்க வேண்டியது அவசிய மாகும்.

* * * *

"ஸ்திரீயின் முகம்"

மெட்ரோ கோல்ட்வின் மேயர் தயாரித்த "ஸ்திரீயின் முகம்" (A womans face) என்ற படம் இம்மாதம் 31-ம்தேதி முதல் கஸினோவில் காட்டப்படும். மிகவும் ரசமான கதை. உயர்தர நடிப்பு. கடைசி வரை குன்றாத ஸ்வாரஸ்யம். இப்படத்தில் இவை யாவும் பொருந்தியுள்ளன.

அன்னுஹோம் (ஜோன் க்ராபோர்ட்) கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, கோர்ட்டு விசாரணையில் இருக்கிருள். பிறவி முதற் கொண்டே அவள் முகத்தில் தழும்புக் குறிகள் காணப்பட்டதால், அவளை ஒருவரும் ப்ரீதியுடன் வரவேற்பதில்லை. ஆகவே அவள் குற்றம் புரியவும் துணிந்துவிட்டாள். மானிட வர்க்கத்தையே அவள் வெறுத்தாள். டார்ஸ்டன் பாரிங் (கான்ரட் வீட்) மட்டும் அவளை அண்டுவது வழக்கம். ஒரு நாள் அன்னு டாக்டர் ஸெகார்ட் (மெல்வின் டக்ளஸ்)டைச் சந்திக்கிருள். அவர் ஒரு சஸ்திர சிகிச்சையால் அவளுக்கு மறுபடியும் பழைய அழகை சம்பாதித்துத் தருகிறார். இது நிற்க, பாரிங் அன்னுவை தன் பணக்கார மாமா வீட்டில் அவரது பேரப் பிள்ளையின் மேற்பார்வையாளராக நியமிக்க ஏற்பாடு செய்கிறன்: இந்த பேரப் பிள்ளை இறந்தால், பாரிங்குக்கு கிழவனரின் சொத்து பூராவும் கிடைக்கும். ஆகவே அன்னு அந்தச் சிறுவனைக் கொல்ல வேண்டு மென்பது பாரிங்கின் விருப்பம். காலக்ரமத்தில் அன்னு அந்தச் சிறுவனிடம் அத்யந்த ப்ரீதி கொள்கிறள்: ஆகவே கொல்ல மறுக்கிருள். இதனல் கோபமுற்ற பாரிங் தன்னுடன் வெளியே சிறுவனை அழைத்துப் போவதாகக் கூறிப் புறப்பட, அன்னு அவனது தீய எண்ணத்தை யறிந்து அவனுடன் சண்டை போடுகிருள். சிறுவனைக் காப்பாற்றும் காரணத்தால் பாரிங்கை அவள் கொல்ல நேரிடுகிறது: கோர்ட்டில் வழக்கு விசாரணைக்கு வந்த போது, அன்னுவின் பழைய வாழ்க்கையே முன் நிற்கிறது. ஆனல் கடைசியில் திடீரென்று எதிர்பாராது வந்த சாட்சியம் அவள் தப்புவதற்கு ஹேதுவாகிறது.

* * * *

இருபதாம் நூற்றாண்டு கம்பெனியார்

மேற்படி கம்பெனியாருக்காக டாரில் ஸானுக் சில உயர்தர படங்களைப் தயாரிப்பதில் முனைந்திருக்கிறார். அவை பொது மக்களுக்குத் திருப்தி அளிப்பவையாகவும் எல்லோரும் விரும்பத்தக்கவையாகவும் இருக்கும் என்று நாம் நிச்சயமாக எதிர் பார்க்கலாம்.

இந்த வருஷத்தில, சென்ற வருஷத்தில் தயாரித்ததைவிட மிகச் சிறந்தவையான எட்டு படங்களை அவர் தயாரிப்பார். இதற்காக அவர் ஏராளமாகப் பணம் செலவழிக்கவும் முன் வந்திருக்கிறார். டைரோன் பவர், பெட்டிக்ராபிள் நடிக்கும் "எ யாங்க் இன் ஆர். ஏ. எப்" (விமானப் படையில் ஒரு அமெரிக்கர்); கார்மன் மிராண்டா, ஆலிஸபே, ஜான் பெய்ன் நடிக்கும் இயற்கை வர்ண சங்கீதப் படம் 'வார்க்ரண்ட் இன் ஹவானு' (ஹவனுவில்விடு முறை); ஸோஞ்ஜா ஹெனி, ஜான் பெய்ன். நடிக்கும் மற்றொரு சங்கீத மயமான படம் "ஸன்வேலி ஸிரனேட்" ஹென்ரி பாண்டா ஜோன் பென்னட் நடிக்கும் காதல் வீர ரசங்கள் ததும்பும் "ஓயில்ட் கீஸ் காலிங"; லாரல் ஹார்டி நடிக்கும் "க்ரேட் கன்ஸ்" என்ற ஹாஸ்யம் மிகுந்த படம்; ஜின் டார்னி, ராண்டோல்ப்ஸ்காட் நடிக்கும் "பெல் ஸ்டார்" ஆகிய படங்களை அவர் தயார்செய்திருக்கிறார்.

"ஒரு ஸ்திரீயின் முகம்" என்ற படத்தில் நடிக்கும் ஜோன் க்ராபோர்ட்

இப்போது அவர் தயாரிக்கும் படங்கள் பின் வருபவை; பெட்டி க்ராபிள் விக்டர் மச்சூர் நடிக்கும் "ஸ்வாம்ப் வாடர்" என்ற படத்தில் அமெரிக்காவில் ராத்திரிப்பொழுது எப்படி கழிகிறது என்பது காட்டப்படுகிறது; டான் அமிச்சி நடிக்கும் "ஒப்புக்கொள், இல்லாவிட்டால் மறுத்து விடு" (Confirm or Deny) என்பது ரசமான கதை. இங்கிலாந்தில் மேற்படி கம்பெனியாரின் ஸ்டுடியோவில் ராபர்ட் டோனல்டும் பிர்லிங்

பிளாக்கர்ஸ் ரோட், மவுண்ட் ரோட்.

காஸினோ

போன்: 8476.

ஜன 31உ சனிக்கிழமை முதல் 1 வாரம்

தினசரி காட்சிகள் **2**

சனி, ஞாயிறுகளில் குறைந்த கட்டணத்தில் மாடினி பகல் 3-15.

ஜோன் கிராபோர்ட் ★ மெல்வின் டக்ளஸ் ★ கான்ரட் விட்

நடிக்கும்

A WOMAN'S FACE

இவ் வருஷத்திய சிறந்த படமென கிரிட்டிக்குகளால் கொண்டாடப்பட்டது.

அன்னு ஹோம் (ஜோன் கிராபோர்ட்) வாழ்க்கையிலேயே ஒரு சோதனை. பிறப்புமுதல் முக விகாரம் காரணமாக அனைவராலும் வெறுக்கப்பட்டாள். எனவே சமூகத்தையே அவள் வெறுத்தாள். டார்ஸ்டன் பாரிங் (கான்ரட் வீடட்) மட்டும் அவள் உறவை நாடினன். டாக்டர் செகார்ட் (மெல்வின் டக்ளஸ்)டை சந்திக்கிருள். அவரது சிகிச்சை முறை காரணமாக முக அழகை திரும்பப் பெறுகிருள். பாரிங் சிறிய தகப்பன் வீட்டில் அவரது பேரனை குழந்தையைப் பாதுகாக்க பாரிங்கால் நியமிக்கப்படுகிருள். அவனைக் கொன்றுவிட அவளுக்கு உத்திரவு. குழந்தையை அவள் நேசித்ததால் கொல்ல விரும்பவில்லை. பாரிங் குழந்தையை வெளியில் அழைத்துச்சென்று, எதிர்பாராவிபத்து நேர்ந்ததாகச் சொல்ல ஏற்பாடு செய்கிறன். அன்னு கூடச் செல்கிருள். குழந்தையைக் காக்க பாரிங்கை கொன்றுவிடுகிருள். அவளது முன் நடத்தை காரணமாக கோர்ட்டார் அவளை நம்பவில்லை. ஆயினும் எதிர்பாராத விதம் கிடைத்த சாக்ஷியம் காரணமாக அவள் விடுபடுகிருள்.

உணர்ச்சி மிகுந்த இக்காட்சியைப் பார்க்கத் தவருதீர்கள்.

"தி க்ரேட் கன்ஸ்" (20 நூற்றுண்டு பாக்ஸ்) என்ற படத்தில் ஷிலாரயனும் லாரலும் ஹார்டியும்

வேங்கைமுதலிய அடைபட்டிருக்கும் கூண்டுகளுக்குள் போய் நிற்பான் சமீபத்தில் கைப் பற்றப்பட்ட ஒரு ஓநாயையும் அவன் மிகுந்த திறமையுடன் பழக்கிவிட்டான். அதன் கழுத்தில் ஒரு பட்டையைப் போட்டு அவன் அதைத்தான் போகுமிடமெல்லாம் இழுத்துச் செல்வதும் வழக்கமாகியது.

ஒரு காட்டாற்றில் குதித்து, முதலைகளிடம் அகப்படக்கூடிய அபாயம் இருந்த சமயமும், அவன் தனக்காக வேறு ஒருவன் அந்தக் கட்டத்தில் நடிக்கக் கூடாதென்று உறுதியாகவே இருந்தான். சிறிதும் பயப்படாமல் நடித்தான் ஸாபு.

ஸாபுவின் நடத்தையும் இனிமையானது: உள்ளத்தில் உறைந்திருக்கும் விஸ்வாசமும் மஹத்தானது. கிருதக்களையும் எல்லையற்றது: வாழ்க்கையில் தடபுடல் அதிகம் கிடையாது: தேவைகளும் மிகுதியில்லை. தனக்கிருப்பதில் திருப்தி கொண்டவன். "ஸ்டேஷன் வாகன்' ஒன்று வாங்க அவனுக்கு அதிக ஆசை இருந்தது. அதுவும் சமீபத்தில் பூர்த்தி பெற்றது. இதில் ஏறிக்கொண்டு அவன் பக்ஷிகளைச் சுடப் போவது வழக்கம்.

படிப்பிலும் ஸாபுவுக்கு சிரத்தை அதிகரித்திருக்கிறது. அவனுக்கு பாடம் போதிக்க ஒரு தனி ஆசிரியர் அவனுடன் கூடவே இருக்கிறார். ஸாபுவுக்கும் அவன் சகோதரன் ஷேக்குக்கும் ஹாலிவுட்டில் அவர் பாடம் கற்பிக்கிறார். பிரதி தினமும் நான்கு மணி நேரம் படிப்புக்காக ஸாபு ஒதுக்கி வைக்கிறான்: படப்பிடிப்பு வேலையில் அப்போது மனதை விடுவதில்லை. பாஷா பரிச்சயம் சுலபமாக இருப்பதாகவும், ஆனால் கணித சாஸ்திரம் தான் கடினமாக விருப்பதாகவும் அவன் கருதுகிறான். வெகு விரைவில் அவன் ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி அடைந்து விட்டான்.

ஸாபுவுடன் பழகினால் அவனது சிநேகம் சுலபமாகக் கிட்டிவிடும். எப்போதும் அவனுக்கு புன்சிரிப்பு தான்: எவரிடமும் அன்புதான். வேடிக்கையாகவும் அவன் பேசுவான். குற்றமற்ற குறும்புகளிலும் அவனுக்கு ஆசை அதிகம். எவ்வளவு பெரிய மனுஷ்யராயிருந்தாலும் ஸாபு திகைப்பதில்லை. ஒயிட் ஹவுஸில் ஜனாதிபதி மனைவி மிஸஸ் ரூஸ்வெல்டுடன் தேநீர் அருந்திய போதும் ஸாபு கொஞ்சமாவது புது உணர்ச்சி காட்டவில்லை.

"மிஸஸ் ரூஸ்வெல்டுடன் பேசுவது எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. நான் செய்வதில் எல்லாம் அவர் சிரத்தைகொண்டது போல் எனக்குத் தோன்றியது" என்றான் ஸாபு. ஸாபு நேர்மையாக நடப்பவன்: ஊக்கமும் உற்சாகமும் அதிகம், பணத்தில் அக்கரை அதிகம் அவனுக்கு. வயது முதிர்ந்துவிட்டால் கஷ்டமின்றி வாழ வழி தேடாதவன் சுத்த பைத்தியக்காரன் என்பதே அவனது திடமான அபிப்பிராயம்,

* * * *

(பின்பக்கம் பார்க்க)

பொதுஜன கோரிக்கைக் கிணங்கி அடுத்த வாரத்திற்கும் நீடிக்கப்பட்டிருக்கிறது!

★

அலெக்ஸாண்டர் கோர்டாவின் அராபியக் கதை

★

'பக்தாத் திருடன்'

(Thief of Baghdad)

★

ஸாபு நடிக்கும் உன்னத படம். இயற்கை வர்ணம் அமைந்தது. பார்க்கத் தக்க காட்சிகள்: பார்த்தவர் அனைவரும் மறுமுறை வந்து பார்க்கின்றனர். ஆகவே பார்க்கத் தவறக் கூடாது!

தினசரி மூன்று காட்சிகள் மாலை 3, 6-15, இரவு 9-30.

நியூ எல்பின்ஸ்டன்

(போன்: நெ. 3206)



இப்படத்தின் பாட்டுகளை "கொலம்பியா" ரிகார்டுகளில் கேட்டு ஆனந்தியுங்கள்.

'ஹரிஜன்' கட்டுரை

ஆந்திரப் பிரதேசப் பிரிவினை

மஹாத்மா காந்தி கருத்து.

விஜயநகர் மஹாராஜ்குமார் விஜயானந்தர் ஆந்திரப் பிரதேசப் பிரிவினையைப்பற்றி மகாத்மாவுக்கு எழுதிய கடிதத்துக்கு மகாத்மா ஹரிஜன் பத்திரிகையில் கூறியுள்ள பதிலின் விவரமாவது:—

பாஷாவாரியாக மாகாணங்களைப் பிரிப்பதைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டதற்கு நான் தான் முக்கிய காரணம். அந்தப் பிரிவினை முறையைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென நான் எப்போதும் கிளர்ச்சி செய்து வருகிறேன்.

விஜயநகரம் மஹாராஜ்குமார் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"எங்களை தாங்கள் விரும்பவில்லையென்ற எண்ணம் ஆந்திரர்களாகிய எங்களிடையே பலமாக விருந்துவருகிறது. ஆந்திர மாகாணத்தைத் தனியாகப்பிரிப்பதையும் தாங்கள் விரும்பவில்லையெனச் சொல்லப்படுகிறது. ஆந்திர மாகாணத்தில் காங்கிரஸ் பற்று அதிகமாக விருந்தும் தாங்கள் அதை ஆசீர்வதிக்கவில்லை, 3 கோடி மக்கள் தனி மாகாணம் ஏற்படுத்தும்படி அதிகமாக ஆசைப்படுகையில் அந்த யாவத்தைத் தான் செய்யும்படி (ஒருதரம் திலகர் கூறியதுபோல)த் தாங்கள் அநுமதிக்கக்கூடாதா? எனது தேசத்தினர் தாங்கள் அவர்கள் விஷயத்தில் விருப்பம் கொண்டில்லையென்றே கருதுகிறார்கள். ஆந்திரப் பிரதேசப் பிரிவினைக் கிளர்ச்சியைக் கைவிடும்படிச் சொல்லவே தாங்கள் காசிக்கு வந்ததாகவும் அவர்கள் எண்ணுகிறார்கள். ஆந்திரர்களைப்பற்றித் தாங்கள் எப்போதாவது தமிழ் நாட்டினருக்கு ஏதாவது யோசனை சொல்லியிருக்கிறீர்களா என்பது தெரியவேண்டும். தாங்கள் என்ன யோசனை கூறினீர்கள். கர்நாடகம் கேரளம், ஆகியவற்றைப் பிரிக்கும் கிளர்ச்சியையும் ஆந்திரப் பிரிவினைக் கிளர்ச்சியையும் ஒன்று சேர்த்துவிட்டீர்களா? அவ்விரண்டு பிரதேசங்களுக்கும் தனிப் படுத்துவதற்கான வருமானம் போதியபடியில்லை. ஆந்திரர் காங்கிரஸிடம் அதிக பற்றுகொண்டிருந்தும் ஒரிஸ்ஸாவுக்குக் கிடைத்த நன்மையும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஸைமன் கமிஷன் வந்திருந்தபோது ஆந்திரர்கள் வேறு விதமாக நடந்திருந்தால் அவர்கள் மனப்படி காரியம் நடந்திருக்கும்."

இதற்கு மகாத்மா அறிவித்திருக்கும் பதிலாவது:—

மகாராஜ குமார் மிகத் தவறான கோஷ்டிக்கு உட்பட்டு விட்டாரென்றே சொல்லவேண்டும். பாமரர்களைச் சமாளிக்கும் விஷயத்தில் இவர் புதுப் பேர்வழி யாதலால் தமக்கு விஷயம் சொல்லுகிறவர்கள் எவ்வளவு பொறுப்பு வாய்ந்தவர்களென்பதை அவர் விசாரிக்கவில்லை. அவருக்குத் தகவல் கொடுத்திருக்கும் ஆந்திரர்கள் யார் என்பதையும் நான் அறிய விரும்புறேன். ஆந்திர தேசத்திற்கு நான் அன்னியனல்ல. தேசபக்த கொண்டா வெங்கடப்பையா, ஸ்ரீ பிரகாசம், டாக்டர் பட்டாபி சீதாராமையா, ஸ்ரீ காளேஸ்வரராவ், ஸ்ரீ சீதாராம் சாஸ்திரி ஆகியோர்களை அவரே கேட்டுக் கொள்ளலாம். பாஷாவாரியாக மாகாணங்களைப் பிரிப்பது சம்பந்தமாக காங்கிரஸ் அங்கிகாரத்தைப் பெற நானே முக்கிய காரணஸ்தரென்பதை அவர்கள் நிரூபணம் செய்வார்கள். அத்தகைய திருத்தியமைப்பை சர்க்கார் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று நான் ஆதி முதல் கிளர்ச்சி செய்திருக்கிறேன். இது சம்பந்தமாக யோசனை கேட்டபோது, ஆந்திரக் கோரிக்கையை எதிர்க்கக் கூடாதென்று தமிழ் நாட்டுக்கு நான் யோசனை கூறியிருக்கிறேன். ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியாரின் தலைமையிலிருந்த காங்கிரஸ் மந்திரி சபை ஆந்திர தேசத்தைத் தனி மாகாணமாக அங்கீகரிப்பதற்கான முயற்சி எடுத்துக்கொண்ட தென்பது எனக்குத் தெரியும். அவ்விதம் அது இதுவரை அங்கீகரிக்கப் படாதது மந்திரிசபையின் குற்றமல்ல. ஆனால் கர்னாடகம், கேரளம், ஆந்திராவுக்குமே அல்லது தனி மாகாணமென்று காங்கிரஸால் அங்கீகரிக்கப்பட்ட எந்த மாகாணம் சம்பந்தமாகவோ, எனக்கு யாதொரு வித்தியாசமும் கிடையாதென்பதுஉண்மை, பந்தாட்டப் பயிற்சி மகாராஜ குமாருக்கு அதிகமாகையால் கட்சி நியாயம் இன்னதென்பதை அவர் அறியவல்லவர். அவரைப் பற்றிக் கூறப்படும் ஆதாரமற்ற புகார் அல்லது குறைகளைப் பற்றி அவர் மனக்லேசமடையக் கூடாது. மகாத்மாவாயிருந்தாலும் சரி அவரது வார்த்தையை ஒருவர் கேட்டு தனது கொள்கையினின்றும் மாறுவாரானால் அவர் தலைவராக இருக்கத் தகுதியுடையவரல்ல. இந்தப் பதில் அவரைக் கேள்வி கேட்கும்படி தூண்டி வஞ்சித்தவர்களுக்குத் திருப்தியளிக்காவிட்டாலும் மகாராஜ் குமாரருக்குத் திருப்தியளிக்குமென்று நம்புகிறேன்.

* * * *

(முன் பக்கத் தொடர்ச்சி)

"பாக்ஸ்" படங்கள்

புரொடக்ஷன் மானேஜர் மிஸ்டர் வில்லியம் கோனிக் முயற்சி காரணமாக இருபதாம் நூற்றண்டு பாக்ஸ் கம்பெனி பல உயர்தர படங்களைத் தயாரிப்பதில் தீவிரமாக இருந்து வருகிறது. சென்ற வருஷம் டிசம்பர் மாதம் பூர்த்தியாவதற்குள் படம் பிடிக்க வேண்டி இக் கம்பெனி போட்டுக் கொண்ட திட்டம் இதற்கு முந்திய 5-வருஷ காலத்திலும் மும்முரமாக இருந்ததில்லை. "ராக்ஸி ஹார்ட்," "யூ கான்ட் ஆல்வேஸ் டெல்," "ரிங்ஸ் ஆன் ஹர் பிங்கர்ஸ்," "திஸ் அவல் ஆஸ்," "மூன்டைட்," "டாம்மி இன் யு. எஸ், எ," "ஓவர் தி பர்மா ரோட்" என்ற படங்கள் தயாராகின்றன,

* * * *

மகத்தான படம்!

'மான்ஹாட்டன் கதைகள்' என்ற படத்தை பிடிக்க இருபதாம் நூற்றுண்டு பாக்ஸ் கம்பெனியார் ஏற்பாடு செய்திருக்கின்றனர். இந்தப் படம் பல கதைகள் கொண்டதாகும். இதில் அநேகம் பிரபல நடிகர்கள் தோன்றுகின்றனர். சார்லஸ் போயர், ரீடா ஹேவர்த், ஜிஞ்ஜர் ரோஜர்ஸ், ஹென்ரி பாண்டா, தாமஸ் மிச்சல், சார்லஸ் லாட்டன், எப்ஸா லாஞ் செஸ்டர், விக்டர் ப்ரான்ஸென், எட்வர்ட் ராபின்ஸன், டபிள் யு. ஸீ. பீல்ட்ஸ், பால் ரோப்ஸன் முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

* * * *

க்யூபாவின் அழைப்பு

க்யூபா ஸர்க்கார் அத் தேசத்தை அந்நிய ஆதிக்கத்திலிருந்துவிடுவித்த ஜோஸ் மார்டி என்பவரின் உருவச் சிலையைத் திறந்து வைக்கும்படி பிரபல நடிகரான ஸீஸர் ரமிரோவுக்கு அழைப்பு அனுப்பியிருக்கின்றனர்: இதற்குக் காரணம் ரமிரோவின் தாயாரிடம் மார்டி மிகுந்த ப்ரீதி காட்டினார் என்பதே.

ரமிரோ "ஜெண்டில்மன் அப் ஹார்ட்" என்ற படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் போது, பாக்ஸ் கம்பெனி ஸ்டுடியோவுக்கு, பாப்லோ அல்வாரஸ் டிகானஸ் நேரில்வந்து,அவரிடம் க்யூபா ஸர்க்காரின் அழைப்பை சமர்ப்பித்தார். அதே சமயத்தில் டிகானஸ், ரமிரோ அவரது தாயார் மேரியா மாண்டில்லா ரமிரோ ஆகிய இருவர்களது படங்களும் தமக்கு வேண்டுமென்றும் கோரி, இவை சிலையின் பீடத்தில் இரு புறமும் வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

க்யூபா தேசபக்தர் ஜோஸ் மார்டி ரமிரோவின் தாய் வழிப் பாட்டனார் வீட்டில் 16 வருஷ காலம் தங்கியிருந்தார். ஸ்பெயினுக்கும் அமெரிக்காவுக்கும் நடந்த யுத்தத்தில் அவர் உயிரிழக்க நேரிட்டது.

இந்த தேசபக்தரின் ஞாபகார்த்தங்கள் அநேகம் ரமிரோவின் தாயார் வசம் இருந்தன. ஸ்பெயினில் கைதியாயிருந்த போது மார்டிக்கு அணிவிக்கப் பட்ட இரும்புச் சங்கிலி இவற்றில் ஒன்று, அப்போது மார்டியின் வயது 16: அவர் சட்ட மாணவராக இருந்தார்,

* * * *

டைரோன் பவர்

டைரோன் பவர் அடுத்தபடி நடிக்கும் படத்தில் அவர் மீசைதாடியை அதிகம் வளர்த்திருப்பது அவருடைய அபிமானிகளுக்கு பார்க்க புது மாதிரியாயிருக்கும். டாரில் ஸனுக் தயாரிக்கும் "ஸன் அப் ப்யூரி" என்ற படத்தில் சரித்திரத்தை யொட்டி படம் பிடிப்பதா அல்லது இஷடப்படி செய்வதா என்பது பற்றி ஸ்டுடியோ அதிகாரிகளிடையே. தர்க்கம் நடந்தது, இந்த விவாதத்திற்குக் காரணமும் இதுதான், முன்பு "ஸூவேஸ்" படத்தில் நடித்த போது டைரோன் பவர் மீசையை வளர்த்திருந்ததை அநேக அபிமானிகள் கண்டித்தெழுதினர்.

ஆனல் இந்தப் படத்தில் மீசை தாடி நீளமாக வளர்க்க டைரோன் பவர் முடிவு செய்திருக்கிறார்: ஜீன் டார்னியுடன் காதற் கட்டங்களில் நடிக்கும்போது அவர் க்ஷவரம் செய்து கொள்வார், ஆனல் கடற்கொள்ளைக்காரன் என்ற வேஷத்திற்கேற்ப இதர சமயங்களில் மீசை தாடியுடன் தான் அவர் இருப்பார். 1800-ம் வருஷத்தில் மாலுமிகள் க்ஷவரம் செய்துகொண்டது கிடையாது.

* * * *

கோவை வைஸ்யபூஷண ஸ்ரீ பி ஏ. ராஜு செட்டியார் குமாரன் ஸ்ரீ ஆர். க்ருஷ்ணனுக்கும், சேலம் ஸ்ரீ எஸ். என். பத்மநாப செட்டியார் குமாரி ஸ்ரீ லலிதாதேவிக்கும் விவாகம் நடந்தது.



"கெமிகம்"

★

'கெமிகம்' என்ற செயற்கை ரப்பர் தயாரிப்பு முறை இப்போது 'குட் இயர்' அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது: பெட்ரோலியத்திலிருந்து இது உற்பத்தி செய்யப்படுகிறது: இந்த முறையால் இனி அதிக நன்மை ஏற்படும். "கெமிக"த்தினல் செய்யப்பட்ட மோட்டார் கார் டயர்கள் சாதாரண ரப்பரால் செய்யப்பட்டதற்கு சமமாகவே இருக்கின்றனவாம்.









"கெமிகப்" தயாரிப்பு முறைகள்

1. இயற்கை ரப்பர் தயாரிப்பு வேலை ஆரம்பிக்கிறது. ரஸாயனப் பொருள்களை ஒரு தொட்டிக்குள் ஊத்தும் காட்சி. 2. பெட்ரோலியமும ரஸாயனப் பொருள்களும் ஒன்றுபட்டதால் பால் போன்ற திரவ பதார்த்தமும் பின்பு ஒருவித கட்டியான வஸ்துவும் கிடைக்கின்றன. இந்தப் படத்தில் யந்திர மூலம் அந்த வஸ்து சுத்தப்படுத்தப்படுகிறது: இது தான் 'கெமிகம்'. 3. பிறகு இந்த 'கெமிகம்' உதிர் உதிராக்கப்படுகிறது: இதற்குக் காரணம் இது சீக்கிரம் காய்ந்துவிடும் என்பதே. 4. அடுத்தபடி 'கெமிகம்' ஒரு பெரிய அகலமான கூடையில் கொண்டு குவிக்கப்படுகிறது. அதில் சேர்ந்திருக்கும் ஜலம் இதனல் உலர்ந்துவிடுகிறது. 5. இரண்டு இரும்பு உருளைகளின் இடை 'கெமிகம்' கொட்டப்படுகிறது. எந்த அளவு பருமன் வேண்டுமோ அவ்வளவு பருமன் கொண்ட தகடுபோல் அது செய்யப்படுகிறது. இதற்கப்புறம் இது பலவிதமாகவும் உபயோகப்படுத்தப்படுகிறது.

Regd. No. 2514

ஸ்ரீமான்

ஏ. எஸ். பஞ்சாபகேச அய்யர்,

M. A., I. C. S., F. R. S. L.

எழுதியவைகள்

இங்கிலீஷ் ★

Two Plays of Bhasa	1	8
The Finger of Destiny & Other Stories	**1**	**0**
Kovalan : Kannagi	**1**	**0**
Three Famous Tales	**0**	**10**

தமிழ் ★

இந்தியனது மேனுட்டு அநுபவம்	4	0
முப்பெரு வீரர்	2	0
பழைய நீதிக்கதைகள்	1	4
முப்பெருங்காதை	0	12
கோவலன்—கண்ணகி	0	12
பேய்ப் பித்து (நாடகம்)	0	10
தாயின் தியாகபுத்தி	0	8
விதியின் கூறு	0	6
கயால்தாஸ்	0	6

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும், கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C.R. Srinivasan, B. A.